★
REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஜூலை 17 திங்கட்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 167 | Monday 17, July, 2023 | 16 பக்கங்கள் | 50/-

**போத்தல் மூடி தொண்டையில் இறுகி**

## ஒன்றரை வயது குழந்தை மரணம்

*அக்குரஸ்ஸ மத்திய விசேட நிருபர்*



தலஹாகம, அக்குரஸ்ஸ பகுதியிலுள்ள வீடொன்றில் ஒரு வயதும் 15 மாதக் குழந்தையொன்று சிறிய குப்பியொன்றின் 06

## எதிரணியின் குற்றப் பிரேரணை சவாலுக்கு முகம் கொடுக்க தயார்

**பயந்து தப்பியோடும் நபர் நானல்ல**



எதிர்க்கட்சிகள் கொண்டு வர உத்தேசித்துள்ளதாக கூறப்படும் குற்றப்பிரேரணைக்கு முகம் கொடுக்க தான் தயாரென சுகாதார அமைச்சர் கெஹெலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

சவாலுக்கு பயந்து பொறுப்பிலிருந்து விலகி தப்பியோடும் நபர் தான் அல்லவெனவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன குண்டசாலை தொகுதி குழுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே நேற்று (16) அமைச்சர் இதனை தெரிவித்தார். சுகாதாரத்துறை 06

**கண்டி, பேராதனை வைத்தியசாலைகளில்**

## Ceftriaxone மருந்தின் பயன்பாடு தற்காலிகமாக இடைநிறுத்தம்

**Dr.அசேல குணவர்த்தன தெரிவிப்பு**

வயிற்று வலி காரணமாக பேராதனை போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வந்தபோது மரணமான 21 வயதான யுவதிக்கு வழங்கப்பட்ட Ceftriaxone மருந்தின் பயன்பாடு கண்டி மற்றும் பேராதனை வைத்தியசாலைகளில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. உயிரிழந்த யுவதிக்கு வழங்கப்பட்ட மருந்து கண்டி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த இரண்டு நோயாளர்களுக்கு வழங்கப்பட்டமையால் 06

**பௌத்த இந்து ஒற்றுமைக்கு சிலர் குந்தகம்;**

## நீதிக்கு சவால் விடும் வகையில் குருந்தூர் மலையில் சிலரது செயல்

**தமிழ் மக்களை வழிபடாது தடுத்தமை கவலையான விடயம்**



நீதித்துறைக்குச் சவால் விடும் வகையிலும் குருந்தூர் மலையைச் சிலர் பயன்படுத்த முற்படுகின்றனர். இது நாட்டுக்கு அவமானத்தை ஏற்படுத்தும் செயலென நீதி அமைச்சர் விஜேயதாச ராஜபக்ச தெரிவித்தார். குருந்தூர்மலையில் 06

**சுகாதார அமைச்சு மீதான குற்றச்சாட்டுகள்**

# முழுமையான விசாரணைக்கு ஐவரடங்கிய குழு நியமனம்

**அமைச்சர் கெஹெலிய இன்று திங்கட்கிழமை நியமிப்பார் என பணிப்பாளர் Dr.அசேல குணவர்த்தன தெரிவிப்பு**



அரசாங்க வைத்தியசாலைகள் சிலவற்றில் கடந்த சில மாதங்களாக நிகழ்ந்த மரணங்கள் தொடர்பில் சுகாதார அமைச்சு மீது குற்றச்சாட்டுகள் மற்றும் விமர்சனங்களும் எழுந்துள்ளன. அனைத்து மரணங்கள் தொடர்பாகவும் முழுமையான விசாரணையை மேற்கொண்டு அறிக்கையொன்றை பெறுவதற்காக ஐவரடங்கிய குழுவொன்றை சுகாதார அமைச்சரால் இன்று திங்கட்ழமை நியமிக்கப்படுமென சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்த்தன தெரிவித்தார்.

மருந்துகள் தொடர்பாகவும் ஒவ்வாமை தொடர்பாகவும் வைத்திய மற்றும் தாதியர் எனும் இரண்டு பிரிவுகள் தொடர்பாக விரிவான அறிவும் புரிதலுமுள்ள பேராசிரியர்கள் உள்ளிட்ட ஐந்து பேரைக் கொண்ட நிபுணர்கள் இக்குழுவில் இடம் பெறுவார்களென்றும் அரசாங்க வைத்தியசாலைகளில் ஏற்படும் சர்ச்சைக்குரிய மரணங்கள் குறித்து பூரண ஆய்வு செய்து அமைச்சருக்கு இக்குழுவினர் அறிக்கை சமர்ப்பிப்பரென்றும் அவர் கூறினார்.

பேராதனை போதனா வைத்திய சாலை, பேராதனை சிறிமாவோ பண்டாரநாயக்க விசேட சிறுவர் வைத்தியசாலை மற்றும் கண்டி தேசிய வைத்தியசாலை என்பவற்றுக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு அவற்றின் பணிப்பாளர்கள், நிர்வாக அதிகாரிகள் மற்றும் 06

## கதிர்காமம் பூமியில் கடம்ப மர நடுகை



முருகப் பெருமானுக்கு உரியது எனச் சங்கப்பாடல்களில் தெரிவிக்கப்பட்டு புனிதமாக கருதப்படும் கடம்ப மரத்தை பாதுகாத்தல், வளர்த்தல் மற்றும் விரிவுபடுத்தல் என்ற தேசிய திட்டத்தின் ஒருபடியாக வரலாற்று சிறப்புமிக்க கதிர்காமம் புனித பூமி பிரதேசத்தை மையப்படுத்தி கடம்ப மரக் கன்றுகள் நடும் தேசிய விசேட வேலைத்திட்டம் நேற்று (16) காலை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபை அதிகாரிகள் உட்பட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.



02

**ஜனாதிபதியுடன் TNA அடுத்த சுற்று பேச்சுக்கு தயாராகிறது**

**நாளை இடம்பெறும் என்கிறார் சாணக்கியன்**

**சக இனத்தை எதிர் நிலைப்படுத்தும் அரசியலால்**

## தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைக்கப்போவதில்லை

**அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்து**




வாக்கு வேட்டைக்காக இனத்துவ நிலைப்பட்டு மக்களை சிந்திக்கத் தூண்டுவதன் மூலம் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடப் போவதில்லையென யாழ்,கிளிநொச்சி மாவட்டங்களின் அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழுவின் தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

ஏ32 பிரதான வீதியில் பல்லவராயன் கட்டு வேரவில் வரையான வீதி புனரமைப்புக்காக நேற்று ஏற்பாடு செய்யப் பட்டிருந்த அங்குரார்ப்பண நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இவ்வீதியினூடான தனது பயணத்தின் பட்டறிவு அனுபவங்களை நினைவு கூர்ந்து உரையாற்றிய அமைச்சர் மேலும் தனது உரையில், 06

## Online மூலமாக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்போர் அதிகரிப்பு

**ஒரு மாதத்துள் 29,578 விண்ணப்பங்கள்**



ஒன்லைன் மூலமாக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிப்போரின் தொகை அதிகரித்து வருவதாக குடிவரவு குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது.

அந்த வகையில் கடந்த ஒரு மாத காலத்தில் 29 ஆயிரத்து 578 பேர் கடவுச்சீட்டுக்காக ஒன் லைன் மூலம் விண்ணப்பித்துள்ளதாகவும் 06

**நாட்டில் வாகன விபத்துக்களில்**

## ஆறு மாதங்களில் 1,202 பேர் பலி



*லோரன்ஸ் செல்வநாயகம்*

இந்த வருடத்தின் கடந்த ஆறரை மாத காலத்தில் வாகன விபத்துகளினால் 1202 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. 06

## கீரிமலை நகுலேஸ்வர ஆதீனகர்த்தா மறைவு

**98ஆவது வயதில் இறையடி சேர்ந்தார்**



ஈழத்தின் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வர ஆலயத்தின் ஆதீனகர்த்தா ராஜராஜஸ்ரீ நகுலேஸ்வரக்குருக்கள் (வயது 98) இறையடி எய்தினார். கடந்த 15ஆம் திகதி காலமான அவருடைய இறுதி 06

## மலையக தமிழருக்கு தனித்துவமான இன அடையாளம் மிக அவசியம்

**எக்காரணம் கொண்டும் விட்டுக்கொடுக்கக் கூடாது**



மலையக தமிழர் கள் தமக்கான இன அடையாளத்தை விட்டுக்கொடுக்கக் கூடாது, எனவே, சனத்தொகை கணக்கெடுப்பின்போது தம்மை இந்திய வம்சாவளி மலையக தமிழர்கள் என்றே அடையாளப்படுத்த வேண்டும். இது தொடர்பான பிரச்சாரத்தை தெளிவுபடுத்தலை மக்கள் மத்தியில் ஏற்படுத்த வேண்டிய பொறுப்பு இளைஞர்களுக்கு உள்ளதாக இ.தொ.கா.பொதுச்செயலாளரும், நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு 06

**யாழ். நல்லூர் திருவிழாவை முன்னிட்டு**

## கல்கிஸ்சையிலிருந்து KKS வரை விசேட சிறப்பு ரயில் சேவை

**ஆகஸ்ட் முதலாம் திகதியிலிருந்து ஆரம்பமாகிறது**



யாழ்ப்பாணம், நல்லூர் திருவிழாவை முன்னிட்டு கல்கிஸ்சையிலிருந்து காங்கேசன்துறை வரை விசேட ரயில் சேவை ஆகஸ்ட் 01 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது. இந்த சிறப்பு ரயில் சுமார் மூன்று வாரங்களுக்கு இயக்கப்படுமென்றும், பொதுமக்களின் தேவையைப் பொறுத்து 06

## Port City க்குள் செயற்கை கடற்கரை திறப்பு



படம்: சுலோச்சன கமகே

கொழும்பு துறைமுக நகர வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட செயற்கை கடற்கரை பொது மக்களின் பாவனைக்காக நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்று முதல் இந்த செயற்கை கடற்கரையை நாட்டு மக்களுக்கும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளுக்கும் இலவசமாக பார்வையிடும் வாய்ப்பு வழங்கப்பட்டது. இந்த கடற்கரை சுமார் மூன்றரை கிலோமீட்டர் நீளம் கொண்டுள்ளது. செயற்கை கடற்கரைக்கு மேலதிகமாக அதற்கு அருகில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உணவுகளுடன் கூடிய உணவு விற்பனை வளாகமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.



02

**யாழ். பல்கலை மாணவன் வீட்டினுள் சடலமாக மீட்பு**



02

**மருந்து வகைகளின் தரம் குறித்து தீர்மானிக்க தொழில்நுட்பக்குழு**

**அதன் மூலமே சாத்தியம்**

## நாட்டின் நிதி நிலைமை வங்குரோத்து நிலையில்

**ஆராய எதிர்க்கட்சியின் குழு அமைப்பு**



நாட்டின் வங்குரோத்து நிலைமைக்கான காரணங்களைக் கண்டறிய சபாநாயகரால் நியமிக்கப்பட்ட குழுவுக்குப் பதிலாக எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களின் பங்களிப்புடன் மாற்றுக் குழுவொன்றை 06

**மாகாண சபை நடைமுறைக்கு**

## இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும்

**சமத்துவக் கட்சி தலைவர் தெரிவிப்பு**



இலங்கையில் மாகாண சபை முறைமையை நடைமுறைப்படுத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென சமத்துவ கட்சியின் தலைவர் சந்திரகுமார் தெரிவித்துள்ளார். தந்தை செல்வா அறக்கட்டளை நிலையத்தில் 06

## ஆசிய 'வூஷு' போட்டியில் இலங்கைக்கு தங்கப்பதக்கம்

**தமிழ் இளைஞன் சுதாகரன் சாதனை**



ஆசிய 'வூஷு' (WUSHU) சண்டைப் பயிற்சி விளையாட்டுப் போட்டியில் இலங்கையின் கம்பளை தமிழ் இளைஞரொருவர் தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். தாய்லாந்தில் கடந்த 11ஆம் திகதி 06

2

தினகரன் விளம்பரம்
0112429367

விற்பனை பிரிவு
0112429444,
0112429378

ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஜூலை 17 திங்கட்கிழமை

# தினகரன்

THINAKARAN

**தொழுகை நேரம்**

சுபஹ் - 04.39
ளுஹர் - 12.17
அஸர் - 03.44
மஃரிப் - 06.32
இஷா - 07.48

**இன்றைய சுபதினம்**

சோபகிருது வருடம் ஆடி 01

ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சஷ்டி



சப்ரகமுவ மாகாண ஆளுநர் நவின் திசாநாயக்க இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயை சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார். கடந்த (14) வெள்ளிக்கிழமை இச்சந்திப்பு இந்திய இல்லத்தில் நடைபெற்றுள்ளது. இச்சந்திப்பின் போது, சப்ரகமுவ மாகாணத்தின் எதிர்கால அபிவிருத்தி திட்டங்கள் குறித்தும் கலந்துரையாடியுள்ளார்.

(படம். காவத்தை தினகரன் விசேட நிருபர்)

# இலங்கை - நியூசிலாந்து உறவில் புதியதோர் அத்தியாயம் ஆரம்பம்

### கொழும்பில் நியூசிலாந்து உயர்ஸ்தானிகராலய திறப்பு நிகழ்வில் பிரதமர் தினேஸ் தெரிவிப்பு

நியூசிலாந்தின் இராஜதந்திர தூதுக்குழுவொன்றை இலங்கையில் நிறுவுவதன் மூலம் நடைமுறை மற்றும் அர்த்தமுள்ள வகையில் ஒத்துழைப்பை முன்கொண்டு செல்லவேண்டியதன் முக்கியத்துவத்தை ஏற்றுக்கொள்வதாக பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்தார்.

இலங்கைக்கான நியூசிலாந்து உயர் ஸ்தானிகராலயத்தை கொழும்பில் (14) உத்தியோகபூர்வமாக திறந்துவைத்து கருத்துத்தெரிவிக்கும் போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

இந்த நாட்களில் மடாரிகி அல்லது மாஒரி நியூசிலாந்து புதுவருட கொண்டாட்டம் நடைபெறுவது ஒரு சுபசெய்தியாகும் என்றும், ஆரம்பமாக பொருளாதார, வர்த்தக மற்றும் முதலீட்டு பங்காண்மையை முன்கொண்டு செல்வதன் அடிப்படையில் இரு நாடுகளுக்கு இடையே அனைத்து துறைகள் ஊடாகவும் பலமான உறவை ஏற்படுத்திக்கொள்வதற்கு இந்த நடவடிக்கை உதவுமென பிரதமர் தெரிவித்தார்.

இலங்கையும் நியூசிலாந்தும் ஆசிய பசுபிக் வலயத்தில் பழமைவாய்ந்த பாராளுமன்ற ஜனநாயக நாடுகளாகும் என்பதுடன், 1931 முதல் இரண்டு நாடுகளுக்கும் சர்வஜன வாக்குரிமை கிடைக்கப்பெற்றமையை சுட்டிக்காட்டிய பிரதமர், 1951ஆம் ஆண்டு மகரகம பல் வைத்திய கல்லூரி மற்றும் 1956ஆம் ஆண்டுதேசிய பால் சபை என்பவற்றை தாபிப்பதற்கு உதவியமைக்காக நியூசிலாந்துக்கு நன்றி தெரிவித்தார்.

06



# தடை செய்யப்பட்டிருந்த ஐந்து இஸ்லாமிய அமைப்புகள் தடைகள் கடும் நிபந்தனைகளுடன் தற்காலிக நீக்கம்

### செயற்பாடுகள் தொடர்ந்தும் புலனாய்வுப் பிரிவின் கண்காணிப்பில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதலில் பின்னர் தடை செய்யப்பட்டிருந்த ஐந்து இஸ்லாமிய அமைப்புகள் கடும் நிபந்தனைகளுடன் தற்காலிக தடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதலின் பின்னர் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் 2021 ஆம் ஆண்டு வர்த்தமானி மூலம் 11 இஸ்லாமிய அமைப்புகளை தடை செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது.



2019 ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி நடைபெற்ற ஈஸ்டர் ஞயிறு குண்டுத் தாக்குதலின் பின்னர் அது தொடர்பான விசாரணைகளுக்காக 11 இஸ்லாமிய அமைப்புகளை தடை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் பின்னர் புலனாய்வுப் பிரிவின் விசேட குழு மூலம் இந்த அமைப்புகளின் செயற்பாடுகள் கண்காணிக்கப்பட்டுள்ளன.


அதற்கிணங்க ஜம் இய்யத்துல் அன்சாரி சுன்னத்துல் மொகமதியா, ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாத், அகில இலங்கை தவ்ஹீத் ஜமாத், லங்கா தவ்ஹீத் ஜமாத், மற்றும் ஐக்கிய தவ்ஹீத் ஜமாத் ஆகிய அமைப்புகளுக்கான தடைகளே நீக்கப்பட்டுள்ளன

06

# ஜனாதிபதியுடன் TNA அடுத்த சுற்று பேச்சுக்கு தயாராகிறது

### நாளை இடம்பெறும் என்கிறார் சாணக்கியன்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையிலான மேலும் ஒரு பேச்சு வார்த்தை விரைவில் நடைபெறவுள்ளது.

இந்த பேச்சு வார்த்தை நாளை செவ்வாய்க்கிழமை பாராளுமன்ற கட்டிடத்தில் இடம்பெறலாம் என எதிர்பார்ப்பதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

வடக்கு, கிழக்கு தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தேசிய பிரச்சினைக்கான தீர்வு தொடர்பில் இதற்கு முன்னர் ஜனாதிபதிக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் இடையில் பல பேச்சு வார்த்தைகள்

06

# கோழி இறைச்சியின் விலை குறைந்தது

### ஒரு Kgக்கு ரூ. 200 குறைப்பு



ஒரு கிலோ கோழி இறைச்சியின் மொத்த விலை 200 ரூபாவினால் குறைந்துள்ளதாக அகில இலங்கை கோழி இறைச்சி வியாபாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி ஒரு கிலோ கோழி இறைச்சியின்

06

# மற்றுமொரு உரத்தையும் விவசாயிகளுக்கு இலவசமாக வழங்க அரசாங்கம் தீர்மானம்

### அடுத்த பெரும்போகத்தில் வழங்கப்படும்

**லோரன்ஸ் செல்வநாயகம்**



எதிர்வரும் பெரும்போகத்தில் நெற்பயிர்ச்செய்கைகளில் ஈடுபடும் விவசாயிகளுக்கு மேலும் ஒரு வகை உரத்தை இலவசமாக வழங்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார். அவ்வாறு விவசாயிகளுக்கு இலவசமாக உரத்தை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் தாம் முக்கியமான பேச்சு வார்த்தையொன்றை மேற்கொண்டுள்ளதாகவும் அந்த பேச்சு வார்த்தையில் சாதகமான பதில் கிடைத்துள்ளதாகவும் அமைச்சர்

06

# யாழ். பல்கலை மாணவன் வீட்டினுள் சடலமாக மீட்பு

**பருத்தித்துறை விசேட நிருபர்**



யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாக மாணவன் ஒருவன் தனது வீட்டில் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையைச் சேர்ந்த புஸ்பராசா எழில்நாத் (வயது – 22) என்ற கிளிநொச்சி அறிவியல் நகர் பல்கலைக்கழக மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

கையடக்க தொலைபேசியில் இணையவழி விளையாட்டுக்கு அடிமையானதாலேயே இவர் தவறான முடிவெடுத்து உயிரிழத்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவர் இடைவிடாது இவ்வாறு இணையவழியூடாக விளையாடிவருவதாகவும் பெற்றோர் தெரிவித்துள்ளனர்.

06

# மருந்து வகைகளின் தரம் குறித்து தீர்மானிக்க தொழில்நுட்பக்குழு

### அதன் மூலமே சாத்தியம் என்கிறார் Dr. சமல் சன்ஜீவ



தரமற்ற தடுப்பூசி மற்றும் மருந்துகள் காரணமாகவே நோயாளர் மரணிக்கிறார்களா? என்பது தொடர்பில் கண்டறிவதற்காக தொழில்நுட்ப குழுவொன்றை அமைத்து இக்குழுவின் அறிக்கையின் அடிப்படையிலேயே உண்மையைக் கண்டறியவேண்டுமே தவிர ஊடக சந்திப்புகளூடாக அல்ல என வைத்திய தொழில் சங்க கூட்டணியின் தலைவர் விசேட வைத்திய நிபுணர் சமல் சஞ்ஜீவ தெரிவித்தார்.

அத்துடன் தற்போது வரை சில நோயாளர் குறிப்பிடத்தக்க அளவில் நியாயமற்ற முறையில் மரணித்திருப்பதை சாதாரணமாக கருத

06

# பொதுஜன பெரமுன எத்தகைய சவாலுக்கும் அஞ்சியோடும் கட்சியல்ல

### அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



பொதுஜன பெரமுன எத்தகைய சவாலுக்கும் அஞ்சியோடும் கட்சியல்ல என அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

இனிமேலும் தமது ஆதரவாளர்களுக்கு எவராவது அச்சுறுத்தல் விடுத்தால் அவர்கள் வட்டியுடன் நட்டஈட்டை செலுத்த நேரிடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பொதுஜன பெரமுன கட்சியின் மினுவாங்கொடை தொகுதி கூட்டத்திலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தமது கட்சியோ தாமோ சவால்களைக் கண்டு ஓடிப் போவதில்லை என்றும்

06

### தெஹிவளை மல்வத்த பிரதேசத்தில்

# புனர்வாழ்வு நிலையமொன்றை நடத்தி வந்த இரண்டு பேர் கைது



பதிவு செய்யப்படாத புனர்வாழ்வு நிலையம் ஒன்றை தெஹிவளை மல்வத்த பிரதேசத்தில் நடத்தி வந்த இருவரை கைது செய்துள்ளதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

போதைப்பொருள்கட்டுப்பாட்டுச் சபையில் பதிவு செய்யப்படாமல் போதைப்பொருளுக்கு அடிமையானவர்களுக்கான புனர்வாழ்வு நிலையம் நடத்தப்படுவதாக தெஹிவளை பொலிஸாருக்கு கிடைத்த தகவலின்படி இப் புனர்வாழ்வு நிலையம் சுற்றிவளைக்கப்பட்டதாக

06

# முன்னாள் எம்.பி அலவி காலமானார்



குருநாகல் மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எச்.எம். அலவி ஜயவர்தனபுர வைத்தியசாலையில் நேற்று (16) காலமானார். அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் பன்னல, பம்மன்ன ஜும்ஆப் பள்ளிவாசல் மையவாடியில் இன்று 17 ஆம் திகதி காலை 9.00 மணிக்கு இடம்பெறவுள்ளது.

# சூட்டுக்காயங்களுடன் யானை உயிரிழப்பு

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

திஸ்ஸமகாராமை, காவன்திஸ்ஸபுர மஹாகடஆர பிரதேசத்தில் சூட்டுக் காயங்களுடன் உயிரிழந்த நிலையில் யானை ஒன்றினை பிரதேசவாசிகள் (13) கண்டுபிடித்துள்ளனர்.

யால தேசிய சரணாயல பிரதேசத்திற்கு அருகாமையில் துப்பாக்கியால் கால் பகுதியில் சுடப்பட்டு சூட்டுக்காயங்களினாலேயே யானை உயிரிழந்திருக்கலாம் என பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

யானை உயிரிழந்த பிரதேசத்தை சூழவுள்ள பிரதேசங்களில் விவசாயிகள் சேனைப் பயிர்ச்

06

# வேலை பெற்று தருவதாக கூறி 07 இலட்சம் மோசடி

### பொலிஸ் கான்ஸ்டபிள் அதிரடி கைது



வெளிநாடுகளில் வேலை வழங்குவதாக கூறி 7 இலட்சம் ரூபா பணத்தை பெற்று ஏமாற்றியதாக கூறப்படும் பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் சட்டப்பிரிவு அதிகாரிகளினால் பொலிஸ் கான்ஸ்டபிள் சனிக்கிழமை (15) கைது செய்யப்பட்டுள்ளார்.

அகலவத்தை பொலிஸில் கடமையாற்றும் கான்ஸ்டபிள் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவர் இமதுவ, பத்தேமுல்ல பிரதேசத்தை சேர்ந்த 54 வயதானவராவார்.

அகலவத்தை பிரதேசத்தை சேர்ந்த ஒருவர் செய்த முறைப்பாட்டின் பிரகாரம், சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் தரப்பு தெரிவிக்கிறது. சந்தேக நபர் மத்துகம நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.

# அநு./ ஈத்தலவெட்டுனுவெவ முஸ்லிம் வித்தியாலயத்தின் மூன்று மாடி கட்டடத்துக்கு அடிக்கல்

### இஷாக் ரஹ்மான் எம்.பி அல்ஹிமா அமைப்புக்கு பாராட்டு

**கெக்கிராவ குறூப் நிருபர்**

கலன்பிந்துனுவெவ கல்வி வலயத்திற்குட்பட்ட அ/ ஈத்தலவெட்டுனுவெவ முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் மூன்று மாடிகளை கொண்ட வகுப்பறை கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு சனிக்கிழமை (15) நடைபெற்றது.

அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், அல் ஹிமா அமைப்பின் பணிப்பாளர் நூருல்லாஹ் (நளீமி) யிடம் விடுத்த வேண்டுகோளின்பேரில் பிதா பஹத் அல் வக்கீம் தலைமையிலான குவைத் நாட்டு நிறுவனமான இஸ்லாமிக் கெயார் சொசையிட்டியின் நிதி ஒதுக்கீட்டில் இக்கட்டடம் நிர்மாணிக்கப்படவுள்ளது.

06



## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலிய டொலர் | 201.42 | 214.02 |
| கனடியன் டொலர் | 226.74 | 240.83 |
| யூரோ | 331.60 | 350.03 |
| ஜப்பான் யென் | 2.1241 | 2.2376 |
| சிங்கப்பூர் டொலர் | 224.04 | 237.14 |
| ஸ்டர்லிங் பவுன் | 388.30 | 408.92 |
| சுவிஸ் பிராங்க் | 338.21 | 360.12 |
| அமெரிக்க டொலர் | 304.02 | 318.23 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரைன் டினார் | 826.29 | கட்டார் ரியால் | 85.48 |
| குவைத் டினார் | 1015.01 | சவூதி ரியால் | 83.03 |
| ஓமான் ரியால் | 809.14 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 84.81 |

# புனித அல்குர்ஆனின் மகத்துவத்தை மக்கள் மத்தியில் கொண்டு செல்வதற்கான போட்டிகளை நடாத்தும் சவுதி அரேபியா




சவூதி அரேபியாவின் இஸ்லாமிய வழிகாட்டல் அமைச்சுடன் இணைந்து இலங்கைக்கான சவூதி அரேபிய தூதரகம், முஸ்லிம் சமய கலாசார திணைக்களத்தின் ஊடாக ஏற்பாடு செய்து கொழும்பில் நடாத்திய முதலாவது அல் குர்ஆன் மனனப் போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஆண், பெண் போட்டியாளர்களுடன் தூதுவர் காலித் ஹமூத் அல் கஹ்தானி, புதுடில்லியிலுள்ள சவூதி அரேபிய தூதரகத்தின் இஸ்லாமிய விவகார பொறுப்பாளர் பத்ர் அல் அனசி, முஸ்லிம் சமய கலாசாரத் திணைக்களப் பணிப்பாளர் இஸட்.ஏ.எம் பைசல் ஆகியோர் எடுத்துக் கொண்ட படம்.




இந்திய அரசாங்கத்தின் கடனுதவித் திட்டத்தின் மூலம் வட மாகாணத்துக்கென 24 பேருந்துகள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டன. கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் கோரிக்கைக்கு அமைய வன்னி மாவட்டத்திற்கென 10 பஸ்கள் வழங்கி வைக்கப்பட்டதுடன் இதன் அடிப்படையில் முதற்கட்டமாக நான்கு பஸ்கள் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரினால் நேற்று முன்தினம் (15) மன்னார் சாலை முகாமையாளர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

சர்வ வல்லமை படைத்த அல்லாஹு தஆலா மனிதன் மீது கொண்டுள்ள இரக்கம், கருணையின் காரணமாக மனிதனின் ஈருலக வாழ்வின் விமோசனத்திற்கு நேர்வழிகாட்டவென முழுமையான வழிகாட்டுதலாக அல் குர்ஆனை இறக்கியருளியுள்ளான். இது முற்றிலும் அல்லாஹ்வை ஆசானாகக் கொண்ட அருள்மறை. முழு மனித சமூகத்தையும் நெறிப்படுத்தி சீரானதும் சிறப்பானதுமான நாகரீகம் கொண்ட சமூகமாக உருவாக்குவதே அல் குர்ஆனின் நோக்கும் இலக்கும் ஆகும்.

மனிதர்களுக்கு வழிகாட்டியாகவும் நேர்வழியைத் தெளிவுபடுத்தக் கூடியதாகவும் விளங்குகின்ற இக்குர்ஆனை ஓதும் போது ஒரு எழுத்துக்கு பத்து நன்மைகள் கிடைக்கப்பெறும் என்று முஹம்மது நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டு வைத்திருக்கின்றார்கள்.

அதேநேரம் அல்குர்ஆன் உலகில் வாழும் ஓர் அற்புதம். அனைத்து மனித சமூகமும் இக்குர்ஆனைப் படித்து பலன் பெற முடியும். இந்நிலையில் தான் அல்லாஹ், படிப்பதற்கு இலகுவானதாகவும் விளங்குவதற்கு எளிதானதாகவும் அல்குர்ஆனை இறக்கி அருளியுள்ளோம் என்று குறிப்பிட்டிருக்கிறான்.

அல்லாஹ் அல்குர்ஆனின் சொந்தக்காரன். அதனால் அது போன்ற ஒன்றை உலகம் இருக்கும் வரையும் எவராலும் கொண்டு வரவே முடியாது. அதனை சவால்களை எழுப்பி அல் குர்ஆனே குறிப்பிட்டு வைத்திருக்கிறது. அதனால் அல் குர்ஆன் மீது காழ்ப்புணர்வு கொண்டு என்ன தான் எதிர்ப்புகள் முன்னெடுக்கப்பட்டாலும் அவற்றால் எந்த பிரயோசனத்தையும் அடைய முடியாது. அல் குர்ஆன் மறுமை வரைக்கும் புனிதமிக்கதாகவே பாதுகாக்கப்படும். அதற்கான பொறுப்பை அல்லாஹ்வே ஏற்று இருக்கின்றான்.

இப்புனித குர்ஆனுக்கு எதிராக அன்று தொட்டு இன்று வரையும் பல சதித்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இருந்த போதிலும் அவற்றினால் அல் குர்ஆன் பலவீனப்படவோ செல்வாக்கு இழக்கவோ இல்லை. அது தன் பணியை அச்சொட்டாக நிறைவேற்றிக் கொண்டிருக்கின்றது.

இக்குர்ஆன் புத்தக வடிவில் காணப்படுகின்ற போதிலும் அதனை அன்று முதல் இன்று வரையும் மாத்திரமல்லாமல் உலகம் இருக்கும் வரையும் கோடான கோடி முஸ்லிம்கள் தம் உள்ளங்களில் சுமந்து பாதுகாத்து வருகிறார்கள். அது அல்லாஹ்வின் ஏற்பாடாகும். அந்த ஏற்பாட்டையும் கூட மனிதனால் பலவீனப்படுத்த முடியாது.

இவ்வாறு மகத்துவம் பெற்று விளங்கும் இந்த அருள்மறையை மனனம் செய்வதற்காகவும் படிப்பதற்காகவும் அதனை விளங்குவதற்காகவும், அது தொடர்பில் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதற்காகவும் தேசிய, பிராந்திய மற்றும் சர்வதேச ரீதியில் குர்ஆன் போட்டிகள் பல மட்டங்களில் நடந்த வண்ணமுள்ளன. புனித குர்ஆனுக்கு முஸ்லிம்களும் இதர சமூகங்களைச் சேர்ந்தவர்களும் அளிக்கின்ற முக்கியத்துவத்தையும் கௌரவத்தையும் அவை எடுத்தியம்புகின்றன.

அந்த வகையில் புனித குர்ஆனுக்கு அளிக்கப்பட வேண்டிய அனைத்து மதிப்பையும் கௌரவத்தையும் சவுதி அரேபியா அரசு அன்று தொட்டு தொடர்ந்தும் வழங்கி வருகின்றது. இதனடிப்படையில் தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் அல் குர்ஆன் போட்டிகளை அடிக்கடி நடத்துகின்றது. அத்தோடு நில்லாது சவூதி அரேபியாவின் மறைந்த மன்னர் பஹத் அவர்களுடைய பெயரில் பாரிய குர்ஆன் அச்சகமொன்றை மதீனாவில் நிறுவி அதன் ஊடாக அரபு மொழியில் மாத்திரமல்லாமல் உலகின் ஏனைய மொழிகளுக்கும் அல்குர்ஆனை மொழிபெயர்த்து இலவசமாக விநியோகித்து வருவது குறிப்பிடத்தக்கது

இதேவேளை இந்தோனேசியா, மலேசியா, பாகிஸ்தான் மொரோக்கோ, பங்களாதேஷ் போன்ற பல இஸ்லாமிய நாடுகளிலும் முஸ்லிம் அல்லாத நாடுகளிலும் கூட குர்ஆன் போட்டிகளை நடாத்தி பெறுமதியான பரிசல்களை வழங்கவும் செய்கிறது சவுதி அரேபியா.

அந்த வகையில் இலங்கையில் முதற்தடவையாக அல் குர்ஆன் மனனப் போட்டியை முஸ்லிம் சமய, கலாசார திணைக்களத்தின் ஊடாக நடாத்தியுள்ள சவுதி அரேபியா அதற்கான பரிசளிப்பு வைபவத்தையும் இன்று நடாத்துகின்றது.

இலங்கைக்கும் சவுதி அரேபியாவுக்கும் இடையில் நீண்ட காலமாக நேச நட்புறவு நிலவுகிறது. இந்த உறவின் அடிப்படையில் இந்நாட்டின் பாலங்கள், வைத்தியசாலைகள், பல்கலைக்கழகங்கள் உள்ளிட்ட பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கும் உதவி ஒத்துழைப்புக்களை நல்கி வருகின்ற சவுதி சர்வதேச மட்டத்தில் ஜெனீவா மனித உரிமைகள் பேரவையிலும் கூட இலங்கைக்கு ஆதரவு நல்கியது. இவ்வாறு வலுவான நட்புறவைக் கொண்டிருக்கும் இலங்கையிலும் குர்ஆன் மனனப் போற்றியொன்றை நடத்த வேண்டும் என்று சவுதி அரேபியா அரசாங்கம் விரும்பியதன் பேரில் சவுதி அரேபிய இஸ்லாமிய கலாசார வழிகாட்டல் அமைச்சின் நேரடி கண்காணிப்பின் கீழ் கொழும்பிலுள்ள சவுதி அரேபிய தூ தரகம் முஸ்லிம் சமய, கலாசார திணைக்களத்தின் ஊடாக குர்ஆன் மனனப் போட்டியொன்றை நடாத்தியது. இப்போட்டியில் இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் போட்டியாளர்கள் பங்குபற்றியதோடு அதில் வெற்றி பெற்றவர்களுக்கு பெறுமதியான பரிசில்களும் இன்று வழங்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

சவுதியைப் பொறுத்த வரை ஆரம்ப மன்னர் அப்துல் அஸீஸ் தொடக்கம் தற்போதைய மாண்புமிகு மன்னர் சல்மான் பின் அப்துல் அஸீஸ் அவர்கள் வரையும் குர்ஆனுக்கு மிக முக்கியத்துவம் அளித்து தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் இவ்வாறான போட்டிகள் தொடராக நடாத்தப்படுகின்றன. குறிப்பாக தற்போதைய மன்னர் அவர்களும், இளவரசர் முஹம்மது பின் சல்மான் அவர்களும், இஸ்லாமிய கலாச்சார அமைச்சர் அவர்களும் குர்ஆன் போட்டிகளை சர்வதேச ரீதியில் மிகவும் உற்சாகத்துடன் நடாத்தி வருகின்றனர். இதன் நிமித்தம் சவுதி அரேபியாவுக்கு உலகளவில் அங்கீகாரமும் நற்பெயரும் கிடைக்கப் பெற்றுள்ளது. இது சவுதி அரேபியாவை பாராட்ட வேண்டிய மிக முக்கியமான ஒரு பணியும் கூட. அண்மையில் சுவீடனில் குர்ஆனுக்கு எதிராக அவமதிப்பு இடம்பெற்ற போது அதனை முதன் முதலில் கண்டித்த நாடு சவுதி அரேபியாவே. அத்தோடு நின்று விடாமல் சவுதி அரேபியாவில் இருக்கின்ற சுவீடன் தூதுவரை அழைத்து தங்களுடைய கடுமையான எதிர்ப்பையும் வெளியிட்டு முழுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டது. அத்தோடு சவுதி அரேபியாவைத் தலைமையகமாகக் கொண்டுள்ள 57 நாடுகளைக் கொண்ட இஸ்லாமிய ஒத்துழைப்பு அமைப்பையும் உடனடியாகக் கூட்டி இதற்கு அவசரமான நடவடிக்கைகளை முன்னெடுக்கும் படியும் சவுதி அரேபியா வலியுறுத்தியுள்ளது. அத்தோடு சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கும் ஐக்கிய நாடு சபைக்கும் இது சம்பந்தமான அழுத்தத்தைக் கொடுத்துள்ள சவுதி அவர்களும் இவ்விடயத்தில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை குர்ஆன் எரிப்புக்கு எதிராக இலங்கையும் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் கடும் கண்டனங்களையும் தெரிவித்துள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

எனவே இன்று சவுதி அரேபிய தூதரகத்தின் நேரடி கண்காணிப்பில் நடைபெறுகின்ற குர்ஆன் போட்டிக்காக அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்திருக்கின்ற சவுதி அரேபிய தூதுவர் காலித் ஹமுத் அல் கஹ்தானி மற்றும் தூதரக அனைத்து உதவியாளர்களும் புதுடில்லியில் உள்ள சவுதி அரேபிய தூதரக இஸ்லாமிய விவாகர பொறுப்பாளர் பத்ர் அல் அனசி அவர்களும் முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களப் பணிப்பாளர் இஸட்.ஏ.எம் பைசல் மற்றும் அனைத்து ஊழியர்களும் இப்போட்டியில் கலந்து கொண்ட அனைத்து போட்டியாளர்களும் போட்டியில் வெற்றியடைந்து பரிசில்களை பெற்றுக் கொண்ட அனைத்து வெற்றியாளர்களும் நன்றிகளுக்கும் பாராட்டுதல்களுக்கும் கௌரவங்களுக்கும் உரியவர்களாவர்.

**மௌலவி எம்.எச். ஷேஹுத்தீன் மதனி** (BA)
பணிப்பாளர்,
அல் ஹிக்மா நிறுவனம்.


## சவுதி அரேபியா ஏற்பாட்டில் இலங்கையில் முதற்தடவையாக குர்ஆன் மனனப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்





HRH Crown Prince Mohammed Bin Salman Al Saud



HM Former King Abdulaziz Bin Abdul Rahman Al Saud



HM King Salman Bin Abdulaziz Al Saud



Dr. Abdullathif A. Aziz Al Sheikh Minister of Islamic Affairs Dawah & Guidance

சவுதி அரேபியா தேசிய மற்றும் சர்வதேச ரீதியில் புனித அல்குர்ஆனுக்காக பல போட்டிகளை அடிக்கடி நடத்திக் கொண்டிருக்கிறது. அதற்கான அனைத்து செலவுகளையும் பொறுப்பேற்றுக் கொள்கின்ற சவுதி அரேபியா, குர்ஆன் போட்டியில் கலந்து கொள்கின்ற சர்வதேச மற்றும் தேசிய போட்டியாளர்களுக்கு மிகப் பெறுமதியான பரிசில்களையும் தொடர்ந்தும் வழங்கி வருகிறது. அந்த வகையில் இலங்கையில் முதற்தடவையாக நடாத்தப்பட்ட குர்ஆன் மனைப் போட்டியின் பரிசளிப்பு வைபவம் கொழும்பில் இடம்பெறுகிறது.


இலங்கையில் முதற்தடவையாக குர்ஆன் மனனப் போட்டியை நடாத்துவதற்கு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுத்த சவுதி அரேபிய மன்னரும் புனித இரண்டு ஹரம்களின் காவலருமான சல்மான் பின் அப்துல் அஸீஸ், பட்டத்து இளவரசர் முஹம்மத் பின் சல்மான் மற்றும் சவுதி அரேபிய இஸ்லாமிய வழிகாட்டல் அமைச்சு, சவுதியின் இலங்கைக்கான தூதுவர் காலித் ஹமுத் அல் கஹ்தானி, புதுடில்லியிலுள்ள சவுதி அரேபிய தூதரக இஸ்லாமிய விவாகர பொறுப்பாளர் பத்ர் அல் அனசி, முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களப் பணிப்பாளர் இஸட். ஏ.எம். பைசல் ஆகியோருக்கும் இலங்கை மக்களின் சார்பில் நன்றிகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சவுதி அரேபிய இஸ்லாமிய வழிகாட்டல் அமைச்சின் அனுசரணையுடன் இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர் மாண்புமிகு காலித் ஹமுத் அல் கஹ்தானியின் நேரடி கண்காணிப்பில் முஸ்லிம் சமய கலாச்சார திணைக்களத்தின் ஏற்பாட்டில் சவுதி அரேபிய தூ தரகத்தினால் இலங்கையில் நடைபெறும் முதலாவது குர்ஆன் மனனப் போட்டிக்கான பரிசளிப்பு வைபவம் இன்று கொழும்பில் நடைபெறுகிறது.

**தலைமை:**
**மாண்புமிகு காலித் ஹமூத் அல் கஹ்தானி அவர்கள்**
இலங்கைக்கான சவுதி அரேபிய தூதுவர்

**விஷேட அதிதி:**
**அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க அவர்கள்**
புத்த சாசனம், சமய, கலாசார அலுவல்கள் அமைச்சு

**பிரதம அதிதி:**
**சபாநாயகர் - மஹிந்த யாப்பா அபேவர்தன அவர்கள்**
இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு



King Fahd Glorious Quaran Printing Complex, Madina

AL HIKMA WELFARE ASSOCIATION
109/1/1 ANANDA MAWATHA
MARADANA, COLOMBO 10
SRI LANKA
TEL 0094773550287, 0094112691873
EMAIL: sdeenmh@gmail.com, alhikmawelfare@gmail.com



மௌலவி எம்.எச். ஷேஹுத்தீன் மதனி (BA)
பணிப்பாளர்,
அல் ஹிக்மா நிறுவனம், கொழும்பு

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் ஆடி மாதம் 01ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1444 துல்ஹிஜ்ஜா பிறை 28

### குறள் தரும் சிந்தனை



இற்பிறந்தார் கண்அல்லது இல்லை இயல்பாகச்
செப்பமும் நாணும் ஒருங்கு

நடுநிலை தவறாத பண்பும், ஆரவாரமற்ற அடக்க உணர்வும் கொண்டவர்களையல்லாமல் மற்றவர்களை உயர்ந்த குடியில் பிறந்தவர்களாகக் கருத முடியாது.

# இன, மத பேதங்களுக்கு அப்பால் ஒன்றுபட வேண்டியது அவசியம்

உலகில் ஒவ்வொரு நாடும் அபிவிருத்தி அடைந்து கொள்வதில் கூடுதல் கவனம் செலுத்தி வருகின்றது. அவற்றில் பொருளாதார ரீதியிலான முன்னேற்றங்களே முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன. அதற்கேற்ப வேலைத்திட்டங்களையும் ஒவ்வொரு நாடும் முன்னெடுத்து வருகின்றது.

அதன் ஊடாகப் பல நாடுகள் அபிவிருத்தி அடைந்துள்ளன. இன்னும் பல நாடுகள் முன்னேற்றமடைந்து வருகின்றன. இந்த முன்னேற்றங்களை இலக்காகக் கொண்டு ஒவ்வொரு நாடும் அந்தந்த நாட்டுக்கு ஏற்ற பொருத்தமான திட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. அவ்விதமான திட்டங்கள் அந்தந்த நாடுகளுக்கு பிரதிபலன்களையும் அளித்துள்ளன.

ஐரோப்பிய ஏகாதிபத்தியத்திடமிருந்து சுதந்திரம் பெற்றுக்கொள்ளும் போது பொருளாதார ரீதியில் இலங்கை, ஜப்பானுக்கு அடுத்த இடத்தில் இருந்தது. தெற்காசியப் பிராந்தியத்திலுள்ள நாடுகள் மாத்திரமல்லாமல் ஆசிய கண்ட நாடுகள் பலவும் பொருளாதார ரீதியில் இலங்கைக்கு கீழ் மட்டத்திலேயே அன்று காணப்பட்டன.

ஆனால் கடந்த 75 வருட காலப்பகுதிக்குள் அந்நாடுகளில் பலவும் இலங்கையை விடவும் பல மடங்கு முன்னேறி விட்டன. இன்னும் பல நாடுகள் பொருளாதார ரீதியில் இந்நாட்டைக் கடந்து பயணித்துக் கொண்டிருக்கின்றன. பொருளாதார ரீதியில் முன்னேற்றமடைவதற்குத் தேவையான அனைத்து அடிப்படை வளங்களையும் தன்னகத்தே கொண்டுள்ள இந்நாடு தொடர்ந்தும் பின்னடைவுக்கு உள்ளானதாகவே காணப்படுகிறது. அதிலும் கடந்த 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் கடும் பொருளாதார நெருக்கடிக்கும் இந்நாடு முகம்கொடுத்தது. கடந்த காலத்தில் முன்னெடுக்கப்பட்ட தவறானதும் பலவீனமானதுமான பொருளாதார வேலைத்திட்டங்களின் பிரதிபலனே அது. பொருளாதார நிபுணர்களின் கருத்தும் அதுதான்.

பொருளாதார மேம்பாட்டுக்கு தேவையான அடிப்படை வளங்களைக் கொண்டுள்ள நாடு பொருளாதார நெருக்கடிக்கு முகம்கொடுக்கும் நிலைக்கு உள்ளானதென்றால் முன்னெடுக்கப்பட்ட பொருளாதார வேலைத்திட்டங்களின் தவறுகளே காரணம் என்பதில் ஐயமில்லை.

2022 பிற்பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதவிக்கு வந்தது முதல் முன்னெடுத்து வரும் பொருளாதார மீட்சித் திட்டங்களின் பயனாக நாடு கட்டம்கட்டமாக மீட்சி பெற்று வந்த நிலையில் தற்போது மறுமலர்ச்சிப் பாதையில் பிரவேசித்துள்ளது.

பல்லின மக்கள் வாழும் இந்நாட்டில் இன, மத பேதங்களுக்கு அப்பால் இலங்கையர் என்ற அடையாளத்துடன் ஒன்றுபட்டு தான் சுதந்திரம் பெற்றுக் கொள்ளப்பட்டது. இருப்பினும் சுதந்திரத்திற்கு பின் வந்த சில அரசியல்வாதிகள் முன்னெடுத்த தவறான கொள்கைகளால் இனரீதியான பார்வை மேலோங்கியதோடு, இனரீதியிலான பிளவுகள் தோற்றம் பெறவும் வழிவகுத்தன. அதன் விளைவாக சுமார் 3 தசாப்த கால யுத்தத்திற்கும் முகம்கொடுக்கும் நிலைக்கு நாடு உள்ளானது. அதனால் விலைமதிக்க முடியாத மனித உயிர் மற்றும் சொத்திழப்புக்களை சந்தித்ததன் விளைவாகவும் இந்நாடு பொருளாதார பின்னடைவுக்கு உள்ளானது.

சுதந்திரத்திற்கு பின் வந்த சில அரசியல்வாதிகள் இன, மத, மொழி பேதங்களுக்கு அப்பால் இலங்கையர் என்ற பார்வையுடன் வேலைத்திட்டங்களை முன்னெடுத்திருந்தால் இலங்கையும் ஏனைய நாடுகளைப் போன்று பொருளாதார ரீதியில் பெரிதும் முன்னேற்றமடைந்திருக்கும். இது பரவலாக உணரப்பட்டுள்ளது.

இந்நிலையில், இனியும் நாம் நாடென்ற வகையில் பின்னடைந்திருக்க முடியாது. ஏனைய நாடுகளைப் போன்று நாமும் முன்னேற்றமடைய வேண்டும் என்ற தேவையும் எதிர்பார்ப்பும் ஏற்பட்டுள்ளது. 2022 இல் நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடி இதற்கு பெரிதும் உதவியுள்ளது. உண்மையில் இன, மத பேதங்களுக்கு அப்பால் எல்லோரும் ஒன்றுபட்டு நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். இலங்கையர் என்ற அடையாளத்துடன் ஒன்றுபட்டு செயற்படும் போது இந்நாட்டை கட்டியெழுப்புவது அவ்வளவு சிரமமான காரியமல்ல.

இவ்வாறான சூழலில் யாழ்குடா நாட்டுக்கு விஜயம் செய்துள்ள தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார, 'முன்னைய அரசியல்வாதிகள்தான் இன, மத ரீதியாக எங்களைப் பிரித்து பிளவுபட வைத்தனர். இனியும் இன, மத ரீதியாக பிரிந்து நிற்காமல் அனைவரும் இணைந்து நாட்டைக் கட்டியெழுப்ப முன்வர வேண்டும். தற்போதைய ஜனாதிபதி அனைவரையும் இன, மத ரீதியாக ஒன்றிணைத்து நல்லிணக்கத்தையும் சமத்துவத்தையும் ஏற்படுத்தி வருகின்றார்' என்று குறிப்பிட்டுள்ளார்.

ஆகவே அமைச்சர் மனுஷ நாணயக்கார குறிப்பிடுவது போன்று நாட்டை கட்டியெழுப்புவதற்காகவும் சுபீட்சமான வாழ்வைப் பெற்றுக்கொள்வதற்காகவும் இன, பேதங்களுக்கு அப்பால் இலங்கையராக ஒன்றுபட்டு செயற்படுவதே இன்றைய தேவையாகும். நாட்டை உண்மையாக நேசிப்பவர்களின் எதிர்பார்ப்பும் அதுவேயாகும்.

editor.tkn@lakehouse.lk

# பிரான்ஸிடமிருந்து சக்திவாய்ந்த இராணுவத் தளவாடங்களை கொள்வனவு செய்கிறது இந்தியா

பிரான்ஸ் நாட்டுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு தலைநகர் பாரிஸில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரான்ஸ் நாட்டின் தேசிய தினம் கடந்த 14 ஆம் திகதி கொண்டாடப்பட்டது. இந்த விழாவில், நெருங்கிய நட்பு நாடுகளின் தலைவர்கள் சிறப்பு விருந்தினர்களாக அழைக்கப்படுவது வழக்கம். இம்முறை நடைபெற்ற பிரான்ஸ் தேசிய தினவிழாவில் அந்நாட்டு ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் அழைப்பின்பேரில், பிரதமர் நரேந்திர மோடி சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.





## பிரதமர் மோடிக்கு பிரான்ஸ் வழங்கிய அதியுயர் கௌரவ விருது

பிரான்ஸிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட ரஃபேல் போர் விமானங்களும் பிரான்ஸ் விமானப் படையுடன் இணைந்து சாகசங்களில் ஈடுபட்டன. இந்திய கடற்படையின் 'ஐ.என். எஸ் சென்னை' போர்க் கப்பல், பிரான்ஸின் பிரெஸ்ட் நகரில் உள்ள கடற்படைத் தளத்தில் முகாமிட்டிருந்தது. அங்கு நடைபெற்ற பிரான்ஸ் தேசிய தின விழாவில் 'ஐ.என்.எஸ் சென்னை' போர்க்கப்பலும் பங்கேற்றது.

பாரிஸ் விமான நிலையத்தைச் சென்றடைந்த பிரதமர் நரேந்திர மோடிக்கு சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. அந்நாட்டு பிரதமர் எலிசபெத் போர்ன், விமான நிலையத்துக்கு வந்து பிரதமர் மோடியை வரவேற்று அழைத்துச் சென்றார். ஏராளமான இந்திய வம்சாவளியினர் திரண்டு வந்து மோடியை வரவேற்றனர்.

இதைத் தொடர்ந்து, பாரிஸில் இந்திய வம்சாவளியினரின் கூட்டத்தில் அவர் பங்கேற்று உரையாற்றினார். அதன் பின்னர், பாரிஸில் உள்ள ஜனாதிபதி மாளிகையான எலிசி அரண்மனையில் மோடிக்கு ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோன் இரவு சிறப்பு விருந்து அளித்தார்.

பாரிஸில் நடைபெற்ற பிரம்மாண்டமான தேசிய தின விழாவில் இரு தலைவர்களும் பங்கேற்றனர். அதன் பின்னர் அதிகாரபூர்வமாக சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது, பிரான்ஸிடம் இருந்து இந்திய கடற்படைக்காக 26 ரஃபேல்எம் போர் விமானங்களை வாங்க ஒப்பந்தம் கையெழுத்தாகியது. பிரான்ஸ் தொழில்நுட்ப உதவியுடன் மும்பை மசாகான் கப்பல் கட்டும் தளத்தில் 3 ஸ்கோர்பீன் ரக நீர்மூழ்கி கப்பல்களை தயாரிக்கவும் ஒப்பந்தம் கையெழுத்தாகியது.

'தற்போது வாங்கப்படும் ரஃபேல் போர் விமானங்கள் மற்றும் ஸ்கோர்பீன் நீர்மூழ்கிகளின் ஒப்பந்தத்தின் மதிப்பு ரூ.90,000 கோடியாக இருக்கும்' என்று இந்திய பாதுகாப்பு துறை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.







இத்துடன் அதிநவீன ஸ்கோல்ப் ஏவுகணைகளையும் இந் தியாவுக்கு பிரான்ஸ் வழங்க உள்ளது. நீர்மூழ்கியில் இருந்து ஏவும்போது 1,000 கி.மீ. வரையிலும், போர்ககப்பலில் இருந்து ஏவும்போது 1,400 கி.மீ. வரையிலும் இது பாய்ந்து செல்லும். 'மேக் இன் இந்தியா' திட்டத்தில், இந்தியாவிலேயே இவை தயாரிக்கப்படும்.

இதற்கிடையில் பிரான்ஸ் நாட்டின் தேசிய தினத்தில் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்ற பிரதமர் மோடி, பிரான்ஸ் படை வீரர்கள் புடைசூழ விழாவுக்கு அழைத்து வரப்பட்டதும், அந்நாட்டின் ஜனாதிபதி இமானுவேல் மெக்ரோனுடன் சேர்ந்து இருநாட்டு வீரர்களின் அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்.

இந்நிகழ்வுக்கு முன்னராக இந்திய வம்சாவளியினர் மத்தியில் உரையாற்றிய மோடி, "பிரான்ஸில் திருவள்ளுவர் சிலை நிறுவப்படும். இது இந்தியாவுக்கான பெருமை. உலகின் பழமையான மொழி தமிழ்தான். உலகின் பழமையான மொழி இந்திய மொழி என்பதை விட நமக்கு பெரிய பெருமை வேறு என்ன இருக்க முடியும்?'' என மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமருக்கு பிரான்ஸ் ஜனாதிபதி இரவு விருந்து வழங்கினார். அத்துடன் பிரதமர் மோடிக்கு பிரான்ஸ் நாட்டின் கிராண்ட் கிராஸ் ஒப் த லீஜியன் ஆப் ஹொானர் எனும் உயரிய விருதை இமானுவேல் மெக்ரோன் வழங்கினார்.

இருநாட்டுத் தலைவர்களும் இருதரப்பு உறவுகள் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளனர். 25 ஆண்டுகால பிரான்ஸ் நட்பை புதுப்பிக்கும் விதமாக இந்தச் சந்திப்பு அமைந்ததாக இருதலைவர்களும் விடுத்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

26 ரபேல் விமானங்களை வாங்குவதற்கு இந்தியா ஒப்புதல் அளித்துள்ளதாக பிரான்சின் டஸால்ட் எவியேஷன் நிறுவனம் அறிவித்துள்ளது. பிரான்சின் தேசிய தினக் கொண்டாட்டத்தில் பங்கேற்றமை குறித்து பிரதமர் மோடி மகிழ்ச்சி தெரிவித்துள்ளார்.

"நான் பல முறை பிரான்சுக்கு வந்திருக்கிறேன். ஆனால், இந்தப் பயணம் மிகவும் சிறப்பு வாய்ந்தது. ஏனெனில், இந்தியா_ பிரான்ஸ் இடையேயான ஆதரவும், உறவும் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு வலிமை அடைந்துள்ளன. இரு நாடுகளின் கூட்டாண்மையின் 25 ஆவது ஆண்டு நிறைவை இந்த ஆண்டு குறிக்கின்றது. இரு நாட்டு மக்களுக்கு இடையேயான இணைப்பு அதிகரித்துள்ளது. பிரான்சில் வாழும் இந்தியர்கள், இந்தியாவில் முதலீடு செய்ய முன்வர வேண்டும். முதலீடுகளை ஈர்ப்பதில் இந்தியா கவர்ச்சிகரமான திட்டங்களைக் கொண்டுள்ளது. நாடு வேகமாக முன்னேறி வருவதால் இந்திய முதலீட்டாளர்கள் அதன் பலனை பெற்று வருகிறார்கள்" என நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பிரான்ஸில் இரண்டு நாள் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் மோடி ஐக்கிய அரபு அமீரகத்திற்குப் புறப்பட்டுச் சென்றார்.

# உலகத் தமிழ் வர்த்தக சங்கத்தின் ஏற்பாட்டில், சென்னையில் 'மருத்துவத்துறைக்கான விருது'

ஏழாம் ஆண்டு மருத்துவத் துறைக்கான விருது (MEDICAL EXCELLENCE AWARDS) சென்னையில், ஒகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி சனிக்கிழமை மாலை நட்சத்திர விடுதியில் நடைபெற உள்ளது. அந்நிகழ்வில் மருத்துவத்துறையில் சிறந்து விளங்கும் மருத்துவர்கள், மருத்துவமனைகள், மருத்துவ ஆராய்ச்சியாளர்கள், தாதியர்கள் மற்றும் மருத்துவத்துறை சார்ந்து பணியாற்றுபவர்களுக்கு விருது வழங்கப்பட உள்ளது.

2017 ஆம் ஆண்டு தொடஃங்கப்பட்ட இவ்விருது மருத்துவ பேரிடர் காலத்தில் அரசு மருத்துவர்கள், தாதியர்கள், தூய்மை பணியாளர்கள், பொலிஸ்துறையைச் சேர்ந்தவர்கள், அம்புலன்ஸ் சாரதிகள் போன்றவர்களுக்கு உலகத் தமிழ் வர்த்தக சங்கம் விருது வழங்கி ஊக்குவித்துள்ளது.

கடந்த ஆண்டுகளில் அரசு முதன்மை செயலாளர், தமிழக ஆளுநராகவிருந்த பன்வாரிலால் புரோகித், கேரள ஆளுநர் சதாசிவம், தெலுங்கானா ஆளுநர் திருமதி தமிழிசை சௌந்தர்ராஜன், மருத்துவத் துறை அமைச்சர் மா. சுப்பிரமணியன், கேரளா ஆளுநர் ஆரிப் முகமது கான் போன்றவர்களால் கௌரவிக்கப்பட்ட இவ்விருதானது, இவ்வாண்டும் ஆளுநரால் வழங்கப்பட உள்ளது என உலகத் தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் ஏற்பாட்டு குழு தலைவர் செல்வகுமார் தெரிவித்தார்.

(தொடர்புக்கு +60166167708 Whatsapp)



உலகத் தமிழ் வர்த்தக சங்கம் மற்றும் ஏற்பாட்டு குழு தலைவர் செல்வகுமார்

# இல்லாதோருக்கு உதவும் பண்புடன் வாழ்ந்தவர் அஷ்ரப் ஹுஸைன்

மர்ஹூம் அஷ்ரப் ஹுஸைன் மறைந்து நேற்றுடன் (16.07.2023) ஆறு ஆண்டுகள் கடந்துவிட்டன.

அவர் பல சமூகப்பணிகளை மேற்கொண்டுவாழ்ந்தஉதாரணபுருஷராவார். அவரின் எண்ணங்களும் சிந்தனைகளும் சமூக நலன் சார்ந்ததாக இருந்தன. பிறரை வாழவைக்க வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர் அவர்.

தானதர்மம் செய்வதில் அவர் சிறந்தவர். அவர் மட்டுமல்ல அவருடைய குடும்பமும் அந்தப்பணியை செய்கிறது. மர்ஹூம் அஷ்ரப் ஹுஸைன் சமூகத்திற்கு பயனுள்ள பணிகளை செய்தார். கஷ்டப்பட்ட மக்களின் துயர் துடைப்பதில் பெருமனங் கொண்டவர்.

கொழும்பு மாவட்டத்தில் பேரும் புகழுமாக வாழ்ந்த குடும்பத்தில் பிறந்த அஷ்ரப் ஹுஸைன் மக்கள் பணியில் ஆர்வத்துடன் ஈடுபட்டார்.

2004 ஆம் ஆண்டு சுனாமி பேரலைத் தாக்கத்தில் பாதிக்கப்பட்ட இடங்களுக்குச் சென்று உதவிகள் வழங்கியிருந்தார்.



ரமழான் காலங்களில் பள்ளிவாசல்களில் வணக்க வழிபாடுகள் அமல்களில் மக்கள் ஈடுபடும் வகையில் மின்சாரம், நீர், உணவுப் பொருட்கள், போக்குவரத்து வசதிகளை செய்து கொடுத்தார்.

ஒவ்வொரு ரமழான் மாதத்திலும் அவருடைய நண்பர்களை அழைத்து இப்தார் ஏற்பாடு செய்தார்.

ஏழை எளிய மக்களுக்கு தானதர்மம் அன்பளிப்புக்களை வழங்கும் பண்புள்ளவராக வாழ்ந்தார்.

மாணவர்களின் கல்வி உயர் கல்வி மற்றும் விளையாட்டு விவகாரங்களிலும் ஊக்கப்படுத்தினார்.

மர்ஹூம் அஷ்ரப் ஹுஸைன் மரணித்தாலும் அவர் செய்த நற்பணிகளால் உயிர்வாழ்கிறார்.

அவர் கொழும்பில் மில்லத் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து அதன் பிரதம ஆசிரியராக இருந்தார்.

ஊடகவியலாளர்களுடன் அதிக நேசம் வைத்திருந்தார். பல்வேறு அமைப்புகளுக்கு பங்களிப்பு வழங்கினார்.

மௌலவி
எஸ்எம்எம் முஸ்தபா...✍
பலாஹி
(புதிய காத்தான்குடி விசேட நிருபர்)

# 38 வருட கல்விப்பணியிலிருந்து ஓய்வு பெற்ற ஆசிரியர் சிவானந்தன்

கண்டி, பல்லேகலயைச் சேர்ந்த இராமையா சிவானந்தன், ஹற்றன் பொஸ்கோ கல்லூரி மற்றும் ஹைலன்ஸ் கல்லூரியின் பழைய மாணவராவார். இவர் ஹற்றன் பிரதேசத்தில் ஆங்கிலபாட ஆசிரியராகக் கடமையாற்றி தன்னுடைய 38 வருட கல்விப்பணியிலிருந்து இம்மாதம் 14 ஆம் திகதி ஓய்வு பெற்றார்.

பல்லேகலயில் இராமையா_ தங்கம்மா தம்பதியினரின் நான்கு பிள்ளைகளுள் ஒருவராக 1963.07.14 ஆம் திகதி அவர் பிறந்தார். இவர் தன்னுடைய ஆசிரியத் தொழிலுக்கான பயிற்சியினை 1991 மற்றும் 1992 ஆம் ஆண்டுகளில் பேராதனை ஆங்கில பயிற்சிக் கல்லூரியில் பெற்றார்.

1986 ஆம் ஆண்டு ஆங்கிலப் பாடத்துக்கான ஆசிரியர் நியமனத்தை டெரிக்கிலாயர் தமிழ் வித்தியாலயத்தில் பெற்றார்.அதன்பிறகு 1988 ஆம் ஆண்டு போரஸ்ட்கிரிக் தமிழ் வித்தியாலயத்திலும், 1992 ஆம் ஆண்டு பன்மூர் தமிழ் வித்தியாலயத்திலும், 2011 ஆம் ஆண்டு தொடக்கம் ஓய்வு வரையும் டிக்கோயா ஹொன்சி (புளியாவத்தை) கல்லூரியிலும் தன்னுடைய ஆசிரியப் பணியினை ஆற்றியுள்ளார். இவர் 2008 ஆம் ஆண்டு முகாமைத்துவ பயிற்சியினை சென்னையில் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது. அத்துடன், 2009ஆம் ஆண்டு பேராதனையில் மூன்றுமாத முகாமைத்துவ பயிற்சி பெற்றார். ஆங்கில மொழியில் சிறந்த ஆளுமை கொண்டுள்ள இவர் மாணவர்களின் அன்பைப் பெற்றவராவார்.

இரா.யோகேசன்...✍
(கினிகத்தேனை தினகரன் நிருபர்)



## மானுடவியல்



# சிறுத்தொண்ட நாயனார்

124

அப்பிள்ளைக்கு ஐந்து வயது வந்தபொழுது பள்ளியிற் கல்வி பயிலவைத்தார். அந்நாளில் திருஞானசம்பந்தப் பிள்ளையார் இறைவனை வழிபடத் திருச்செங்காட்டங்குடிக்கு எழுந் தருளினார். ஆளுடைய பிள்ளையாரும் பேரன்பினாற் சிறந்த சிறுத்தொணடருடன் அளவளாவி மகிழ்ந்தனர். கணபதீச்சரப் பெரு மானைத் தாம் பாடிய 'பைங்கோட்டு மலர் புன்னை' என்னும் முதற்குறிப்புடைய திருப்பதி கத்தில் சிறுத்தொண்டரைச் சிறப்பித்துப் பாடினார்.

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச் சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே செங்காட்டங் குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே.




சிறுத்தொண்டரது உண்மை அன்பை நுகர்ந் தருள விரும்பிய சிவபெருமான், பைரவ அடியாராக வேடந்தாங்கி, திருச்செங் காட்டங் குடியை அடைந் தார். பைரவசுவாமியார் செஞ்சடையினைக் காளமே கம் போன்று கருமயிர்த்திர ளாக முடித்திருந்தார். அக்க ருங்குஞ்சியிலே தும்பைப் பூக்கள் சூடியிருந்தார். திருச்சடையிலுள்ள இளம்பிறையைத் திருநீற்றுப் பொட்டாக நெற்றியிலிட்டார். செக்கர் வானத்தை அந்தி இருள் மறைப்பது போல, செம்மேனியை மூடிக் கருஞ்சட்டை அணிந்தார். இடக்கையிற் சூலம் ஏந்தினார். இத்தகைய கோலத் துடன் சிறுத்தொண்டரது வீட்டு வாயிலை அடைந்து 'தொண்டர்க்குச் சோறளிக்கும் சிறுத்தொண்டர் இவ்வீட்டில் உள்ளாரோ? என வினவி நின்றார். அம்மொழியினைக் கேட்ட சந்தனத்தாதியார் முன்வந்து வணங்கி, 'அவர் அடியாரைத் தேடி வெளியே சென்றுள்ளார். எம்மை ஆளான உடையவரே! வீட்டினுள் எழுந்தருள்வீராக' என வேண்டினார். வந்த பைரவ சுவாமியார் அவரை நோக்கி, 'மாதர்கள் இருக்கும் இடத் தில் நாம் தனியே புகமாட்டோம்' என்றார். அது கேட்ட திருவெண்காட்டு நங்கையார். 'இவ்வடியவர் போய்விடுவாரோ' என்று அஞ்சி விரைந்து உள்ளிருந்து வீட்டு வாயி லிற்கு வந்து 'எம்பெருமானே! அம்பலவர் அடியாரை அமுது செய்விப்பதற்கு அடியார் எவரையும் காணாமல் வெளியே சென்றுள்ளார்; தேவரீர் இங்கு எழுந்தருளியதனைக் கண்டால் தாம் பெற்ற பெரும்பேறெனக் கொள்வார். இனிச் சிறிதும் தாமதிக்கமாட் டார்; இப்பொழுதுதே வந்துவிடுவார். தேவரீர் வீட்டினுள் எழுந்தருளி இருப்பீராக' என இறைஞ்சினார். அதுகேட்ட பைரவர் 'மாதரசியே நம் உத்தரபதியாயுள்ளோம், சிறுத் தொண்டரைக் காணவந்தோம். அவரின்றி இங்கு தங்க மாட்டோம். கணபதீச்சரத்து ஆத்தி மரத்தின் கீழ் இருக்கின்றோம். அவர் வந்தால் நாம் வந்த செய்தியைச் சொல்வீ ராக' எனக் கூறிச் சென்று திருவாத்தி மரநிழலின் கீழ் அமர்ந்தருளினார்.

(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# மகாபாரதப் போரை நினைவு கூரும் உடப்பு திரௌபதை அம்மன் ஆடித்திருவிழா

**இலங்கையில் அமைந்திருக்கும் திரௌபதை தேவியின் ஆல–யங்களில் தேவியின் புகழ்கூறும் ஆலயமாகவும் இற்றைக்கு 400 ஆண்டுகள் தொன்மைமிக்க ஆலயமாகவும் உடப்பு ஸ்ரீதி–ரௌபதை அம்மன் ஆலயம் விளங்குகின்றது.**

புத்தளம் மாவட்டத்தில் சிலாபம் நகரிலிருந்து 16 மைல்கள் வடமேற் கில் உடப்புக் கிராமத்தில் இவ்வா லயம் அமைந்துள்ளது. இங்குள்ள திரௌபதை அம்மன் 'ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்ரீ திரௌபதை அம்மன் ஆலயம்' என மிக நீண்ட பெயரைக் கொண்டுள்ளது. இவ்வாலயத்தில் 1917ம் ஆண்டுக்கா லத்தில் அம்மனை மடாலயத்தில் வைத் துத்தான் பூஜித்து வந்தார்கள். 1917ம் ஆண்டுக்கு பின் அம்மனை பிரதிஷ்டை செய்து மகா மண்டபத்துடன் பூரணமிக்க ஆலயமாகக் கட்டி முடித்தார்கள்.

1929ம் ஆண்டளவிலேயே ஸ்ரீ ருக்கு மணி சத்தியபாமா சமேத பார்த்தசார திப் பெருமாளின் சிலை மூலஸ்தானத் தில் பிரதிஷ்டை செய்து அங்கிருந்த அம்மனின் சிலை கோயிலின் அர்த்த மண்டபத்தில் வைக்கப்பட்டது. அதன் பின்1974, 1994 களில் சுவாமி விஷ்வநா தக் குருக்கள் அவர்களின் தலைமையில் குடமுழுக்கு நடைபெற்றமையும் குறிப்பி டத்தக்கது.



இதனைத் தொடர்ந்து வானுயர்ந்த 108 அடி நவதள நவகலச நவகுண்டபக்ஷ நூதன இரா ஜகோபுர மகா கும்பாபிஷேக நிகழ்வு வெகு கோலாகளமாக 2011.01.24 திகதி திங்கட்கி ழமை நடைபெற்றது.

புத்தளம் மாவட்டத்திலே எழுபத்தைந்து வீதமான தமிழ் சைவ மக்கள் வாழும் கிராமம் உடப்பூராகும். நீர்வளமும் நிலவளமும் மிக்க உடப்பூர்க்கென்று தனித்துவமான வரலாற்றுச் சிறப்புண்டு.

அந்நியப்படையெடுப்புக்கள், போர்கள் மதமாற்றங்கள் எதற்குமே அசையாது தமக்கே உரித்தான வீரத்துடனும், அஞ்சா நெஞ்சுட னும் வாழ்த்து வரும் மறவர் பெருங்குடிகளின் கோட்டையாக உடப்பூர் கடந்த பல நூற்றாண் டுகளாக விளங்குகின்றது. தெய்வ பக் தியும் குலபக்தியும் மிக்க இவர்கள் இராமநாதபுரத்தில் இருந்து வந்து குடியேறியமறவர் பெருங்குடிக ளின் வழித்தோன்றல்களாவர். தங் களது குல தெய்வங்களான காளி யம்மன், மாரியம்மன், திரௌபதை அம்மன் போன்றோருக்கு ஆலயங் கள் அமைத்து வருடாந்த உற்வங் களை பக்திசிரத்தையுடன் கொண் டாடியும் வருகின்றார்கள்.

உடப்பூரில் நடுநாயகமாக விளங் கும் ஸ்ரீ வீரபத்திரகாளியம்மன் ஆல யத்துக்கு வடக்கே அரை மைல் தொலைவில் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயமும், தெற்கே கால் மைல் தொலைவில் ஸ்ரீ திரௌபதையம்மன் ஆலயமும் அமைந்துள்ளது.

ஆடிமாதத்தில் அன்னை ஸ்ரீ திரௌபதா தேவிக்கு 'ஆடித் திரு விழா'பெருமை சேர்க்கும் விதமாக வெகுவிமர்சையாகவும், சிறப்பாக வும் நடைபெற்று வருகின்றது. பல நூற்றாண்டு காலமாக எவ்வித விக்கி னமுமின்றி இந்த விழா இடம்பெற்று வருவது இவ்வூர் மக்களின் பக்தியைப் புலப்படுத்துகின்றது.

வியாழக்கிழமை(2023.08.03) திகதி இரவு 6.30மணிக்கு அன்னை ஸ்ரீதி ரௌபதையம்மன் ஊர்வலம் இடம்பெ றுவதோடு இரவு 11.00மணிக்கு தர்மர் பட்டாபிஷேகம் கொடியிறக்கம் மாவி ளக்குப் பூஜை தொடர்ந்து உற்சவ மூர்த்திகள் அம்பாள் தத்தம் யதாஸ்தா னம்எழுந்தருளல் மங்களப் பிரசாதம் வழங்கல் இடம்பெறும்.வெள்ளிக் கிழமை(2023.08.04)திகதி காலை 7.00மணிக்கு பாற்குடப் பவனி இடம்பெற்று திருவிழா இனிதே நிறைவுபெறும்.

கலைஞர்
க.மகாதேவன் உடப்பூர்









ஸ்ரீ வீரபத்திர காளியம்மன் ஆலயத்தில் வெள்ளிக்கிழமை நள்ளிரவு நடைபெற்ற கொள்ளை அசம்பாவிதற்கான பிராயச்சித்த அபிஷேகம் சனிக்கிழமை (15) நடைபெற்றது. ஸ்ரீ வீரபத்திர காளியம்மனுக்கு ஏற்பட்ட தோஷம் நீக்கப்பட்ட வழிபாட்டு பூஜையும் நடைபெற்றதுடன், பக்தர்களும் கலந்து கொண்டு அம்பாளைத் தரிசித்தனர்.

உடப்பு குறூப் நிருபர் உடப்பு

# யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள் - அத்தியாயம் 44



மெ ல்லிய, வெள்ளை துணியில் சாயம் ஏறும் அளவிற்கு கடினமான அழுக்கு துணியில் ஏறுவதில்லை. அதே போல் பலவீனமானவன் பாதகமான சூழ்நிலையை கூட தாங்கிக்கொள்ளும்ம னவலிமை இன்மையில் கவலைப்படுகி றான் அல்லது துன்பப்படுகிறான்.

உலகத்தில் வெற்றி, அழகு, சுகம், அமைதி பெற விரும்புவன் தனக்கு எதிரான பாதகமான சூழ்நிலையினை. சரியான கண்ணோட்டத்துடன் நோக்கி எதிர் கொண்டு, தமக்கு சாதகமான சூழ் நிலையாக மாற்றிக் கொள்ள முடியும். அதற்கு பயிற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். இல்லை என்றால் உலகின் அனைத்து பொருட்களும். வாழ்வில் தான் சந்திக்கும் அனைத்து சூழ்நிலைகளையும் கண்டு கலங்கி பயந்து சுகத்தையும் அமைதியையும் இழந்து விடுவான்.

உணர்வுகளை செயல் வடிவமாக மாற்றினால் தான் அந்த உணர்வுகள் நன்கு வளரும். மனதள வில் உதவி செய்திட நினைத்தால் மட்டும் போதாது. மனதில் நினைத்தப்படி தேவைப் படுவோருக்கு தக்க உதவி செய்யும் போது தான் அது சேவை என்ற பெயர் கொள்ளும். நோய்ப்பட்ட ஒருவனுக்கு சேவை செய்ய நினைப்பவர், அந்த நோயாளியை மருத்துவமனைக்கு அழைத்து செல்ல வேண்டும். மருந்து மாத்திரைகளை வாங்கி கொண்டு வந்து தர வேண்டும். தேவைப்பட்டால் நோயாளிக்கு மருந்து ஊட்டவும் செய்ய வேண்டும். இவ்வ ளவும் செயல் வடிவம் பெறும் போது தான் அது சேவையாகக் கருதப்படும். இவ்வித சேவையால் மட்டுமே நோயா ளிக்கும் சேவை செய்தவருக்கும் நன்மை ஏற்படும்.

பசித்தவனுக்கு உணவு. நிர்வாண மாய் நிற்பவனுக்கு ஆடை, மூடனுக்கு கல்வி,முடவ னுக்கு கைத்தடி, நோயாளிக்கு மருத்து கொடுக்க வேண்டும் என நினைத்தால் மட்டும் போதாது. நினைத்தப்படி கொடுத்தால் தான் சேவை எனப்ப டும். உணர்வு மட்டும் ஒருவனை இன்புறச் செய்யாது. உதவும் போது தான் அனைவருக்கும் இன்பம் பிறக் கும். பிறர் நலன், பொது நலன் கருதி எந்தளவு நாம் சுயநலத்தை தியாகம் செய்கிறோமோ அப்போது நாம் தெய்வத் தன்மையை அடைகிறோம். அதிகாரத்தை செலுத்தி பிறரை அடிமைப் படுத்தாமல், பதவி மூலம் அனைவருக்கும் உதவி செய்தல் தெய்வ தன்மையாக கருதப்படும்.

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

**19740) சனிபகவானை நேரில் நின்று வழிபடலாமா?**

எந்த சுவாமியையுமே நேரில் நின்று தரிசிக்கக்கூடாது. இறைஅருள் என்பது கடைக்கண் பார்வையினால் கிடைப்பது. இறைவன் தீயவர்களை மட்டுமே நேரில் பார்த்து சுட்டெரிக்கிறார். நாம் நல்லவர்கள் தானே. ஒரு புறமாக நின்று கடைக்கண் பார்வை பெற்று நலம் பெறுவோமே.

**19741) கடவுளுக்குக் கூட திருஷ்டி உண்டா?**

கிடையாது. எனினும் பெரிய அளவில் அலங்காரம் தீபாராதனை போன்றவை செய்யப்படும் போது விபூதியினால் திருஷ்டி சுற்றி சூடத்தின் மீது போடுவார்கள். எதற்காக என்றால், இவ்வளவு பெரிய பூஜையைச் செய்கிறார்களே என்று நமக்கு திருஷ்டி தோஷம் ஏற்படாமலிருப்பதற்காகத்தான்

**19742) வீட்டில் பகல், இரவு பார்க்காமல் எந்நேரமும் பஞ்சாங்கம் ஜோதிடம் தொழிலாகச் செய்வது சரியா?**

சூரியன் அஸ்தமனமான பிறகு பஞ்சாங்கம் ஜோதிடம் பார்க்கமாட்டார்கள். நவக் கிரங்களுக்குத் தலைவன் சூரியன். அவன் மறைந்துவிட்டால் கிரகங்கள் அனைத்திற்குமே பலம் கிடையாது. எனவே இரவில் ஜோதிடம் சொன்னால் பலிக்காது என்பார்கள். இரவில் ஜோதிடம் பார்ப்பதைத் தவிர்ப்பது நல்லது.

**19742) குல தெய்வ வழிபாடு எந்த அளவுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது?**

"குலம்' என்றால் "குடும்ப பாரம்பரியம்' என்று பொருள். நமது குடும்பத்திற் கென்று ஒரு வழிபாட்டு தெய்வத்தினை நமது முன்னோர்கள் வைத்திருக்கிறார் கள். தனது அடுத்த சந்ததியினர் நன்றாக இருக்க வேண்டும் என்பதே குல தெய்வ வழிபாட்டின் முக்கியக் குறிக்கோள். குழந்தைகளுக்கு முடி எடுப்பது, காது குத்து வது, திருமணப் பட்டுப்புடவை, திருமாங்கல்யம் போன்றவற்றை வைத்துக் குல தெய்வ பூஜை செய்வது எல்லாமே நம் குலம் தழைக்கச் செய்யப்படுவதாகும்.

**19743) "சமாராதனை '' எனும் சொல்லிற்கு விளக்கம் அளிக்கவும்?**

அற நெறியில் நிற்பவர்கள் வேதம், பயின்றவர்கள், நமக்கு நல்லறம் போதித்த வர்கள். இவர்களையெல்லாம் தெய்வமாக எண்ணி பூஜிக்க வேண்டும். ஆராதனை என்றால் பூஜை. ஸம்+ ஆராதனை= ஸமாராதனை. ""ஸம்'' என்றால் "சிறந்த முறையில்' என்று பொருள். முன்கூறிய பெரியவர்கள் நம் வீட்டிற்கு வரும் போதோ அல்லது நாம் அவர்களை அழைத்தோ சமாராதனை செய்ய வேண்டும். அவர்களின் பாதங்களைக் கழுவி சந்தனம், குங்குமம் இட்டு மலர்களினால் திருவடிகளில் அர்ச்சனை செய்து சிறந்த முறையில் உணவு அளிப்பதே சமாராத னையாகும். இதனை அடியவர்களுக்கு அன்னம் பாலித்தல், மாகேஸ்வர பூஜை என்றெல்லாம் கூட அழைப்பார்கள். திருநீலநக்கர், சிறுத்தொண்டர் போன்ற நாயன்மார்கள் அடியவர்களுக்கு அன்னம் பாலிப்பதையே தமது ஆயுட்பணியா கக் கொண்டிருந்தார்கள்.

# அளுத்மாவத்தை ஆனந்த ஐயப்ப ஆலய வருடாந்த தேர்த் திருவிழா

கொழும்பு 15, அளுத்மாவத்தை ஆனந்த ஐயப்ப தேவஸ்தான வருடாந்த தேர்த் திருவிழா எதிர்வரும் 25 ஆம் திகதி கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

இலங்கைத் திருநாட்டில் அளுத்மாவத் தையில் அருள் சுரக்கும் ஆனந்த ஐயப்பா சுவாமி ஆலயம் அமைந்துள்ளது. எதிர்வ ரும் 25 ஆம் திகதி காலை 5.45 மணிக்கு மஹா கணபதி ஹோமாம், அஷ்டாபிஷே கம் நடைபெற்று மாலை 5.30 மணிக்கு ஆச்சார்ய வரணம் கொண்டு வருதல் மற்றும் கொடியேற்றதோடு திருவிழா ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து ஐந்து நாட்களும் ஆனந்த ஐயப்பனுக்கு கேரளா தர்ம சாஸ்தா சன் னிதானத்தில் நடைபெறும் ஆகம விதி முறைகேற்ப விஷேட பூஜைகளோடு, சத் தியமான பொண்ணு பதினெட்டாம் படி பூஜைகளும் இடம் பெற்று 6ம் நாளான ஞாயிற்றுக்கிழமை 30.07.2023 அன்று காலை கணபதி ஹோமாம், அஷ்டாபிஷேகம், திரு பள்ளி எழுச்சி, ஆராட்டு

என்பன நடைபெறும். தொடர்ந்து காலை 9.00 மணிக்கு ஆனந்த ஐயப்ப சுவாமி தேரேறி அளுத் மாவத்தை வீதியோடு முகத்துவாரம் காவல் நிலைய வழியாக ஸ்ரீ மகா விஷ்ணு கோவிலை சென்றடைந்து மட்டக்குளி



விஸ்வைக் சுற்று வட்டத்தினூடக மீண்டும் அளுத்மாவத்தை வழியாக ஆலயத்தை வந்த டையும்.

அன்று பகல் விஷேட பூஜா வழி படுக ளோடு கொடியிறக்கம், கலசாபிஷேகம் என்பன நடைபெறும். இதை தொடர்ந்து திருவிழா இனிதே நிறைவு பெறும். அனைத்து பக்த உள்ளங்களையும் ஆலய விஷேட பூஜை வழிபாடுகளில் கலந்து கொண்டு ஐயனின் பூரண ஆசியை பெற்று கொள்ளுமாறு ஆலய அறங்காவலர் சபை கேட்டு கொண்டுள்ளது.

# மட்டக்குளி ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய பாற்குடபவனி

கொழும்பு 15, மட்டக்குளி பேர்குசன் வீதி, 279ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள ஸ்ரீ பத் ரகாளியம்மன் ஆலயத்தின் பாற்குடபவனி எதிர்வரும் 22 ஆம் திகதி காலை 7.30 மணிக்கு முனிஸ்வரர் சன்னிதானத்தில் இருந்து ஆரம் பமாகும். அதனைத் தொடர்ந்து வீதி வலம் வரும் ஊர்வலம் ஆலயத்தை சென்றடைந்த தும் பக்தர்களுக்கு தங்கள் திருக்கரங்களால் பால் அபிஷேகம் செய்வதற்கு வாய்ப்பு வழங் கப்படும்.

# சிவப்பிராப்தி நிலை எய்திய நகுலேஸ்வர குருக்களுக்கு அனுதாபம்

சிவாகமகலாநிதி" கீரிமலை நகுலேஸ்வர பெருமான் ஆதீன கர்த்தர் இராஜஸ்ரீ. கு. நகு லேஸ்வர குருக்கள் தனது 98 வயதில் சிவப்பி ராப்தி நிலை எய்தினார் எனும் செய்தி அறிந்து மிகவும் கவலை அடைந்தோம்.

இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வர குருக்களும் இந்துக் குருமார் அமைப்பின் செய லாளர் சிவஸ்ரீ. ச. சாந்தரூபக்குருக்களும் இவ ருக்கு அனுதாபங்களை தெரிவித்துள்ளார்கள்.

ஈழத்தில் மூத்த சிவாச்சாரிய பெருந்தகை யாக மிளிர்ந்தவர். அன்புடன் அனைவருடனும் பழகும் பண்பாளர்.

நகுலேஸ்வர பெருமான் மீது தீராத காதல், பற்று, அன்பு, நம்பிக்கை, உறுதி கொண்டவர். நிறைவான பெருமகன்.

நகுலேஸ்வர பெருமானாரின் ஆலய ஒவ்வொரு திருப்பணியிலும் குருக்களின் வகி பாகம் யாராலும் மறந்திட முடியாது. என்றும் நிலைத்திருக்கும் இறை சேவை.

ஊரவர்களினால் மிகவும் நேசிக்கப்பட்டவர்.

பாரத தேசத்தின் மரியாதைக்கும் உரியவர்.

தர்மபுரம் ஆதீனம் நட்சத்திர 27 வது குரு மணிகள் அவர்களினால் 13.12.2021 அன்று நம்பியாண்டார் நம்பி ஆலய கும்பாபிஷேக நாளன்று

சிவாகமகலாநிதி எனும் சிறப்புப்பட்டத் தினை வழங்கி கௌரவம் செய்த பொழுது, அந்த கௌரவத்தினை இந்திய அரசின், யாழ்ப்பாணம் இந்திய தூதர் நட்ராஜ் குருக்க ளின் இருப்பிடம் சென்று வழங்கி கௌரவம் செய்தமை இதற்கு சான்று.

குருக்களது ஆத்ம சிவப்பிராப்திக்கு அன்பே உருவான பரம்பொருளான இறைவனின் பாதம் பணிந்து இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் எமது பிரார்த்தனை செய்கிறோம்.

துயர்தனை அடைந்துள்ள அத்தனை அன்புள் ளங்களுடன் எமது ஆறுதலை பகிர்ந்து கொள் கிறோம்.

## கீரிமலை நகுலேஸ்வர ....

யாத்திரை நேற்று (16) பி.ப 3.00 மணியளவில் நகுலேஸ்வரத்திலிருந்து ஆரம்பமாகியது.

யுத்தம் காரணமாக பல வருடங்கள் நித்திய, நைமித்திய பூசை வழிபாடுகளின்றி அழிவடைந்த நிலையில் காணப்பட்ட ஆலயத்தை, நகுலேஸ்வரக்குருக்களின் அயராத முயற்சியினால் 2009ஆம் ஆண்டு முதல் ஆலயத்துக்கு சென்றுவர அடியவர்களுக்கு அனுமதி பெற்றுக் கொடுக்கப்பட்டது.

திருக்கைலாயப் பரம்பரைத் தருமை ஆதீனத்தின் நட்சத்திர குருமணிகள், ஸ்ரீலஸ்ரீமாசிலாமணி தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் சிறப்புக் கௌரவத்துடன் "சிவாகம கலாநிதி" எனும் சிறப்புப்பட்டம் தருமையாதீனத்தினால் நகுலேஸ்வர ஆதீன கர்த்தா இராஜராஜ ஸ்ரீ.நகுலேஷ்வரக்குருக்களுக்கு வழங்கப்பட்டது.

இந்திய துணைத்தூதர் ராகேஷ் நட்ராஜ் ஜெயபாஸ்கரனால் இந்த விருதுக்கான பட்டயமும் தங்கப்பதக்கங்களும், பொற்கிழியும் நகுலேஷ்வரக்குருக்களுக்கு அவரது இல்லத்தில் வைத்து வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

2012 ஆம் ஆண்டு தை மாதம் சிவ ஸ்ரீ.நகுலேஷ்வரக்குருக்கள் பொறுப்பில் ஆலயத்தில் குடமுழுக்கு நடைபெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

## ஒன்றரை வயது....

மூடி தொண்டைக்குள் இறுகி உயிரிழந்துள்ளது. தலஹாகம, கஜுஹேனை 195ஆம் இலக்க வீட்டில் வசித்து வந்த கே.ஜி. நெஹென்சா சேனாதீர என்ற குழந்தையே இவ்வாறு பரிதாபமாக உயிரிழந்துள்ளது.

தலையிடிக்காக பூசும் சிறிய களிம்பு குப்பியின்மூடியொன்றே இவ்வாறு தொண்டையில் இறுகியுள்ளது. சம்பவத்தின் போது அவரது தாயார் சமையலறையிலும், குழந்தை 07 வயதுடைய மூத்த சகோதரனுடனும் வீட்டில் இருந்துள்ளது. இவரது பாட்டி வீட்டுக்கருகிலுள்ள காணியில் தேயிலை கொழுந்து பறிக்க சென்றுள்ளார்.

சிறிய தங்கையின் வாய்க்குள் போட்ட மூடி தொண்டையில் சிக்கியிருப்பதைக் கண்ட அண்ணன் அதை அகற்ற முயன்று தோல்வியடைந்தார். இதை அண்ணன் சத்தம் போட்டு தாயிடம் கூற, தந்தை, பாட்டியும் வந்து தொண்டையில் சிக்கிய மூடியை எடுக்க முயன்றனர். பின்னர், சிறுமியை கம்புருபிட்டிய ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு சென்றனர்.வைத்தியசாலைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே குழந்தை உயிரிழந்திருந்ததாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

## Ceftriaxone மருந்தின்...

அவர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளதால் இந்த வைத்தியசாலைகளில் இந்த மருந்து பாவனை தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர், மருந்துப் பொருட்கள் ஒழுங்குப்படுத்தல் அதிகார சபை, மருந்துகள் பிரிவுக்கு பொறுப்பான மேலதிக செயலாளர், மருத்துவ வழங்கல் பிரிவு பணிப்பாளர் ஆகியோரின் ஆலோசனையின் பேரில், நோயாளிகளின் பாதுகாப்பு கருதி இவ்விரு மருத்துவமனைகளுக்கும் வழங்கப்பட்ட (Ceftriaxone) தொகுதி பரிசோதனைக்காக ஆய்வு கூடத்துக்கு அனுப்பப்பட்டு, தரப் பரிசோதனை வரும் வரை இரு வைத்தியசாலைகளிலும் பயன்பாட்டுக்கு வெவ்வேறு தொகுதிக்குரிய மருந்துகளை வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டதாக சுகாதார பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

## முழுமையான...

விசேட வைத்திய நிபுணர்களுடன் கலந்துரையாடிய போதே சுகாதார பணிப்பாளர் நாயகம் இதனை தெரிவித்தார்.

இந்நிகழ்வில் சுகாதார சேவைகள் பிரதிப்பணிப்பாளர் நாயகம், (மருத்துவ விநியோகம்), பிரதிப் பணிப்பாளர் நாயகம் (ஆய்வகங்கள்) ,சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம்.( மருத்துவ சேவைகள்) பணிப்பாளர் (மூன்றாம் நிலை பராமரிப்பு சேவைகள்) ஆகியோர் கலந்து கொண்டனர்.

மேலும் இந்த ஐவர் கொண்ட குழுவின் அறிக்கை இந்நாட்டிலுள்ள மருத்துவமனை அமைப்பின் மூலம் மக்களுக்கு சிறந்த சுகாதார சேவைகளை வழங்குவதற்கு உதவியாக இருக்குமென்றும் சிகிச்சைக்காக வரும் அனைத்து நோயாளிகளும் நலமுடன் திரும்புவதையே எதிர்பார்ப்பாக கொள்வதாகவும் அவர் தெரிவித்தார்.

சர்ச்சைக்குரிய மரணங்கள் குறித்து ஊடகங்களில் செய்திகள் வெளியாகி வருவதால் மக்கள் சிகிச்சைக்காக மருத்துவமனைகளுக்கு வருவதில் ஆர்வம் காட்டுவதில்லை யென்றும் மருத்துவமனைகளால் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சுகாதார சேவைகள் ஒரு போதும் பாதிப்படையவில்லையெனவும் நம்பிக்கையுடன் தெரிவிப்பதாக அவர் கூறினார்.

## நாட்டின் நிதி....

நியமிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

இந்த குழுவின் செயற்பாட்டுக்கு ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் நல்லெண்ணத்துடன் பங்களிக்க முடியுமென எதிர்க்கட்சித் தலைவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான சாகர காரியவசம் தலைமையில், நாட்டின் நிதி வங்குரோத்து நிலைமை தொடர்பில் ஆராய்வதற்காக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் அண்மையில் குழுவொன்றும் நியமிக்கப்பட்டது. இருப்பினும், ஐக்கிய மக்கள் சக்தி உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் அந்த குழுவிலிருந்து விலக முடிவு செய்தன.

இவ்வாறானதொரு பின்னணியில், இக்குழுவுக்கு பதிலாக, எதிரணியினரால் மாற்றுக் குழு அமைக்கப்படுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்துள்ளார்.

## இந்தியா அழுத்தம்....

நேற்று (16) நடைபெற்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தும் இந்தியாவின் வகிபாகம் பற்றிய கலந்துரையாடல் நிகழ்வை தலைமை தாங்கி கருத்து தெரிவிக்கும் போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மாகாண சபை அதிகாரங்களுடன் முழுமையாக நடைமுறைபடுத்த இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும். இலங்கையில் வடக்கில் போர் நிறைவுக்கு வந்தவுடன் வீட்டுத்திட்டம் அனைவருக்கும் வந்தது. சுமார் 05 இலட்சம் ரூபாய்க்கு 40,000 ஆயிரம் வீடுகள் இதன் மூலம் கட்டப்பட்டது. இருப்பினும் அனைவரும் இந்த வீட்டு திட்டத்தை ஏற்றுகொள்ளவில்லை ஆனால் அதனை பெற்றவர்கள் தமது வீடுகளை புனரமைத்து நேற்று அதன் பெறுமதியை 50 இலட்சம் ரூபாயாக மாற்றியிருக்கின்றனர்.ஆகவே இது போல தான் இந்த பதின்மூன்றாவது திருத்தசட்டமும் இந்தியாவால் வழங்கப்பட்டது. இதனை நாங்கள் முதலில் பெற்று விட்ட பின்னரே நாம் எமது இறுதி தீர்வினை நடைமுறைபடுத்தலாம்.

எம்மால் இதனை கூட ஒற்றுமையாக கடிதம் ஒன்றை வரைந்து மோடிக்கு அனுப்பமுடியாது இருக்கின்றோம்.

ஆக இன்று இந்த அதிகார பகிர்வு இயக்கம் மாற்று யோசனை உள்ள அனைவரையும் ஒன்றிணைத்து சிறந்த விடயமாகும்.

எதிர்வரும் காலங்களில் இந்திய பிரதமர் மோடியை சந்திக்கும் போது, இதன் அழுத்தம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் மீது தெளிவுபடுத்தலாக இருக்க வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## எதிரணியின்...

தொடர்பாக திட்டமிட்டு பொய் பிரசாரங்களை சிலர் மேற்கொண்டு வருவதாகவும் அவை அனைத்தையும் நிரூபிக்கவுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

தாம் இதுவரை 08 அமைச்சுப் பதவிகளை வகித்துள்ளதாகவும் சுகாதார அமைச்சராக நாட்டில் 22 இலட்சம் மக்களின் சுகாதாரம் தொடர்பான பொறுப்பை நிறைவேற்றுவதற்கு அர்ப்பணிப்புடன் உள்ளதாகவும் தெரிவித்தார்.

## Online மூலமாக....

அந்த திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேற்படி விண்ணப்பங்களின் 5294 பேர் ஒரு நாள் சேவையை பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பங்களை அனுப்பியுள்ளதுடன் மேலும் 24 ஆயிரத்து 285 பேர் வழமையான முறைமையில் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

ஒன் லைன் மூலமாக கடவுச்சீட்டுக்கு விண்ணப்பிக்கும் நடைமுறை கடந்த மாதம் 15 ஆம் திகதி முதல் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

## மலையக தமிழருக்கு...

வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

உலக வங்கியின் அனுசரணையுடனும், பெண்கள் மற்றும் குழந்தைகள் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் நெறிப்படுத்தலின் கீழ் சிறுவர்களின் நலன் கருதி பொகவந்தலாவ டின்சின் தோட்டப் பகுதிகளில் நவீன தொழில்நுட்பம் கொண்ட சிறுவர் அபிவிருத்தி நிலையம் (15) திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கலந்துக் காண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.அவர் மேலும் தெரிவிக்கையில்,

" இலங்கையில் இவ்வருடம் சனத்தொகை கணக்கெடுப்பு நடைபெறவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தலும் வெளியிடப்பட்டுள்ளது. இறுதியாக நடத்தப்பட்ட சனத்தொகை கணக்கெடுப்பின்போது மலையக தமிழர்கள் பலர், இலங்கை தமிழர்கள் என்பதற்குள் உள்வாங்கப்பட்டுள்ளனர். இதனால் மலையக தமிழர்களின் எண்ணிக்கை குறைவடைந்துவிட்டது. சுமார் 08 லட்சத்து 50 ஆயிரம் பேரே பதிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, மலையக அரசியலில் மாற்றம் வரவேண்டும் என்றால் அதற்கான நடவடிக்கை அவசியம். மக்களுக்கு சேவை செய்யவே நாம் வந்துள்ளோம். அதற்காகவே மக்கள் வாக்களிக்கின்றனர். சேவை வழங்க வேண்டியது எமது பொறுப்பாகும். எனவே, அரசியல்வாதிகளை கடவுளாக பார்க்கும் நிலை மாற வேண்டும். சமூக நீதி கோட்பாடு முக்கியம். " என்றார்.

## தமிழ் மக்களுக்கு....

தமது பல்வேறு தேவைகளுக்காக இவ்வீதியை நாளாந்தம் பயன்படுத்தும் கிராஞ்சி, வலைப்பாடு வேரவில், பொன்னாவெளி மக்களின் தேவைகளை இனங்காணவும் அவற்றுக்கு தீர்வை பெற்றுக் கொடுப்பதற்குமாக பல தடவைகள் நான் மேற்கொண்ட பயணங்களில் இந்த வீதியை புனரமைப்ப தற்கான வேண்டுதல்களே பிரதானமாக முன் வைக்கப்பட்டி ருந்தன.

மாற்று தரப்பினர் இவ்வீதி புனரமைப்பை அரசுத்தரப்பு கவனம் செலுத்தாதிருப்பதாக கூறி இதற்காக நான் மேற்கொண்ட முயற்சிகளையும் இனத்துவ நிலைப்பட்டு மக்களை சிந்திக்கத் தூண்டி கையில் கிடைத்ததையும் தட்டி வீழ்த்தும் அரசியலை தொடர்ந்தார்களே தவிர எனது முயற்சிகளுக்கு ஒத்துழைப்பவர்களாக எந்த தமிழ் தலைவர்களும் முன்வரவில்லை.

எதையாவது மக்களுக்கு கிடைக்கச் செய்து அதனை தமக்கு வாக்காக மாற்றுவதற்கு பதில் எதுவும் தமிழ் மக்களுக்கு கிடைக்காமல் பார்த்துக் கொள்வதன் மூலம் அதனை சிங்கள தேசத்துக்கெதிராக தமிழ் மக்களை சிந்திக்க தூண்டி தமது வாக்கு வங்கியை பாதுகாக்க முயன்றமையே தமிழ் மக்களின் அரசியல் வரலாறாக இன்று வரை தொடர்கிறது.

இது மக்களின் மனங்களில் வெறுப்பையும் விரக்தியையும் தூண்டி சக இனங்கள் நாட்டில் இருக்கும் வரை தமிழ் மக்களின் வாழ்வில் விடிவு ஏற்படாது என்கிற சுலோகத்தையே யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்ட இந்த 14 ஆண்டு காலத்தின் பின்பும் வலிந்து திணிக்க முற்படுகிறார்கள்.

இந்த சுலோகத்தை தமிழ் தேசத்தின் தலைவர்கள் அனைத்து இன மக்களுக்கும் அனைத்தும் கிடைக்க இணைந்து பயணிப்போம் என்பதாக மாற்றி உச்சரிக்காமல் எமது மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடப்போவதில்லை என்பதை நாம் அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார்.

## பொதுஜன... (02 ஆம் பக்கத் தொடர்)

அவர் குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டைக் கட்டியெழுப்புவதற்காக பொதுஜன பெரமுன கட்சி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வருவதாகவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.

## சூட்டுக்... (02 ஆம் பக்கத் தொடர்)

செய்கையில் ஈடுபட்டு வருவதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர். யானையின் மரணம் தொடர்பாக வன சீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## புனர்வாழ்வு... (02 ஆம் பக்கத் தொடர்)

பொலிஸார் தெரிவித்தனர்.

புனர்வாழ்வு பெற்று வரும் 34 பேர் பாதுகாப்புக்காக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## நீதிக்கு சவால்...

வழிபடச் சென்ற தமிழ் மக்கள், பிக்குகள் சிங்கள மக்கள் மற்றும் பொலிஸாரால் இடையூறு விளைவிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டமை தொடர்பில் எழுப்பிய கேள்விக்கே அவர் மேற்கண்டவாறு பதிலளித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில், இது வெட்கித் தலைகுனிய வேண்டிய செயற்பாடு. இந்தப் பிரச்சினைக்குப் பின்னால் இருக்கும் குழுவினரை அடையாளம் காண வேண்டும். அந்தக் குழுதான் தமிழ் மக்களையும் பௌத்த சிங்கள மக்களையும் முட்டி மோதவிட்டு வேடிக்கை பார்க்க எண்ணுகின்றது. இது நாட்டுக்கு அவமானத்தை ஏற்படுத்தும் செயல். அனைத்துக்கும் விரைந்து இணக்கமான சூழலை ஏற்படுத்த வேண்டுமென தெரிவித்தார்.

## கல்கிஸ்சையிலிருந்து...

தொடரலாமென்றும் ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

வடக்கு நோக்கிச் செல்லும் ரயிலில் 10 குளிரூட்டப்பட்ட பெட்டிகள் தொலைக்காட்சி வசதிகளுடன் இருக்கும். டிக்கெட் விலை 4,000 ரூபா என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இலங்கை ரயில்வே இணையத்தளத்தின் ஊடாக முன்பதிவு செய்யலாம். பயணிகளுக்கு உணவும் வழங்கப்படுமென ரயில் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, ஆறு மாதம் ரணில் பாதை புனரமைப்புகள் நிறைவடைந்து கொழும்பு கோட்டையிலிருந்து காங்கேசன்துறை வரையிலான ரயில் பாதை தற்போது திறக்கப்பட்டுள்ளது.

## ஆறு மாதங்களில் ....

அந்த வகையில் இந்த ஆறரை மாத காலத்தில் 1135 வாகன விபத்துக்கள் இடம் பெற்றுள்ளதாகவும் அவற்றில் 1,202 பேர் மரணமடைந்துள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார். இவ்வாறு மரணமடைந்துள்ளோர்களில் அதிகமானோர் மோட்டார் சைக்கிளில் பயணித்தவர்களே என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## ஆசிய 'வூஷு'...

நடைபெற்ற ஆசிய 'வூஷு' (WUSHU) போட்டியில், பங்குபற்றி இந்த சாதனையை அவர் படைத்துள்ளார்.

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்துக்குற்பட்ட கம்பளை பகுதியை சேர்ந்த கணேசன் சுதாகரன் என்ற இளைஞரே இந்த சாதனையை படைத்துள்ளார்.

சுதாகரன் தனது ஆரம்பக் கல்வியை கம்பளை இந்து கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை கண்டி ரணபிம ரோயல் கல்லூரியிலும் பயின்றுள்ளார்.

இலங்கைகக்கும் மலையக மண்ணுக்கும் பெருமை சேர்த்த சுதாகரனுக்கு பல தரப்பினரும் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்து வருகின்றனர்.

## தடை செய்யப்பட்டிருந்த ஐந்து... (02 ஆம் பக்கத் தொடர்)

எவ்வாறாயினும் இந்த அமைப்புக்களுக்கான தடைகள் தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளதுடன் தொடர்ந்தும் புலனாய்வுப் பிரிவினர் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன் அந்த அமைப்புகளின் செயல்பாடுகள் அந்த அமைப்புகளின் நிதி சேகரிப்பு உள்ளிட்ட விடயங்களில் புலனாய்வுப் பிரிவினர் அதிதீவிர கண்காணிப்பினை மேற்கொள்ளவுள்ளனர்.

விதிக்கப்பட்டுள்ள கடுமையான நிபந்தனைகள் மீறப்படுமானால் எந்த சந்தர்ப்பத்திலும் அந்த அமைப்புகள் மீதான தடை மீண்டும் நடைமுறைப் படுத்தப்படும் என்றும் பாதுகாப்பு அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

## யாழ். பல்கலை மாணவன்... (02 ஆம் பக்கத் தொடர்)

தாயும், தந்தையும் நேற்று வேலைக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர். இதன் பின்னர் மதியம் 11 மணியளவில் தந்தை வீடு திரும்பியுள்ளார். இதன் போது பல்கலை மாணவன் தவறான முடிவு எடுத்து உயிரிழந்த நிலையில் காணப்பட்டுள்ளார்.

சடலம் பிரேத பரிசோதனைக்குக்காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு இந்த இறப்பு விசாரணைகளை திடீர் இறப்பு விசாரணை அதிகாரி

ந.பிறேம்குமார் மேற்கொண்டார்.

இதன் பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வீட்டில் நேற்று இறுதிக் கிரியைகள் மேற்கொள்ளப்பட்டு கோம்பயன்மணல் இந்து மயானத்தில் உடல் தகனம் செய்யப்பட்டுள்ளது.

## கோழி இறைச்சியின்... (02 ஆம் பக்கத் தொடர்)

விலை 1,450 ரூபாவாக குறைந்துள்ளதாக அதன் தலைவர் அஜித் குணசேக்கர தெரிவித்துள்ளார்.

இதேவேளை நாட்டில் காய்கறிகளின் விலை தொடர்ந்து உயர்ந்து வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அண்மையில் பெய்த மழையினால் மரக்கறிகளின் விலைகள் அதிகரித்துள்ளதாக மெனிங் சந்தை சங்கத்தின் தலைவர் எச்.எம். உபசேன தெரிவித்துள்ளார்.

அத்துடன் பழங்களின் விலையும் அதிகளவில் காணப்படுவதாக மெனிங் சந்தை சங்கத்தின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## மற்றுமொரு உரத்தையும்... (02 ஆம் பக்கத் தொடர்)

குறிப்பிட்டுள்ளார். அதேவேளை, கடந்த பெரும் போகத்தில் விவசாயிகளுக்கு உரம் கொள்வனவு செய்வதற்காக வவுச்சர்கள் வழங்கப்பட்ட போதும் எதிர்வரும் பெரும் போகத்தில் வவுச்சர்களுக்குப் பதிலாக பணத்தை வங்கியில் வைப்பு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.அதற்கான வாய்ப்பு வழங்கப்பட்டுள்ள நிலையில் விவசாயிகள் தமக்கான உரத்தை தனியார் நிறுவனங்களிலோ அல்லது அரசாங்க உர கூட்டுத்தாபனத்திலோ தமக்கான உரத்தை கொள்வனவு செய்ய முடியும் என்றும் அந்த பணத்தில் இரசாயன உரம் அல்லது சேதனப்பசளை என விவசாயிகள் விரும்பியதை கொள்வனவு செய்ய முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

கடந்த சிறு போகத்தின் போது விவசாயிகளுக்கு உரத்தை கொள்வனவு செய்வதற்காக ஒரு ஹெக்டயாருக்கு 20 ஆயிரம் ரூபாவும் இரண்டு ஹெக்டயாருக்கு 40 ஆயிரம் ரூபா என வவுச்சர் மூலம் வழங்கப்பட்டது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## அநு./ ஈத்தல்வெட்டுனுவெவ... (02 ஆம் பக்கத் தொடர்)

முதலாம் ஆண்டுமுதல் உயர்தரம் வரை கல்வி பயிலும் 480 மாணவர்களை கொண்ட இப்பாடசாலையில் மிக நீண்ட காலமாக வகுப்பறைகளின் குறைபாடு காணப்படுவது தொடர்பில் பாடசாலை சமூகம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மானிடம் முறையிட்டதை அடுத்தே இக்கட்டிடம் நிர்மாணிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. பாடசாலை அதிபர் யூசுப் தவ்பீக் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான், கௌரவ அதிதியாக குவைத் நாட்டு தூதுவர் கலாப் எம் புதைரின் இலங்கை பிரதிநிதி பிர்தவுஸ் (நளீமி) அவர்களும் சிறப்பு அதிதியாக அல் ஹிமா இஸ்லாமிக் சேர்விஸ் அமைப்பின் பணிப்பாளர் நூருல்லாஹ் (நளீமி) அவர்களும் கலந்துகொண்டு அடிக்கல்லினை நாட்டி வைத்தனர். பாடசாலை பெற்றோர், பாடசாலை அபிவிருத்திக்குழு, பழைய மாணவர்கள், பிரதேச அரசியல் பிரமுகர்கள் என பலரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## ஜனாதிபதியுடன் TNA அடுத்த... (02 ஆம் பக்கத் தொடர்)

இடம்பெற்றுள்ள நிலையில் இது அடுத்த கட்ட பேச்சு வார்த்தையாக அமையவுள்ளது.

மேற்படி முன்னைய பேச்சுவார்த்தைகளில் முன்வைக்கப்பட்ட பிரச்சனைகளுக்கு எதிர்வரும் ஜுலை 31 ஆம் திகதிக்கு முன்னர் இறுதித் தீர்வு பெற்றுத் தருவதாக ஜனாதிபதி அதன் போது உறுதியளித்ததாகவும் ராஜமாணிக்கம் எம்பி தெரிவித்துள்ளார்.

அந்த வகையில் அடுத்த கட்ட பேச்சு வார்த்தையின் போது ஜனாதிபதி வழங்கும் இறுதித் தீர்வு தொடர்பில் மிகுந்த கவனத்துடன் தமிழ் தேசிய கூட்டமைப்பு எதிர்பார்த்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## இலங்கை ... (02 ஆம் பக்கத் தொடர்)

தற்போது வாய்ச் சுகாதார நிறுவனம் என்று அழைக்கப்படும் மஹரகம பல்வைத்திய கல்லூரி சுமார் ஆயிரத்துக்கும்மேற்பட்ட பற்சுகாதார ஊழியர்களைப் பயிற்றுவித்துள்ளதுடன், 443 பாடசாலைகளில் பற் சுகாதார சேவைகளை முன்னெடுத்துவருவதாகவும் சுட்டிக்காட்டிய பிரதமர், இந்த நிறுவனத்தை சர்வதேச தரத்துக்குஉயர்த்துவதற்காக நவீன நிபுணத்துவம் உள்ளிட்ட வசதிகளை வழங்குவது குறித்து கொழும்பு திட்டத்தின் கீழ் பரிசீலிக்குமாறு நியூசிலாந்திடம் கேட்டுக்கொண்டார்.

இங்கு கருத்துத் தெரிவித்த உயர் ஸ்தானிகர் மைக்கல் எபல்டன் வதிவிட தூதுவராலய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டமை இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய உறவுகளை மேலும் மேம்படுத்துவதற்கு வழிவகுக்குமெனத் தெரிவித்தார்.

## மருந்து... (02 ஆம் பக்கத் தொடர்)

முடியாதென்றும் விசேட வைத்திய நிபுணர் சமல் சன்ஜீவ தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் ஏற்றப்படும் மயக்க மருந்து தொடர்பாக பலராலும் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் கருத்து தெரிவிக்கையிலேயே இவவாறு தெரிவித்தார்.

வைத்தியசாலைகளில் பயன்படுத்தப்படும் தடுப்பூசி மற்றும் மயக்க மருந்து தொடர்பாக பல்வேறு தரப்பினரும் ஊடக சந்திப்புகளை நடத்தி கருத்து தெரிவித்து வருகின்றனர்.

அண்மையில் பேராதனிய வைத்தியசாலையில் இடம் பெற்ற எதிர்பாராத மரணங்களுக்கு தரமற்ற தடுப்பூசி மற்றும் மருந்து பொருட்கள்தானா? காரணம் என்பதை கண்டறிய தொழிநுட் குழு அமைத்து, அந்த குழு வழங்கும் அறிக்கையின் அடிப்படையிலேயே தீர்மானத்துக்கு வரவேண்டும்.


# இலங்கையிலிருந்து தொழுநோயை இல்லாதொழிக்கும் வழிமுறைகள்

LAKE HOUSE தினகரன் தினகரன் வாரமஞ்சரி

### திறந்த கட்டுரைப் போட்டி

### தொனிப் பொருள்

இலங்கையில் தொழுநோய்ப் பாதிப்பு முதன்முதலில் கண்டுபிடிக்கப்பட்டது தொடக்கம், அந்நோயைக் கட்டுப்படுத்துவதில் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் தொடர்பான வரலாற்றுத் தகவல்கள் உங்களது கட்டுரையில் உள்ளடங்கியிருப்பது அவசியம்.

### பரிசுத் தொகை

முதலாம் பரிசு: 50,000 ரூபா
இரண்டாம் பரிசு: 25,000 ரூபா
மூன்றாம் பரிசு : 15,000 ரூபா
10 பேருக்கு ஆறுதல் பரிசாக தலா 5,000 ரூபா வழங்கப்படும்

### கட்டுரையின் வடிவம்

இலங்கை தொடர்பான தகவல்களை மையப்படுத்தியதாக கட்டுரைகள் அமைந்திருக்க வெண்டும். கட்டுரைப் போட்டியில் பங்குபற்றுவதற்கு வயதெல்லை கிடையாது. கட்டுரைகள் உங்களது சுய ஆக்கமாக இருப்பதுடன், கட்டுரைக்கான ஆக்கத்திறன் வரம்புக்குள் அமைந்ததாகவும் இருப்பது அவசியம். கற்பனைகளைத் தவிர்த்து, ஆய்வுரீதியில் எழுதப்பட வேண்டும். பத்திரிகைகள் மற்றும் நூல்களில் முன்னர் வெளியான கட்டுரைகளைத் தழுவியதாக இருத்தல் கூடாது. அத்துடன் வலைதளத்தில் வெளியான ஆக்கங்களை பிரதிபண்ணுவதும் தவிர்க்கப்பட வேண்டும். உங்கள் ஆக்கத்தை கணனியில் தட்டெழுத்து செய்து அனுப்பினால் வாசிப்பதற்கு இலகுவாக இருக்கும். கையெழுத்துப் பிரதிகள் தெளிவற்றிருப்பின் அவை நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனுப்பி வைக்க வேண்டிய மின்னஞ்சல் முகவரி
shrikanth.tkn@gmail.com
editor.tkn@lakehouse.lk

முகவரி :
Editor, Thinakaran Editorial
ANCL, Lake house,
NO.35.D.R.Wijewardene Mawatha,
Colombo – 10

மேலதிக விபரங்களுக்கு
0112429277, 0772409406

சுகாதார துறைசார்ந்தவர்கள் எழுதும் கட்டுரைகள் அதிகம் எதிர்பார்க்கப்படுகிறது.

கட்டுரைகள் பேராசிரியர்கள் கொண்ட மேற்பார்வை குழுவால் பரிசீலிக்கப்பட்டே தேர்ந்தெடுக்கப்பட்டு பரிசில்கள் வழங்கப்படும்.

தேர்வாளர்களின் முடிவே இறுதி தீர்வாக இருப்பதோடு அதற்கு எதிரான காரணங்கள் ஏற்றுக் கொள்ளப்படாமல் நிராகரிக்கப்படும்.

கட்டுரைகள் அனைத்தும் ஜுலை 30 ஆம் திகதிக்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தேர்ந்தெடுக்கப்படும் சிறந்த கட்டுரைகள் தொகுக்கப்பட்டு நூலுருவாக்கப்படுவதோடு பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.







ஐக்கிய தேசிய கட்சியின் கம்பஹா மாவட்ட தொகுதி நிர்வாக குழுக்கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில ஜனாதிபதியின் பொருளாதார ஆலோசகர் ருவன் விஜேவர்தன, ஐ.தே.கவின் உபதலைவர் அகில விராஜ் காரியவசம், தொழிற்சங்க பணிப்பாளர் சமன் ரத்னப்பிரிய ஆகியோருடன் ஐ.தே.க இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ் ஆனந்த குமாரும் கலந்து கொண்டிருந்தார்.

# மூத்த ஆன்மிக குரு கீரிமலை நகுலேஸ்வரர் குருக்களின் மறைவு இந்துக்களுக்கு பேரிழப்பு

## சர்வதேச இந்துமத பீடம் அனுதாபம்



மூத்த சிவாச்சாரியாரும் பஞ்ச ஈஸ்வரங்களில் ஒன்றான கீரிமலை நகுலேஸ்வரர் தேவஸ்தானத்தின் பிரதம குருவுமான சிவஸ்ரீ நகுலேஸ்வரர் சிவாச்சாரியாரின் மறைவு இந்து மக்களுக்கு பெரும் இழப்பாகும். சிவாச்சாரியாரின் ஆன்ம சாந்திக்கு இந்து மக்கள் அனைவரும் பிரார்த்திப்போம் என சர்வதேச இந்துமத பீடம் தனது அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளது.

கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தை பல வருடங்களாக பராமரித்து ஆலய மஹா கும்பாபிஷேகத்தையும் நடத்திய பெருமைக்குரியவர். அவரது ஆன்மிக பணியை எவராலும் நிரப்ப முடியாது. சிவ பக்தர்களுக்கும் இந்து மதத்திற்கும் பெருமை சேர்த்த மூத்த குரு ஆவார். இவரின் ஆன்மா மோட்ஷமடைய இந்துக்கள் அனைவரும் சிதம்பர சிவகாமி சமேத நடராஜ பெருமானை வழிபாடு செய்வோம் என இந்துமத பீடம் சார்பாக முன்னாள் ஜனாதிபதியின் இந்துமத விவகார இணைப்பாளர் கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபுசர்மா அனுதாப செய்தியில் தெரிவித்துள்ளார்.





கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆரம்பக் கல்வி மன்றம் நடத்திய நூற்றாண்டு விழாக்கால ஆரம்பக் கல்வித்தின விழா வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆரம்பக் கல்வித்துறைக்கான பணிப்பாளர் லோஸ்ரனிலசும் சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி விரிவுரையாளர்களான விக்னேஸ்வரி கந்தசாமி ஐயர் , வரணியூர் துரை. இளங்குமரன் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# கலாசாலையில் ஆடிப்பிறப்பு விழா

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் நுண்கலை மன்றம் நடத்தும் ஆடிப்பிறப்பு விழா இன்று மாலை 2 மணிக்கு கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறும்.

கலாசாலை அதிபர் ச. லலீசன் தலைமையில் இடம்பெறும் இந்நிகழ்வில் யாழ். மாவட்ட சமுர்த்தி அலுவலக மாவட்டச் சிரேஸ்ட முகாமையாளர் ஆறுமுகம் இரகுநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுவார். நிகழ்வில் நுண்கலை மன்றக் காப்பாளர் விரிவுரையாளர் ரஜிதா சின்னத்துரை தொடக்கவுரையையும் விரிவுரையாளர் வேல் நந்தகுமார் அதிதி அறிமுகவுரையையும் மேற்கொள்வர்.

ஆடிக்கூழ் தயாரிப்பு மற்றும் விநியோகம் என்பன மரபார்ந்த அடிப்படையில் மேற்கொள்ளப் படவிருப்பதாக நுண்கலை மன்றத்தினர் தெரிவித்தனர்.



ஓய்வு பெற்ற இரு கல்வி அதிகாரிகளுடன் தமிழ், முஸ்லிம் பாடசாலைகளில் கடமையாற்றி இவ்வருடம் ஓய்வு பெற்ற 11 அதிபர்களைப் பாராட்டி கௌரவிக்கும் வைபவம் கண்டி பதியுத்தீன் மஹ்மூத் மகளிர் கல்லூரி மண்டபத்தில் சங்கத்தின் தலைவர் அதிபர் பெ. சிவக்குமார் தலைமையில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம அதிதியாகக் கண்டி கல்வி வலயப் பணிப்பாளர் திருமதி டி.சி.ஐ. அந்திரகே, கண்டி கல்வி வலய கல்வி அபிவிருத்தி உதவிக் கல்விப் பணிப்பாளர் அமீன், கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.தமிழ்ச் செல்வன் ஆகியோர் கலந்து கொண்டனர். *(படம்: மாவத்தகம தினகரன் நிருபர்)*

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## திறைசேரி உண்டியல்கள் வழங்கல்

**2023 யூலை 19ஆம் திகதி ஏல விற்பனையினூடாக 160,000 மில்லியன் ரூபாவுக்கான திறைசேரி உண்டியல்கள் வழங்கப்படும்**

திறைசேரி உண்டியல் வழங்கல்களின் விபரங்கள் பின்வருமாறு:

| முதிர்வுக் காலம் | 91 நாட்கள் | 182 நாட்கள் | 364 நாட்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐஎஸ்ஐஎன்* | LKA09123J208 | LKA18224A194 | LKA36424G195 | |
| முன்வைக்கப்பட்ட தொகை (ரூ. மில்.) | 70,000 | 50,000 | 40,000 | 160,000 |

| | |
|---|---|
| ஏல விற்பனைத் திகதி | : 2023 யூலை 19 |
| தீர்ப்பனவுத் திகதி | : 2023 யூலை 21 |
| வழங்கப்படும் திகதி | : 2023 யூலை 21 |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | : 2023 யூலை 19, புதன்கிழமை மு.ப. 11.00 |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக்குறைந்த தொகை | : ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ.5,000,000/-) அதிலிருந்து ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ.1,000,000/-) பெருக்கங்களிலிருந்து |

அரசாங்கப் பிணையங்களிலுள்ள முதனிலை வணிகர்களிடமிருந்து விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீட்டு வசதியூடாக மட்டுமே விலைக்குறிப்பீடுகள் அனுப்பப்பட வேண்டும்.

சந்தை நிலைமைகளுக்கமைய இலங்கை மத்திய வங்கி ஏலங்களில் முதிர்வுகளுக்கிடையிலான தொகைகளை மீள் ஒதுக்குச் செய்வதன் மூலம் ஒவ்வொரு முதிர்வுக்கும் முன்வைக்கப்பட்ட தொகைகளிலும் பார்க்க உயர்ந்த அல்லது குறைந்த தொகையினை ஆனாலும் முன்வைக்கப்படுகின்ற மொத்த தொகையினை விஞ்சாது ஏற்றுக்கொள்ளக்கூடும்.

**கீழ்க்காணும் முதனிலை வணிகர்களிடமிருந்தும் எந்தவொரு உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகளிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யுமாறு பொதுமக்கள் அழைக்கப்படுகின்றனர்.**

| | |
|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 |
| இலங்கை வங்கி | 2541938 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 |
| இலங்கை கொமர்ஷல் வங்கி பிஎல்சி | 2332319 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 |
| என்எஸ்பீ பண்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| மக்கள் வங்கி | 2206783 |
| சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| வெல்த் றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

* பன்னாட்டுப் பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடன் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

*வழங்கும் அலுவலகம்:*

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை,**
**கொழும்பு-1.**
**தொலைபேசி: +94112477011, தொலைநகல்: +94112477687**
**வெப்தளம்: www.cbsl.gov.lk**

# செலான் வங்கி பிஎல்சி

## பெறுமதியான சொத்துகளுக்கள் விற்பனைக்கு

| மாவட்டம் | இல. | நிலத்தின் வகை / சொத்தின் முகவரி | வகை | A: | R: | :P |
|---|---|---|---|---|---|---|
| பதுளை | 1 | இல.21, B H பண்டார மாவத்தை, கனுபெலெல்ல, பதுளை GPS Coordinates: 6.972861, 81.063806 | குடியிருப்பு வீடு | 0 | 0 | 21.00 |
| கொழும்பு | 2 | இல.133, எலகந்த வீதி, வெளிகண்ண, வாக GPS Coordinates: 6.890070, 80.148035 | விடுமுறை விடுதியாக வடிவமைக்கவும் | 4 | 1 | 15.45 |
| | 3 | இல.59/4, கொழும்பகத்தந்திரி மாவத்தை, எதுல் கோட்டை, GPS Coordinates: 6.894667, 79.908150 | வெற்று நிலம் | 0 | 0 | 22.00 |
| | 4 | இல. 545/3, இரத்ன மாவத்தை, அரவ்வல்ல, பன்னிப்பிடிய. GPS Coordinates: 6.823625, 79.932442 | வணிகக் கட்டிடம் | 0 | 3 | 15.00 |
| | 5 | இல. 5/2, மெத மாவத்தை, சிந்தமுல்ல, பிலியந்தல. GPS Coordinates: 6.816381, 79.957069 | குடியிருப்பு வீடு | 0 | 0 | 11.10 |
| | 6 | இல. 66/1, 66/2, 66/3, 66/4, சான்சி ஆராச்சி கார்டன்ஸ், கொழும்பு 12. GPS Coordinates: 6.934092, 79.860917 | வணிகச் சொத்து | 0 | 0 | 32.40 |
| | 7 | இல. 17, சமகி மாவத்தை, பொருபனை. GPS Coordinates: 6.812781, 79.890827 | வணிகச் சொத்து | 0 | 0 | 29.31 |
| | 8 | 300/2, 7ஆவது ஒழுங்கை, வெலிசஹென எஸ்டேட், மீகொட. GPS Coordinates: 6.863776, 80.048639 | குடியிருப்பு வீடு | 0 | 0 | 20.00 |
| காலி | 9 | ஸ்ரீ புஸ்பராம மாவத்தை, மீடியகொட, அம்பலங்கொட GPS Coordinates: 6.193556, 80.092750 | தொழிற்சாலை மற்றும் குடியிருப்பு வீடு | 0 | 1 | 20.39 |
| | 10 | இல.388, காலி வீதி, ஹிக்கடுவ. GPS Coordinates: 6.099722, 80.129611 | வெற்று நிலம் | 0 | 1 | 31.57 |
| | 11 | குலீகொட வீதி, உஸ்முதுலாவ சந்தி, அம்பலாங்கொட | வெற்று நிலம் | 0 | 0 | 29.00 |
| | 12 | அம்பேகம, வெளிவிட்டிய. C3B மற்றும் C3C துண்டுகள் | வெற்று நிலம் | 0 | 2 | 0 |
| கம்பஹா | 13 | கொழும்பு - கண்டி வீதி, கஜுகம பஸ்யால (16 துண்டுகள்) GPS Coordinates: 7.187882, 80.140253 | வெற்று நிலம் | 1 | 1 | 2.70 |
| | 14 | சமகி பிளேஸ், வல்பொல, அத்தனகல | குடியிருப்பு வீடு | 0 | 0 | 22.56 |
| | 15 | மாகொல தெற்கு, பியகம GPS Coordinates: 6.982613, 79.971096 | வெற்று நிலம் | 0 | 0 | 27.65 |
| ஹம்பாந்தொட | 16 | இல.128, மனஜ்ஜாவ, அம்பலன்தொட GPS Cordinates: 6.128232, 81.058507 | குடியிருப்பு வீடு | 0 | 1 | 38.50 |
| கண்டி | 17 | மறியாவத்தை எஸ்டேட், தெம்பிலிகம, உடகம, கம்பொல. GPS Coordinates: 7.137920, 80.564690 | வெற்று நிலம் | 0 | 2 | 37.40 |
| | 18 | ஹிம்புல்மல்கம, பிலிமத்தலாவ GPS Coordinates: 7.277062, 80.552719 | வெற்று நிலம் 14 துண்டு | 0 | 0 | 14.00 |
| | 19 | ஹிம்புல்மல்கம, பிலிமத்தலாவ GPS Coordinates: 7.277062, 80.552719 | வெற்று நிலம் 02 துண்டு | 0 | 0 | 15.00 |
| | 20 | இல. 23/08, முல்கம்பொல வீதி, முல்கம்பொல, கண்டி GPS Coordinates: 7.279513, 80.614225 | வெற்று நிலம் | 0 | 0 | 36.00 |
| | 21 | முருத்தலாவ வீதி, கிராகம, பிலிமத்தலாவ GPS Coordinates: 7.276442, 80.552419 | வெற்று நிலம் | 0 | 3 | 20.00 |
| குருநாகல் | 22 | இல. 210, கேகாலை வீதி, பொல்காவெல GPS Coordinates: 7.327767, 80.300226 | வெற்று நிலம் | 0 | 0 | 27.00 |
| | 23 | லேக் சைட் எஸ்டேட், H P T வீதி, குருநாகல். GPS Coordinates: 7.501091, 80.359506 | வெற்று நிலம் | 0 | 1 | 36.00 |
| மாத்தறை | 24 | கேகனாதுர, மாத்தறை GPS Cordinates: 5.965935, 80.599321 | குடியிருப்பு வீடு | 0 | 0 | 18.50 |
| | 25 | வெவ இஹலகொட, குபல்கம லேக் வீதி, கெக்கனதுர, மாத்தறை GPS Cordinates: 5.94423, 80.57843 | வெற்று நிலம் | 0 | 1 | 30.44 |
| மொணராகலை | 26 | இல. 198/2, வெல்லவாய வீதி, மொணராகலை. GPS Coordinates: 6.864953, 81.344822 | குடியிருப்புச் சொத்து | 0 | 2 | 25.90 |
| | 27 | இல. 38/4, திஸ்ஸ வீதி, மொணராகலை. GPS Cordinates: 6.868847, 81.345813 | வெற்று நிலம் | 0 | 0 | 20.00 |
| | 28 | கந்தியாய, ஒக்கம்பிடிய, புத்தல GPS Cordinates: 7.860116, 80643353 | குடியிருப்புச் சொத்து | 0 | 2 | 5.60 |
| மாத்தளை | 29 | ஹலுபுல்லன வெவ, தம்புள்ளை GPS Coordinates: 7.859991, 80.643306 | வெற்று நிலம் | 0 | 0 | 22.90 |
| இரத்தினபுரி | 30 | எல்லாவல, தொழில்துறை மண்டலம், குருவிட்ட | தொழிற்சாலை வளாகம் (குத்தகை) | 0 | 2 | 5.75 |
| | 31 | மீஹிட்டிய, இரத்தினபுரி | வெற்று நிலம் | 1 | 1 | 19.00 |
| புத்தளம் | 32 | புத்தளம் வீதி, ஆராச்சிகட்டுவ, சிலாபம் GPS Coordinates: 7.670360, 79.834418 | வணிக கட்டிடம் | 0 | 1 | 36.00 |
| | 33 | ரணவிரு பிரசன்ன மாவத்தை, ஆராச்சிகட்டுவ, சிலாபம் GPS Cordinates: 7.671081, 79.831475 | வெற்று நிலம் | 1 | 3 | 24.40 |
| | 34 | இஹல மஹாவெவ கிராமம், மஹாவெவ GPS Coordinates: 7.452893, 79.827711 | வெற்று நிலம் | 0 | 1 | 10.00 |
| | 35 | தித்தகடே, சிலாபம் GPS Coordinates: 7.579269, 79.840194 | தொழிற்சாலை வளாகம் (குத்தகை) | 4 | 3 | 39.48 |
| | 36 | மஹாவெவ வீதி, தொடுவெவ. | வெற்று நிலம் | 0 | 3 | 11.30 |
| திருகோணமலை | 37 | இல.130, இன்னர் லேன் 2, அபேயபுர, திருகோணமலை. GPS Coordinates: 8.590445, 81.213986 | குடியிருப்பு வீடு | 0 | 0 | 29.07 |
| | 38 | இல.56/2, பெராரு, கன்தலே. | வெற்று நிலம் | 1 | 0 | 5.00 |
| | 39 | இல.286/3, பெராரு வீதி, பெராரு, கன்தலே. | வெற்று நிலம் | 1 | 2 | 21.00 |
| | 40 | மட்டக்களப்பு வீதி, கிண்ணியா. | வெற்று நிலம் | 2 | 0 | 6.13 |

மேலதிக விபரங்களுக்கு மற்றும் பிரசுரிக்கப்பட்ட சொத்துக்களை பார்வையிடுவதற்கு கிழமைநாட்களில் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையில் **0112456483 / 0112456487 / 0112456459** என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். தயவு செய்து உங்கள் விண்ணப்பங்களை முத்திரையிடப்பட்ட காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் "**சொத்துக்களின் விலைமனு**" என்று குறிப்பிட்டு கீழுள்ள முகவரிக்கு 2023/07/31ம் திகதி மாலை 2.00 மணிக்குள் பதிவுத் தபாலில் அனுப்பிவைக்கவும்.

செலான் வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரூ.500/- செலுத்தி விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ள முடியும். ( A/C No. 9973-832241-145)

**முகாமையாளர் - சொத்து பிரிவு**
செலான் வங்கி பிஎல்சி
நிலை 14, செலான் டவர்ஸ்
இல. 90, காலி வீதி, கொழும்பு 03.

www.seylan.lk உள் சென்று விற்பனைக்குள்ள சொத்துக்களை பார்க்கவும்
**கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் நிராகரிக்கும் உரிமை முகாமைக்கே உரியது. நிபந்தனைக்குட்பட்டது.**

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — சனிக்கிழமை 2023.07.15 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5176 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,798,868.00
ஆங்கில எழுத்து P — வெற்றி இலக்கங்கள் 8 9 7 2 4 0

**லக்கி 7 (Lucky 7)** — சீட்டிழுப்பு இலக்கம் 0002 — வெற்றி இலக்கினம் சிம்மம் — வெற்றி இலக்கங்கள் 2 3 7 2 4 3 — L7 இலக்கம் 2 6 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,375,289.68

**ராசி சுப பலன் (Handahana)** — சீட்டிழுப்பு இலக்கம் 485 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,344,192.20
வெற்றி இலக்கினம் மீனம் — வெற்றி இலக்கங்கள் 24 40 41 53 — விசேட இலக்கினம் மீனம்

**கொவிசெத (Govisetha)** — சீட்டிழுப்பு இலக்கம் 3418 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,412,095.60
ஆங்கில எழுத்து J — வெற்றி இலக்கங்கள் 15 22 25 27

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1524 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 401,254,208.00
ஆங்கில எழுத்து P — சுப்பர் இலக்கம் 23 — வெற்றி இலக்கங்கள் 03 07 11 40
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1206 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,039,936.80
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 02 71 72 80 — விசேட எழுத்து R

ජාතික ලොතරැයි මණ්ඩලය / தேசிய லொத்தர் சபை / National Lotteries Board — வெள்ளிக்கிழமை 2023.07.14 — உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk — NLB

**மஹஜன சம்பத** — சீட்டிழுப்பு இலக்கம் 5175 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 22,528,736.00
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 3 4 7 2 8 6

**லக்கி 7 (Lucky 7)** — விசேட சீட்டிழுப்பு — சீட்டிழுப்பு இலக்கம் 0001 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,337,039.52
வெற்றி இலக்கினம் விருச்சிகம் — L7 இலக்கம் 1 4 — வெற்றி இலக்கங்கள் 3 1 6 9 2 9
லக்ஷபதி அதிர்ஷ்ட இலக்கம் 2 6 1 1 6
மோட்டார் வாகன வெற்றி இலக்கம் 0 4 1 0 8 6 8
ரூ. 200,000/- வெற்றி இலக்கங்கள் 0 1 7 9 0 0 5 / 0 9 7 5 2 5 9 / 0 9 7 6 8 8 2 / 0 6 0 7 0 1 0
தங்கப்பவுண் வெற்றி இலக்கங்கள் 0 9 7 0 2 0 0 / 0 1 1 1 0 1 6

**ராசி சுப பலன் (Handahana)** — சீட்டிழுப்பு இலக்கம் 484 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,303,153.40
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 04 19 42 52 — விசேட இலக்கினம் மிதுனம்

**கொவிசெத (Govisetha)** — சீட்டிழுப்பு இலக்கம் 3417 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,412,095.60
ஆங்கில எழுத்து X — வெற்றி இலக்கங்கள் 01 38 39 48

**Mega Power** — சீட்டிழுப்பு இலக்கம் 1523 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 401,109,356.00
ஆங்கில எழுத்து Z — சுப்பர் இலக்கம் 04 — வெற்றி இலக்கங்கள் 03 05 52 63
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00 — அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

**தன நிதானய** — சீட்டிழுப்பு இலக்கம் 1205 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,911,540.80
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 10 29 34 56 — விசேட எழுத்து S

# கிழக்கின் குரல்



## உக்கிரமடையும் கடலரிப்பினால் காவு கொள்ளப்படும் சாய்ந்தமருது பீச் பார்க்





**சாய்ந்தமருது விசேட நிருபர்**

சாய்ந்தமருது பிரதேசத்தில் மீண்டும் உக்கிரமடைந்துள்ள கடலரிப்பினால் பீச் பார்க் (கடற்கரைப் பூங்கா) கிழக்குப் பகுதி சுற்றுமதில் வீழ்த்தப்பட்டிருப்பதுடன் மீனவர் நூலக கட்டடமும் ஆபத்தை எதிர்நோக்கியிருக்கிறது. கடந்த சில நாட்களாக தீவிரமடைந்துள்ள

கடலரிப்பு காரணமாக சனிக்கிழமையன்று (15) இச்சுவர் வீழ்த்திருப்பதுடன் பீச் பார்க்கின் பெரும் பகுதி கடலுக்கு இரையாகக் கூடிய ஆபத்து ஏற்பட்டிருக்கிறது.

இந்த பீச் பார்க்கிற்கு கிழக்குப் புறமாக இருந்த கடற்கரை நிலப்பகுதி கடலால் முற்றாக காவு கொள்ளப்பட்டிருக்கிறது. மக்கள் ஓய்வு, பொழுது போக்கிற்காக கூடுகின்ற இக்கடற்கரைப் பகுதியின் இழப்பு ஈடுசெய்ய முடியாத தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

இக்கடலரிப்பினால் சாய்ந்தமருது மற்றும் மாளிகைக்காடு பிரதேசங்களில் இயற்கை மற்றும் கடற்றொழில் வளங்கள் வெகுவாக பாதிக்கப்பட்டுள்ளன. மீன்பிடித் தொழிலாளர்களின் வாடிகள் கடல் அலைகளினால் அடித்துச் செல்லப்பட்டிருக்கின்றன. மீனவர் சமூக பல்தேவைக் கட்டடங்கள் சிலவும் சேதமடைந்துள்ளன.

இதனால் வலைகள் மற்றும் மீன்படி உபகரணங்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்வதற்கும் மீனவர்கள் ஓய்வெடுப்பதற்கும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் ஏற்பட்ட கடலரிப்பினால் சாய்ந்தமருது பௌசி விளையாட்டு மைதானத்தின் கிழக்குப் பகுதி சுற்றுமதில் வீழ்த்தப்பட்டதுடன் மைதானம் பெரும்பாதிப்புக்கு இலக்காகியிருந்தது. எனினும் அது இன்னும் புரைமைப்பு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## திகிலிவெட்டை சந்திவெளி படகு பாதை மக்கள் பாவனைக்கு



திகிலிவெட்டை சந்திவெளி படகு பாதை பிரதேச சபை நிதியிலிருந்து 20 இலட்சம் செலவில் செப்பனிடப்பட்டு நேற்று முன்தினம் இராஜாங்க அமைச்சர் சிவநேசந்துரை சந்திரகாந்தனால் மக்கள் பாவனைக்காக கையளிக்கப்பட்டது.

இத்தோடு 3 ஆவது தடவையாக குறித்த பாதை கோறளைப்பற்று பிரதேச சபயினூடாக திருத்தியமைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியானது தனது 2020 தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டதற்கமைவாக திகிலிவெட்டை மற்றும் சந்திவெளி போன்ற பிரதேசங்களை இணைப்பதற்கான பாலத்தினை நிர்மாணிக்க பலதரப்பட்ட முயற்சிகளை முன்னெடுத்திருந்த போதிலும் தற்போது நாட்டில் நிலவிவரும் பொருளாதார நெருக்கடி நிலை காரணமாக அவ்வேலைகளை தொடர முடியாத சூழ் நிலை தோற்றம் பெற்றுள்ளது. இருந்த போதிலும் எதிர்வரும் காலங்களில் இவ்வசாதாரண சூழல் நீங்கப் பெறும் பட்சத்தில் பால வேலைகளை விரைவாக நிறைவுறுத்த தேவையான அனைத்து வித முன்னாயத்த நடவடிக்கைகளையும் முன்னெடுத்துள்ளேன் என்றார்.

## 'இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு' நூல் அறிமுக விழா



**கிண்ணியா தினகரன் நிருபர்**

கிண்ணியா நகர சபை நூலக கேட்போர் கூடத்தில் கலாநிதி ரவூப் ஷெய்ன் எழுதிய 'இலங்கை முஸ்லிம்களின் தேசிய பங்களிப்பு' நூல் அறிமுக விழா கிண்ணியா சூறா சபையின் தலைவர் ஏ. ஆர். எம். பரீட் தலைமையில் சனிக்கிழமை (15) நடைபெற்றது.

நூலாசிரியர் பற்றியும் நூல் அறிமுகம் தொடர்பிலும் ஹிதாயத்துள்ளா நளீமி உரை நிகழ்த்தினார்.

நிகழ்வில் நூலாசிரியர் கலாநிதி ரவூப் ஷெய்ன் இலங்கை முஸ்லிம்களின் வரலாறு தொடர்பாக ஒரு சிறப்புரையை வழங்கினார். இந்நிகழ்வு கிண்ணியா சூறா சபையின் ஏற்பாட்டில் AIMG நிறுவனம் மற்றும் திருகோணமலை நளீமிகள் வட்டத்தின் ஆதரவுடன் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## ஜனாதிபதியை விமர்சிக்க எம்.பி. விமல் வீரவன்சவுக்கு எவ்வித அருகதையுமில்லை

**ஆரையம்பதி தினகரன் நிருபர்**



இருண்ட யுகத்துக்குள் சென்று கொண்டிருந்த நாட்டை துணிவுடன் பொறுப்பெடுத்தவர் மாண்புமிகு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஆவார். எனவே இந்த நாடு நெருக்கடிக்குள் சென்றமைக்கு ஜனாதிபதியே பொறுப்பு கூற வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச ஊடக சந்திப்பொன்றில் தெரிவித்துள்ளார். இக் கருத்து கண்டிக்கத்தக்கது

என மட்டக்களப்பு சென் ஜோன்ஸ் அம்பியூலன்ஸ் நிறுவனத் தலைவர் தேசமானி

ஏ. எல். எம். மீராசாகிபு தெரிவித்தார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டை பொறுப்பெடுத்ததில் இருந்து சகல விடயங்களிலும் படிப்படியான முன்னேற்றத்தை காணக்கூடியதாக உள்ளது. கடந்த ஆட்சியில் மக்கள் ஒருபோதும் அனுபவிக்காத துன்பங்களை அனுபவித்தார்கள் ஆனால் இன்று அவை குறைவடைந்துள்ளது.

அன்றிலிருந்து இன்று வரை சிறுபான்மை சமூகங்களிடையே பிரிவின வாதத்தினையும் இன வாதத்தினையும் மேலோங்க செய்யும் விதத்தில் கருத்துக்களை வெளியிட்டு வரும் விமல் வீரவன்ச,சுய அரசியல் இலாபத்திற்காக தற்போதைய நிதி நெருக்கடிகள் அனைத்திற்கும் ஜனாதிபதி ரனில் விக்கிரமசிங்கவே பொறுப்பேற்க வேண்டும் என கருத்து வெளியிட்டிருக்கின்றமை அவரது அரசியல் ஸ்திரமற்ற நிலைமையை காட்டுகிறது என ஏ.எல்.எம்.மீராசாகிபு தெரிவித்துள்ளார்.

## தினகரன் ஹிங்குறானை நிருபர் ஏ. எச். றஸ்மியின் தாயார் காலமானார்

**இறக்காமம் தினகரன் நிருபர்**



ஹிங்குறானை தினகரன் குறூப் நிருபர் ஏ. எச். றஸ்மியின் தாயார் ஹாஜியாணி எம்.எல் .உம்மு ஹாபியா (73) நேற்று முன்தினம் மாலை (சனிக்கிழமை) காலமானார். இறக்காமம் 6ஆம் பிரிவில் வசித்து வந்த ஐந்து பிள்ளைகளின் தாயாரான இவர் முன்னாள் கிராம சேவை உத்தியோகத்தர் அல்ஹாஜ் ஏ. எல். ஹாஸிமின் அன்பு மனைவியாவார்.

அன்னாரின் ஜனாஸா நல்லடக்கம் நேற்று காலை 9:30 மணி அளவில் (ஞாயிறு) இறக்காமம் பெரிய ஜும்மா பள்ளிவாசல் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. ஜனாசா நல்லடக்கத்தின் போது ஊடகவியளாளர்கள்,மக்கள் பிரதிநிதிகள் உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

## ஊடகவியலாளர் தராக்கி சிவராமின் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு

**மட்டக்களப்பு விஷேட நிருபர்**



ஈழத் தமிழ் ஊடக முன்னோடி தராக்கி தர்மரெட்ணம சிவராமின் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியீடு நேற்று முன்தினம் (15) மட்டக்களப்பு வை.எம்.சி.ஏ மண்டபத்தில் நடைபெற்றது.

சிவராம் ஞாபகார்த்த மன்றம் சுவீஸ் மற்றும் கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியம் இணைந்து நடாத்திய இந்நூல் வெளியீடு கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் எல். தேவ அதிரன் தலமையில் நடைபெற்றது. சிவராமின் உருவப்படத்திற்கு அவரின் மனைவி பவானி சிவராம் மற்றும் கிழக்குப் பல்கலைக்கழக விரிவுரையாளர் அருட்தந்தை நவரட்னம் நவாஜி ஆகியோர் மலர்மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பா.அரியநேந்திரன்,ஞா.சிறிநேசன், தொழில்சார் இணைய ஊடகவியாளாளர் ஒன்றியத்தின் இணைப்பாளர் பெர்டி கமகே உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நினைவுச் சுடர் ஏற்றி மலரஞ்சலி செலுத்தினர்.சிரேஷ்ட ஊடகவியலாளர் இ.பாக்கியராஜா நூலின் முதல் பிரதியை திருமதி பவானி சிவராமிற்கு வழங்கி வெளியிட்டு வைத்தார். வரவேற்புரையை ஊடகவியலாளர் சபீனா சோமசுந்தரம், நூல் அறிமுகத்தை மகுடம் மைக்கல் கொலின் மற்றும் நன்றியுரையை கிழக்கு ஊடகவியலாளர் ஒன்றியத்தின் செயலாளர் வ.சக்திவேல் நிகழ்த்தினர்.

## கஜமுத்துக்களுடன் ஒருவர் கைது



சந்தேகத்திற்கிடமாக நடமாடிய இளைஞனிடம் விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனையின் போது கஜமுத்துக்கள் மீட்கப்பட்டுள்ளன. யானைகளை கொன்று பெறப்பட்ட அரியவகை கஜமுத்துக்கள் 03 வைத்திருந்த சீதுவை பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடைய இளைஞனே இவ்வாறு வெள்ளிக்கிழமை மாலை கைதானார். அம்பாறை விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின்படி இச்சோதனையை நடத்தியது. இதன் போது கைது செய்யப்பட்ட சந்தேக நபரை சட்ட நடவடிக்கைக்காக ஆஜர்படுத்த அம்பாறை தலைமையக பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் ஒப்படைத்துள்ளனர்.

(பாறுக் ஷிஹான்)



அக்கரைப்பற்று கடற்கரையில் தென்னங்கன்றுகளை நட்டு, பராமரிக்கும் பணியை அக்கரைப்பற்று மாநகர சபை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. இத்திட்டத்தின் கீழ், அக்கரைப்பற்று கடற்கரையில் சுமார் 600 தென்னங்கன்றுகள் நடப்பட்டுள்ளன.

படம் அட்டாளைச்சேனை மத்திய நிருபர்

## சிறைச்சாலையில் சலூன் திறப்பு



**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை சிறைச்சாலையின் சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில் சலூன் நிலையம் திருகோணமலை சிறைச்சாலை அத்தியட்சகர் வஜீர அபேதீரவினால் (15) திறந்து வைக்கப்பட்டது.

இதன் போது சிறைச்சாலை உத்தியோகத்தர்கள்,சிறைக்கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர்கள் மற்றும் வெளிநபர்களின் பாவனைக்காக சலூன் அலங்கார நிலையம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. இந்நிகழ்வில் சிறைச்சாலையின் பிரதான ஜெயிலர் ஆர்.மோகனராசா,சிறைக் கைதிகள் நலன்புரிச் சங்கத்தின் தலைவர் சி.டி சிவரெட்ணராசா(பாஸ்கரன்) ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

## இனநல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான கலந்துரையாடல்

**அட்டாளைச்சேனை தினகரன் நிருபர்**




கெப்சோ அமைப்பின் ஏற்பாட்டில் சமூகங்களுக்கிடையே உள்ள இடைவெளிகளை குறைத்து இன நல்லுறவினைக் கட்டியெழுப்பும் விஷேட வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் வகையில் சமூக மட்டத்தில் உள்ள துறைசார்ந்தவர்களை ஒன்றிணைத்து அவர்களின் காத்திரமான கருத்துக்களை கேட்டறியும் விஷேட கலந்துரையாடல் நிகழ்வு நேற்று முன்தினம் (15) அக்கரைப்பற்று பிரதேசத்தில் நடைபெற்றது.

கெப்சோ நிறுவனத்தின் திட்டப்பணிப்பாளர் ஏ.ஜே.காமில் இம்டாட் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் அமைப்பின் திட்ட ஒருங்கிணைப்பாளர் கே.எல்.எம்.அக்ரம் உள்ளிட்ட மதத் தலைவர்கள், ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள், சிவில் சமூக முக்கியஸ்தர்கள், பொது நல அமைப்புகளின் பிரதிநிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது சமூக நல்லுறவை கட்டியெழுப்பி சமூகங்களிடையே பரஸ்பர ஒற்றுமையை நிலைநிறுத்தும் வேலைத் திட்டங்களை அம்பாறை மாவட்டத்தில் மேற்கொள்ளமுடியும்என்பதைபொதுமக்களின் கருத்துக்கள் ஊடாக அறிந்து இதற்கான வேலைத் திட்டங்களை நடைமுறை படுத்துவற்கான ஆரம்ப கட்ட கலந்துரையாடலாய் இந்நிகழ்வு இடம்பெற்றது.

## வீதி திருத்தப் பணிகள்

**றொட்டவெவ குறூப் நிருபர்**



திருகோணமலையில் வீதி காபெட் இடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் ஆழ்ந்த மகிழ்ச்சியில் ஈடுபட்டுள்ளனர். கடந்த இரண்டு வருடங்களாக பொருளாதார நெருக்கடி காரணமாக வீதி புனரமைப்பு பணிகள் நிறுத்தப்பட்டிருந்த நிலையில் தற்போது வீதிகளுக்கு காபெட் இடும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. வீதி சேதமடைந்து வீடுகளுக்குள் புழுதி உட்புகும் நிலையில் வியாபார நடவடிக்கைகளை கூட நடத்த முடியாத நிலையில் இருந்ததாகவும் தற்போது தமக்கு ஆழ்ந்த சந்தோஷத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# மின் டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் சாதனை படைத்த வரக்காப்பொல பாபுல் ஹஸன் தேசிய பாடசாலை



**மாவத்தகம தினகரன் நிருபர்**

நிறைய வளங்களையும் வாய்ப்புக்களையும் கொண்ட பாடசாலையை விட தங்களிடம் உள்ள வளங்களை கொண்டு வெற்றி இலக்கை அடைவதுதான் அதி சிறந்த வெற்றியாகும்.அவ்வாறான இலக்கை மின் டிஜிட்டல் தொழில் துறையில் வரக்காப்பொல பாபுல் ஹஸன் தேசிய பாடசாலை மாணவர்கள் அடைந்துள்ளமை சப்ரகமுவ மாகாணத்திற்கு பெருமையாகும் என்று கேகாலை கல்வி வலயப் பணிப்பாளர் இத்தமல்கொட தெவித்தார்.

அகில இலங்கை மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே மின் டிஜிட்டல் முறையில் பாடசாலை மாணவர் பாராளுமன்றத்தில் வாக்களிப்பு முறையினை அறிமுகப்படுத்துகின்ற போட்டியில் தேசிய மட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்ட வரகாப்பொல பாபுல் ஹஸன் தேசிய பாடசாலை மாணவர்களைப் பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் எம். ஐ. றஸீனா தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கலந்து கொண்டுரையாற்றிய அவர், இப்பாடசாலை மாணவர் குழுமத்தினர் ஒரு முன் மாதிரிமிக்க மாணவர்கள். நிறைய வளங்களையும் வாய்ப்புக்களையும் கொண்ட பாடசாலைகளை விட உங்களிடம் உள்ள வளங்களை கொண்டு இலக்குகளை வென்று எடுத்துள்ளீர்கள். இதற்காக நான் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

இந்த வெற்றி இலக்கினை அடைவது ஒரு சாதாரண விடயமல்ல. ஏதாவது ஒன்றில் வெற்றி பெற வேண்டுமாயின் அதற்குப் பின்புலமாக பலருடைய உதவிகள் இல்லாமல் வெற்றிபெற முடியாது. இந்த வகையிலான பரிசினை கடின உழைப்பின் மூலம் தான் பெற்றுக் கொள்ள முடியும். அதற்கு மாணவர்கள், ஆசிரியர் குழாம், பெற்றோர்கள், அதிபர், அதற்கு உதவுகின்ற குழுவினர்கள் என பாரியளவிலான சவால்களைக் கொண்டுதான் வெற்றி பெற்று இருக்க வேண்டும்.

# கல்முனை முஹம்மதிய்யாவில் இரத்ததான முகாம்



**கல்முனை மத்திய தினகரன் நிருபர்**

வைத்தியசாலையில் ஏற்படும் குருதி வங்கியின் குருதி பற்றாக்குறையினை நிவர்த்தி செய்யும் முகமாக 'உதிரம் கொடுத்து உயிர்காப்போம்' எனும் தொனிப்பொருளில் இரத்ததான முகாம் ஒன்று கல்முனை முஹம்மதிய்யா ஜும்ஆ மஸ்ஜித் ஏற்பாட்டில் நேற்று காலை 8.00 தொடக்கம் மாலை வரை கல்முனை முஹம்மதிய்யா ஜும்ஆ மஸ்ஜிதில், மஸ்ஜித் தலைவர் எம்.ஜே. அப்துஸ் சமட் தலைமையில் நடைபெற்றது.

இவ் இரத்ததான முகாமை கல்முனை அஸ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் ஏ.எல்.எப். ரஹ்மான், மஸ்ஜித் உப தலைவர் ஏ.எம்.ஏ. அத்னான், இலங்கை தென்கிழக்கு பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எம். அப்துல் ரஹ்மான், செயலாளர் கே.எல். சுபையிர், வை.எம்.எம்.ஏ. பேரவை தேசிய உப தலைவர் எஸ். தஸ்தக்கீர் உட்பட பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டு நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

# இரு இன இளைஞர் குழுக்கிடையே மோதல்

## ஒருவர் ஆபத்தான நிலையில், 4 பேருக்கு காயம்

**வவுனியா விசேட நிருபர்**

வவுனியாவில் இரு இன இளைஞர் குழுக்களுக்கிடையில் இடம்பெற்ற மோதல் காரணமாக ஒருவர் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வருவதுடன், மேலும் 4 பேர் காயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா, பட்டாணிச்சூர் பகுதியில் உள்ள மோட்டார் சைக்கிள் விற்பனை நிலையம் ஒன்றின் முன்பாக இந்த மோதல் சம்பவம் நேற்றுமுன்தினம் (15) இரவு இடம்பெற்றது. குறித்த பகுதியில் இடம்பெற்ற இரு இன இளைஞர் குழுக்களுக்கு இடையில் இடம்பெற்ற மோதலின் போது அப்பகுதியில் பயணித்த கார் ஒன்று வழிமறிக்கப்பட்டு தாக்கி சேதமாக்கப்பட்டுள்ளது.

தாக்குதலில் வவுனியா, யாழ் ஐஸ்கிறீம் வீதியில் வசிக்கும் டிலான் (வயது 25) என்ற இளைஞர் படுகாயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். குறித்த தாக்குதல் சம்பவத்தில் மேலும் 4 பேர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலில் படுகாயமடைந்தவரின் சகோதரர் மீதும் குழு வவுனியா வைத்தியசாலையில் வைத்து தாக்குதல் மேற்கொண்டுள்ளது. இதனையடுத்து வைத்தியசாலையில் பதற்ற நிலை ஏற்பட்டதுடன், வைத்தியசாலை முன்பாகவும் இரு இன இளைஞர் குழுக்களுக்கு இடையில் மோதல் ஏற்பட்டது. அதிலும் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் இச் சம்பவத்தால் மொத்தமாக 5 பேர் காயமடைந்துள்ளனர். சம்பவம் தொடர்பில் நெளுக்குளம் பொலிசார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

## சீத்தாவக்க பிரதேச சபை - ஹங்வெல்ல

### கேள்வி அறிவித்தல்

2023-08-01ஆம் திகதி முதல் 2023-12-31ஆம் திகதி வரையில் பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள சபைக்குரித்தான ஆதனங்களை வருடாந்த குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவங்கள் விநியோகித்தல் - 2023-07-26ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை
கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் - 2023-07-27ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை
கேள்விப் படிவங்கள் திறத்தல் - 2023-07-27ஆம் திகதி கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்தவுடன்

2023-07-31ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் உடன்படிக்கை ஒன்றைச் செய்து கொள்ளல் வேண்டும்.

| தொ. இல. | ஆதனத்தின் விபரம் | கேள்விப் பிணைப் பணம் ரூபா | கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | குறைந்த பட்ச கேள்வித் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 01 | ஹங்வெல்ல 3ம் இலக்க கோழியிறைச்சிக் கடை | 150,000.00 | 1,500.00 | 254,000.00 |
| 02 | பாதுக்க புதிய சந்தையின் 01ஆம் இலக்க மீன் கடை | 2,000.00 | 500.00 | 7,000.00 |
| 03 | கொஸ்கம வாரச்சந்தை பன்றியிறைச்சிக் கடை (செவ்வாய், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள்) இடம் - வாரச்சந்தை மீன் கடை 42ஆம் இலக்க இடம் | 5,000.00 | 500.00 | 19,800.00 |
| 04 | அருக்வத்த பொது மயானத்தின் 5 தென்னை மரங்கள் மற்றும் 1 செவ்விளநீர் மரத்தின் விளைச்சல் | 500.00 | 100.00 | 1,500.00 |
| 05 | பாதுக்க பொது விளையாட்டரங்கின் 20'x12' அளவு கடை அறையை குத்தகைக்கு வழங்குதல் | 10,000.00 | 1,000.00 | 123,000.00 |
| 06 | பாதுக்க பழைய சந்தைக் கட்டிடத்தொகுதியின் 03ஆம் இலக்க கடை அறையை குத்தகைக்கு வழங்குதல் | 10,000.00 | 750.00 | 80,500.00 |
| 07 | கஹஹேன உள்நாட்டு உணவக கடை அறையை குத்தகைக்கு வழங்குதல் | 500.00 | 250.00 | 5,000.00 |

இதற்குப் புறம்பாக குத்தகை விண்ணப்ப கேள்விப் படிவம் மற்றும் கேள்வி அறிவித்தலை 2023-07-26ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முன் பிரதான அலுவலகத்திற்கு வருகை தந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை 036-2255052 எனும் தொலைபேசி இலக்கத்தில் விசாரித்தறியலாம்.

**கே. ஏ. சந்தன பத்மசிரி,**
**செயலாளர் மற்றும் சீத்தாவக்க பிரதேச சபையின் அதிகாரம் வாய்ந்த கடமைகளை செயற்படுத்தும் அதிகாரி,**
**சீத்தாவக்க பிரதேச சபை, ஹங்வெல்ல.**
**2023-07-11ஆம் திகதி சீத்தாவக்க பிரதேச சபை அலுவலகத்தில்.**

## விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

### 2023ஆம் வருடத்திற்கான அச்சிட்ட மற்றும் அச்சிடப்படாத கணனித் தாள்களை (Printed and Non Printed Computer Papers) வழங்குவதற்கான பெறுகை

**ஒப்பந்த இல. 4/10/02/2023**

1. பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள அச்சிட்ட மற்றும் அச்சிடப்படாத கணனித் தாள்களை வழங்கும் பெறுகைக்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் முழுமையான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

| லொட் இல. | வகை | ஒரு லொட்டிலுள்ள பொருட்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 5" x 8" I PLY White Bond Two sides with holes Continues Computer Sheets (80±2 GSM) | 12 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 2. | 9.5" x 12" I PLY White Bond Two sides with holes Continues Computer Sheets (80±2 GSM) | 400 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 3. | 15" x 12" I PLY White Bond Two sides with holes Continues Computer Sheets (80±2 GSM) | 400 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 4. | 15" x 12" White Bond Two sides With Holes and Printed Continues Common Admission Sheets (80±2 GSM) | 100 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 5. | 15" x 12" White Bond Two sides With Holes Printed Continues Admission Sheets A/L (80±2 GSM) | 200 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 6. | 15" x 12" White Bond Two sides with holes and Printed Continues Results Schedule—A/L (80±2 GSM) | 140 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 7. | 15" x 12" White Bond Two sides with holes and Printed Continues Attendant Sheets — A/L (80±2 GSM) | 45 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 8. | 15" x 12" White Bond Two sides with holes Printed Continues Results Register —A/L (80±2 GSM) | 60 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 9. | 15"x 12" White Bond Two sides with holes and Printed Continues Attendant Sheets — O/L (80±2 GSM) | 55 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 10. | 15" x 12" White Bond Two sides with holes and Printed Continues Results Schedule - O/L (80±2 GSM) | 210 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 11. | 15" x 12" White Bond Two sides with holes and Printed Continues Admission Sheets - O/L (80±2 GSM) | 280 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 12. | 15" x 12" White Bond Two sides with holes and Printed Continues Result Register - O/L (80±2 GSM) | 70 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |
| 13. | 10.5" x 8" Printed Continues (4 colours) Certificates Paper - (5 Grade scholarship) (100 ± 2 GSM) | 300 பக்கெட்டுகள் (ஒரு பக்கெட்டில் 1000 தாள்கள்) |

2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய பொருட்களை வழங்குவதில்/விற்பனை செய்வதில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2786200-238 அல்லது 011-2785219) மற்றும் 2023-08-04ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.
6. 2023-08-04ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படும் கட்டணமாக ஒவ்வொரு ஆவணத்திற்கும் 9700.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யலாம். பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.
7. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2023-11-06ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம் 374,000.00 இலங்கை ரூபாவிற்கானதும் விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2023-12-06ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
9. விலைமனுக்கள் 2023-08-07ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03ஆம் மாடி, வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
10. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''2023ஆம் வருடத்திற்கான அச்சடிக்கப்பட்ட மற்றும் அச்சடிக்கப்படாத கணனி தாள்களை வழங்குவதற்கான பெறுகை - ஒப்பந்த இல.: 4/10/2/2023" என குறிப்பிடப்படல் வேண்டும்.
11. பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு பொறுப்பையும் ஏற்படுத்துதல் அல்லது பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற எவ்விதக் கடப்பாடும் இன்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்நேரத்திலும் எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்கோரல் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கும் எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2023-07-17**

The Housewives' companion
Classifieds on
Daily News

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு அரசாங்கம்

### போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கம் |
|---|---|
| 1. | அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், பராமரிப்பு மற்றும் முகாமைத்துவ பிரிவின் மத்திய அதிவேக நெடுஞ்சாலைக்காக முன்னெச்சரிக்கை லெட் (LED) ஒளிரும் மின்விளக்கு முறைமையை நிறுவுதல் (விலைமனு இல.: RDA/EOM&M/PRC/2023/ELE/11) |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2023.07.17 ஆம் திகதியிலிருந்து 2023.08.08 ஆம் திகதியன்று வரையும் www.rda.gov.lk என்ற வீஅஅ மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளத்தை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

**தலைவர்,**
**அதிவேக நெடுஞ்சாலை இயக்கம். மற்றும் முகாமைத்துவ பிரிவின் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர், (அதிவேக நெடுஞ்சாலை இயக்கம், மற்றும் முகாமைத்துவ பிரிவு),**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கஹட்டகஹஹேன, வல்கம,**
**பண்டாரகம.**

## பெருந்தோட்ட கைத்தொழில்கள் அமைச்சு

## தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையில் தற்போது வெற்றிடமாகவுள்ள கீழே குறிப்பிட்டுள்ள பதவிகளுக்காக சிறந்த அனுபவம் மற்றும் தேவையான தகைமைகளையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

### 1. பதவி - பணிப்பாளர் (நிருவாகம்)

**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை: 01**

**சேவை வகுதி: சிரேஷ்ட முகாமைத்துவ மட்டம் - (ஏச்எம் 1-1)**

**சம்பள அளவுத்திட்டம்:** மாதாந்தம் 80,295 – 15x2,270 ரூபா. 114,345 ஏச்எம் 1-1 2016 + அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்.

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து பொது நிருவாகம்/ வியாபார நிருவாகம்/ முகாமைத்துவம்/ சட்டம் ஆகியவற்றில் முதலாம் பட்டம் அத்துடன் உரித்தான துறையில் பெற்ற பட்டத்திற்குபின் பட்டம். மற்றும்
அரசாங்கத்தில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் உரித்தான துறையில் முகாமைத்துவ மட்டத்தில் ஆகக்குறைந்தது 15 வருட அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது**

தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 1 ஆம் தர சம்பள அளவுத்திட்டத்துடன் தொடர்புடைய துறையில் முகாமைத்துவ மட்டத்தில் (எம்எம் 1-1) 5 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

விண்ணப்பங்களை மூடும் திகதியில் விண்ணப்பதாரிகள் 35 வயதிற்கு குறையாமலும் 50 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். ஏற்கனவே தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையிலிருப்பவர்களுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் முறைமை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றின் மூலமாக மேற்கொள்ளப்படும்.

1/2015 மற்றும் 1/2015(1) ஆகிய அரசாங்க தொழில்முயற்சிகள் சுற்றறிக்கை இலக்கங்களின் பிரகாரம் போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்.

### 2. பதவி: உள்ளக கணக்காளர்.

**பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை: 01**

**சேவை வகுதி** - இடைப்பட்ட முகாமைத்துவ மட்டம் - (எம்எம் 1-1)

**சம்பள அளவுத்திட்டம்:** மாதாந்தம் 53,175-10x1375-15x1910 /- ரூபா = 95,575/- (எம்எம் 1-1+ அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட படிகள்).

**கல்விசார் தகைமைகள் மற்றும் அனுபவம்:**

**வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கானது**

(i) மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து கணக்கியல், வர்த்தகம், வியாபார நிருவாகம், பொது நிருவாகம் மற்றும் முகாமைத்துவம் ஆகிய துறைகளில் வர்த்தக பட்டமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) Passed Intermediate Examination of Institute of Chartered Accountants of Sri Lanka/ Parts A and B of Institute of Cost and Management Accountants of England and Professional Part I/Intermediate Examination of Institute of Chartered and Chartered Accountants (England)

(iii) மேலேயுள்ள i அல்லது ii தகமையை பெற்ற பின்னர், கணக்காய்வு அல்லது கணக்கிடல் துறையில் ஆகக் குறைந்தது 3 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கானது:**

i. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் 11 ஆம் தர சம்பள அளவுத்திட்டத்துடன் தொடர்புடைய துறையில் முகாமைத்துவ மட்டத்தில் (ஜேஎம் 1-2) 5 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அல்லது

ii. தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் எம்ஏ 3 வகுதியில் தொடர்புடைய துறையில் 5 வருடங்களுக்கு குறையாத திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டுமென்பதுடன் வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கான கல்விசார் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயதெல்லை:**

விண்ணப்பங்களை மூடும் திகதியில் விண்ணப்பதாரிகள் 25 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலிருத்தல் வேண்டும். ஏற்கனவே தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையிலிருப்பவர்களுக்கு மேல் வயதெல்லை ஏற்புடையதாகாது.

**தெரிவு செய்யும் முறைமை:** கட்டமைக்கப்பட்ட நேர்முகப்பரீட்சையொன்றின் மூலமாக மேற்கொள்ளப்படும்.

**ஏனையவைகள்:**

**மேலேயுள்ள பதவிகளுக்கானது.**

1. இலங்கை பிரஜையொன்றாகவிருத்தல் வேண்டும்.
2. பதவிக்காக நியமிக்கப்பட்ட கடமைகளை சிறப்பாக நிறைவேற்றுவதற்காகவும் நாட்டின் எப்பாகத்திலும் சேவை செய்வதற்காகவும் உடல் உளரீதியில் ஆரோக்கியமாகவிருத்தல் வேண்டும்.
3. மிகச்சிறந்த குணவியல்புகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அனுகூலங்கள்:**

**மேலேயுள்ள பதவிகளுக்கானது.**

1. 1983 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க சட்டத்தின் கீழான பணிக்கொடை.
2. பதவிநிலை அலுவலர்களுக்கான மருத்துவ காப்புறுதி மற்றும் தனிநபர் விபத்து காப்புறுதி திட்டம்/வேலை செய்வோர் இழப்பீடு காப்புறுதித் திட்டம்.
3. ஊழியர் சேமலாப நிதியம், ஊழியர்-10%, தொழில் வழங்குநர் -15% மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம் - 3% தொழில் கொள்வோரின் பங்களிப்பு.
4. அதிகாரசபையின் ஊழியர்களுக்கு ஏற்புடையதான ஏனைய முக்கிய அனுகூலங்கள்.

விண்ணப்பதாரியின் தற்போதய தொழில், சம்பள விபரங்கள், முன்னர் வகித்த பதவிகள் மற்றும் அவைகளின் கால எல்லை அத்துடன் இரு உறவினரல்லாத பரிந்துரையாளர்களின் பெயர்கள் மற்றும் முகவரிகள் மற்றும் விண்ணப்பதாரியின் அனைத்து ஏனைய விபரங்கள் மற்றும் பிறப்புச் சான்றிதழ், கல்விசார், தொழில்சார் மற்றும் சேவை சான்றிதழ்கள் ஆகியன அடங்கலான விண்ணப்பதாரியின் விண்ணப்பம் ஆகியன பதிவுத் தபாலில் **2023.08.11** ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும். தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியானது குறிந்துரைக்கப்படல் வேண்டும்.

அரசாங்க திணைக்களங்கள்/ மாகாண அரசாங்க சேவை/அரச கூட்டுத்தாபனங்கள்/நியதிச்சட்ட சபைகளின் ஊழியர்களின் விண்ணப்பங்கள் உரித்தான நிறுவனங்களின் தலைமையூடாகவே அனுப்பப்படல் வேண்டுமென்பதுடன் தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் நிரந்தர சேவையில் ஏற்கனவே இருப்பவர்கள் அவர்களின் விண்ணப்பங்களை உரித்தான அதிகாரசபையின் பிரிவு தலைமைகளுடாகவே அனுப்புதல் வேண்டும்.

மூடும் திகதிக்கு பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் அல்லது மேலே குறிப்பிட்டுள்ள சான்றிதழ்களின் பிரதிகளின்றி அல்லது திணைக்களங்கள்/ நிறுவனங்களின் தலைமைகலூடாக இல்லாமல் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

இந்த விளம்பரமானது **www.cda.gov.lk** என்ற தெஅஅ இன் இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்யப்படலாம்.

**தலைவர்,**
**தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை,**
**இல.: 54, நாவல வீதி,**
**நாராஹென்பிட்ட,**
**கொழும்பு-05.**

ශ්‍රී ලංකා ආයුර්වේද ඖෂධ සංස්ථාව

**இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்**

**Sri Lanka Ayurvedic Drugs Corporation**

**ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தியை சர்வதேச ரீதியில் மேம்படுத்துதல் மற்றும் விற்பனை செய்வதற்கான பிரதிநிதிகளை நியமித்தல்**

## ஆர்வத்தை கோரல் அறிவித்தல்

**01 அறிமுகம்:**

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 1957 இல. 49 அரச தொழில்நுட்பக் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தினால் ஆயுர்வேத மருந்து வகைகள், மருந்து தாவர சாறுகள் கலந்த புதிய உற்பத்திகள் பலவற்றை உற்பத்தி செய்து விநியோகிக்கப்படுவதுடன், 53 வருடத்திற்கு மேற்பட்ட கீர்த்தியைப் பெற்றுள்ளது.

ஆயுர்வேத மருந்துகள் உற்பத்தியுடன் சம்பந்தப்பட்ட சகல நிலைமைகளையும் உறுதி செய்து உற்பத்தி விடயங்கள் இடம்பெறுவதுடன், ISO 9001:2015 தரச் சான்றிதழையும் பெற்றுள்ளது. இவ்வாறு உற்பத்தி செய்யப்படும் தரத்தில் கூடிய இலங்கை ஆயுர்வேத மருந்துகள் மற்றும் தாவர சாறும் உற்பத்திகள் சகல நாடுகளிலும் விற்பனை செய்வதற்காக சகல நாடுகளினதும் நிறுவனங்கள்/ சங்கங்கள்/ தனி நபர்கள் மற்றும் உள்ளூர் நிறுவனங்கள், பிரதிநிதிகள், உப முகவர் நிறுவனங்களில் இருந்து ஆர்வ வெளிப்பாடுகள் கோரப்படுகின்றன.

**02. சர்வதேச மேம்பாடு மற்றும் விற்பனை விடயங்களுக்காக முகவர்களை நியமித்தல்**

இரண்டு வருட காலத்திற்கு உடன்படிக்கையுடன் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் தேவைப்பாடுகளை பூர்த்தி செய்கின்ற நபர்கள், நிறுவனங்களுக்கு மீண்டும் உடன் படிக்கையை நீடிக்கும் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகின்ற நாடொன்றில் அல்லது அதன் தேர்ந்தெடுக்கப்படும் பிரதேசமொன்றில் இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்தின் ஒரு உற்பத்தி அல்லது பலவற்றை நிறுவன நிபந்தனைகள் பொருந்தும் **விற்பனை** செய்தல் மற்றும் மேம்படுத்துவதற்காக இப் பிரதிநிதிகளை நியமிப்பதற்கு உத்தேசிக்கப்படுவதுடன், அப்பிரதிநிதி பதவியுடன் சம்பந்தப்பட்ட ஆலோசனைகளை சமர்ப்பிப்பதற்காக கீழ்க்காணும் விடயங்கள் கவனத்தில் கொள்ளப்பட்டு தகவல்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

01. வியாபாரப் பதிவுச் சான்றிழைச் சமர்ப்பித்து வியாபாரத்தின் தன்மை பற்றிய விபரங்களை சமர்ப்பித்தல்
02. வெளிநாடுகளில் உற்பத்தி மேம்பாடு மற்றும் விற்பனை செய்தலில் உள்ள அனுபவம் பற்றிய விபரம்.
03. இக்கூட்டுத்தாபனத்தின் உற்பத்திகளை விற்பனை செய்வதற்கு நீங்கள் கடைப்பிடிக்கும் உபாயவழிகள்.
04. உங்களால் செயற்படுவதற்கு எதிர்பார்க்கின்ற நாடு மற்றும் அந்நாட்டின் மேம்பாடு மற்றும் விற்பனையுடன் சம்பந்தப்பட்ட சட்ட ரீதியான வட்டம் (தேவைப்படின் மாத்திரம்).

03. மேற்படி விபரங்கள் அடங்கிய உங்களது ஆர்வத்தை வெளிப்படுத்தல் 2023 ஓகஸ்ட் 15ம் திகதி அல்லது அதற்கு முன் இக் கூட்டுத்தாபனத்திற்குக் கிடைக்குமாறு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அல்லது கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

இவ் ஆர்வத்தை வெளிப்படுத்தல் இக்கூட்டுத்தாபனத்தின் காசாளரிடம் ரூ. 1000.00 தொகையைச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டு அல்லது மக்கள் வங்கியின் கங்கொடவில கிளையின் கணக்கு இல. 097100362315453 இற்கு ரூபா 1000.00 வைப்புச் செய்து பெற்றுக்கொள்ளும் பற்றுச்சீட்டை விற்பனைப் பிரிவிற்கு சமர்ப்பித்து விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்களை A4 அளவான உறையில் இட்டு அதன் இடது பக்க மேல் மூலையில் வெளிநாட்டு விற்பனை பிரதிநிதிகளுக்கான ஆர்வத்தை வெளிப்படுத்தல்" என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்**
**இல. 94, பழைய கொட்டாவ வீதி, நாவின்ன, மஹரகம, இலங்கை.**
இக்கூட்டுத்தாபன பற்றிய மேலதிக விபரங்களுக்கு www.sladc.lk இணையதளத்திற்கு பிரவேசித்து மற்றும் 011-2088716 என்ற தொலைபேசி இலக்கத்தில் விசாரித்து தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

**கலாநிதி அநுர அதுல்லத் முதலி**
**தலைவர்,**
**இலங்கை ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனம்**
2023.07.17


# நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பிய கட்சி ஐ.தே.கவே

## அகுரஸ்ஸ மக்கள் சந்திப்பில் பிரதித்தலைவர் ருவன்

*வெலிகம தினகரன் நிருபர்*



நாடு சுதந்திரம் பெற்றதிலிருந்து இன்று வரை நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தியது ஐ.தே. கட்சியே. ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டின் தலைமைத்துவத்தைப் பொறுப்பேற்று கொஞ்சம் கொஞ்சமாக பொருளாதார பிரச்சினைகளை தீர்த்து வருகிறார் என ஐ.தே.கட்சியின் பிரதித் தலைவர் ருவன் விஜயவர்தன தெரிவித்தார்.

அகுரஸ்ஸ பகுதியில் இடம்பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், அன்று பெற்றோல் , டீசல், மண்ணெண்ணெய், எரிவாயு போன்றவற்றைப் பெற்றுக்கொள்ள நீண்ட வரிசையில் காத்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது. மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர். இதனால் இளைஞர் யுவதிகள் வீதியில் இறங்கி நாட்டில் பாரிய ஆர்ப்பாட்டங்களை நடத்தினர். இதன் விளைவாக ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச தனது சகோதரர் மஹிந்த ராஜபக்சவை பிரதமர் பதவியிலிருந்து விலகும்படி கோரி , புதிய அரசாங்கமொன்றை அமைக்க சஜித் பிரேமதாஸ, சரத்பொன்சேக்கா, அனுர ஆகிய மூவரையும் அழைத்து பிரதமர் பதவியை பொறுப்பேற்கும் படி வேண்டினார். ஆனால் மூவரும் அதனைப் பொறுப்பேற்க முன்வரவில்லை. பின்பு ரணில் விக்ரமசிங்கவை பொறுப்பேற்கும் படி அழைக்க அவர் அதனை ஏற்றுக்கொண்டார். நாட்டின் சவால்களுக்கு முகம் கொடுத்து தற்போது பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தி வருகிறார்.

கட்சி பேதம் பாராமல் நாட்டின் நலன் கருதி சகலரும் ஒன்றிணைந்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு ஒத்துழைப்பு வழங்க முன் வர வேண்டும் .நாட்டு மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண அவரால் முடியும். தற்போது நாட்டில் எரிபொருட்களின் விலைகள் குறைந்துள்ளன. வங்குரோத்து நிலையில் இருந்த நாட்டை மீள கட்டியெழுப்ப தற்போதைய ஜனாதிபதியினால் முடிந்துள்ளது. இந் நிகழ்வில் ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்னாயக்கவும் உரையாட்டினார். மேலும் ஐ.தே.கட்சி முக்கியஸ்தவர்கள் பலரும் கலந்து கொண்டனர்.


## விலைமனுக் கோரல்

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

**விலைக்கேள்வி இலக்கம் - 040/T/2023**

**கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் நடுத்தர மின்னழுத்த காப்புச் சாதன கிலோவோட்ஸ் பதினொன்றின் (11 kV), 3C x 95 mm2 மற்றும் 3C x 35 mm2 கம்பிவடங்களை வழங்குதல்**

**SUPPLY OF MEDIUM VOLTAGE ARMOURED 11kV, 3C x 95 mm2 AND 3C x 35 mm2 CABLES AT BANDARANAIKE INTERNATIONAL AIRPORT, KATUNAYAKE)**

தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்காக கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் நடுத்தர மின்னழுத்த காப்புச் சாதன கிலோவோட்ஸ் பதினொன்றின் (11 kV), 3C x 95 mm2 மற்றும் 3C x 35 mm2 கம்பிவடங்களை வழங்குவதற்காக விலைக்கேள்விகள் அழைக்கப்படுகின்றன

திருப்பி தரப்படாத ரூபா பதினான்காயிரம் (ரூபா 14,000.00), வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்குச் செலுத்துவதன் மூலம் விலைக்கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்ள முடியுமாக இருப்பதுடன், அதற்காக விலைக்கேள்வியாளரால் எழுத்து மூலமான கோரிக்கை விடப்பட வேண்டும். அவ்வாறு இல்லாத பட்சத்தில் www.airport.lk என்ற இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவிறக்கங்கள் மூலமும் (ரூபா 14,000.00 ஆன தொகை நிகழ்நிலையில் செலுத்துவதனூடாக) இந்த விலைக்கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின் மூலம் 2023.07.18 ஆம் திகதி முதல் 2023.08.08 ஆம் திகதி வரை அலுவல்கள் இடம்பெறும் ஏதேனும் நாளொன்றில் மு.ப. 09.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையில் விலைக்கேள்வி இணைப்புக் கோப்புகள் பெற்றுக்கொள்ள முடியும். தேவைப்படுமாயின் மேலேயுள்ள விலைக்கேள்வி ஆவணங்கள் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு அலுலகத்தில் இலவசமாக பார்வையிட முடியும்.

விலைக்கேள்வியாளர்கள் அவர்களின் விலைக்கேள்விகள் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் அதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் வைப்பீடு செய்தல் வேண்டும். மேலும், விலைக்கேள்வியாளரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களினால் முத்திரையிடப்பட்ட விலைக்கேள்விகள் மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு தனிப்பட்ட முறையிலும் ஒப்படைத்து விட முடியும்.

விலைக்கேள்விகளைப் பொறுப்பேற்றல் 2023.08.09 ஆந் திகதி புதன் பி.ப 02.00 மணிக்கு முடிவடைவதுடன் உரிய விலைக்கேள்விகளைத் திறத்தல் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவில் இடம்பெறும். விலைக்கேள்வியாளர்களின் அல்லது அவர்களின் அதிகாரம்பெற்ற பிரதிநிதிகளுக்கு விலைக்கேள்விகள் திறக்கும்போது அதில் கலந்துகொள்ள முடியும்.

விலைக்கேள்வி உத்தரவாதத்திற்காக இலங்கையில் செயற்படுகின்ற, அரசின் மத்திய வங்கியின் அங்கீகாரம் பெற்ற வங்கியொன்றினால் தவிசாளர், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியிற்கு கேள்வியின் அடிப்படையில் செலுத்தக்கூடிய வெளியிடப்பட்ட ரூபா ஆறு இலட்சம் (ரூபா 600,000.00 ஆன) பெறுமதியான வங்கி பிணை முறி, விலைக்கேள்வியுடன் சமர்பிக்கப்படுதல் வேண்டும்.

விலைக்கேள்விகள் பற்றிய தெளிவுபடுத்தல்கள 2023.07.27 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு இலங்கை கட்டுநாயக்க, பண்டாரநாக்க சர்வதேச விமான நிலையம், பராமரிப்பு கட்டிட வளாகத்தில் உள்ள மின் பொறியியலாளர் மாநாட்டு அறையில் நடைபெறும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், தொலைபேசி இலக்கங்கள். 011-2264103 / 011-2264102 ஊடாக அழைப்பதன் மூலம் அல்லது head.scm@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் அல்லது www.airport.lk இணையத்தளத்திற்கு பிரவேசிப்பதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம், கட்டுநாயக்க**


# ஹற்றன் மல்லியப்பு சந்தி பஸ் தரிப்பிடத்தில் ஆணொருவரின் சடலம்


*நோட்டன் பிரிட்ஜ் நிருபர்*

ஹற்றன் கொழும்பு பிரதான வீதியில் ஹற்றன் மல்லியப்பு சந்தியில் உள்ள பஸ் தரிப்பிடத்தில் 61 வயது மதிக்கத்தக்க ஆண் ஒருவரின் சடலமொன்றை (16) நேற்றுக் காலை மீட்டுள்ளதாக ஹற்றன் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பஸ் நிலையத்திற்குள் ஒருவர் காயங்களுடன் தரையில் கிடப்பதாக ஹற்றன் பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து குறித்த சடலம் மீட்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த நபர் (15) பிற்பகல் முதல் இந்த பகுதியில் நடமாடிக் கொண்டிருந்ததாகவும் தெரிய வருகிறது.சடலமாக மீட்கப்பட்டவர் யாரென அடையாளம் காணப்படாத நிலையில் மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தண்டவாளங்கள் திருட்டு விசாரணைகள் ஆரம்பம்



அநுராதபுரம் – ஓமந்தை ரயில் பாதையில் தண்டவாளங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது. ரயில் பாதை புனரமைப்பு பணிகளின் போது நீக்கப்பட்ட தண்டவாளங்களை நேற்று முன்தினம் இரவு கொண்டு சென்ற நபர்கள், யாழ்.ராணி ரயிலில் மோதி விபத்துக்குள்ளானதையடுத்து இந்த கொள்ளைச் சம்பவம் தெரிய வந்ததாக ரயில்வே பாதுகாப்பு அத்தியட்சகர் அனுர பிரேமரத்ன தெரிவித்துள்ளார்.

விபத்தையடுத்து சந்தேகநபர்கள் தப்பியோடியுள்ளனர். சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ரயில் தண்டவாளங்களை வெட்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட கேஸ் கட்டர் (Gas Cutter), ஒக்சிஜன் தாங்கி மற்றும் 05 கிலோ எரிவாயு சிலிண்டர் என்பனவும் கைப்பற்றப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார். அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


**தென் மாகாண சபை**

**தென் மாகாண பிரதம செயலகம்**

## கேள்விக்கான அழைப்பு

## டெஸ்க்டொப் கணனி துணைப்பாகங்கள் மற்றும் இயந்திராதிகளை கொள்வனவு செய்தல்

தென் மாகாண பிரதம செயலகத்தின் சார்பாக பிரதம செயலாளர் பெறுகைக் குழுவின் தலைவரால் கீழ்க்காணும் அலுவலக உபகரணங்களை வழங்குவதற்காக தகைமையுடைய வழங்குநர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கேள்வி இலக்கம் | விபரம் | அளவு | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூ) | கேள்விப் பிணை முறி (ரூ) |
|---|---|---|---|---|
| SP/CS/ NCB/23/02 | டெஸ்க்டொப் கணனி<br>UPS<br>Dot Metrix அச்சு இயந்திரம்<br>Windows II Genuine operating system | 22<br>20<br>17<br>05 | 5,000.00 | 150,000.00 |

(தொழில்நுட்ப மாதிரிகள் மற்றும் விபரங்கள் பெறுகைப் பத்திரத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது)

02. இதற்காக விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கு விரும்பும் நிறுவனங்களுக்கு தென் மாகாண பிரதம செயலாளரிடம் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்து 2023 ஓகஸ்ட் 03 வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை மீளளிக்கப்படாத ரூ. 5000.00 கேள்விக் கட்டணத்தைச் செலுத்தி காலி, எஸ்.எச். தஹநாயக்க மாவத்தையில் அமைந்துள்ள தென் மாகாண பிரதம செயலகத்தில் பெறுகைப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

03. ரூபா 150,000.00 பெறுமதியிலான 2023.11.01 வரை செல்லுபடியாகும் இலங்கை மத்திய வங்கியில் அனுமதிக்கப்பட்ட எந்த வங்கியிலிருந்தும் தென் மாகாண பிரதம செயலாளரின் பெயரில் பெற்றுக் கொண்ட கேள்விப் பிணையொன்றை அல்லது பிரதம செயலகத்தின் கணக்குப் பிரிவிற்கு காசு செலுத்திய பின்பு வழங்கப்படும் பற்றுச் சீட்டை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசு, காசோலை அல்லது வங்கிக் கட்டளையாக சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைமுறிகள் நிராகரிக்கப்படும்.

04. பொறியிடப்பட்ட விலைமனுப் பத்திரங்களை 2023 ஓகஸ்ட் 04ம் திகதி பி.ப. 2.00 இற்கு முன் கிடைக்குமாறு தலைவர், பெறுகைக் குழு, தென் மாகாண பிரதம செயலகம், எஸ்.எச். தஹநாயக்க மாவத்த காலி என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து தென் மாகாண பிரதம செயலகத்தின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள ஆவணத்தில் குறிப்பிட்டு கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.

05. விலைமனுக்கள் சமர்ப்பிக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் பெறுகைப் இலக்கம் (SP/CS/NCB/23/02) மற்றும் டெஸ்க்டொப் கணனி துணைப்பாகங்கள் மற்றும் இயந்திராதிகளுக்கான விலைமனுக்கள் என்று குறிப்பிடுதல் வேண்டும். விலைமனுக்கள் திறத்தல் 2023 ஓகஸ்ட் 04 பி.ப. 2.00 இற்கு விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் பிரதம செயலகத்தில் இடம்பெறுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதைக் கவனிக்கவும்.

**கவனிக்கவும்:-**
பெறுகை அறிவித்தலை தென் மாகாண பிரதம செயலகத்தின் www.cs.sp.gov.lk இணைய தளத்தில் பார்வையிடலாம்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**தென் மாகாண பிரதம செயலகம்,**
**எஸ்.எச். தஹநாயக்க மாவத்தை,**
**காலி.**
**தொ.பே.இல. 091-4944016/ 0914946368**
**மின்னஞ்சல்: procurementplan1@gmail.com**

**திகதி: 2023.07.14**



**விளையாட்டு மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சு**

**தேசிய இளைஞர் படையணி**

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**சூரியவெவ தேசிய இளைஞர் படையணி நிலையத்தில் ஆண்கள் மற்றும் பெண் மாணவர்களின் மாற்றும் கட்டிடத்தின் (Type B) மீதி வேலையின் நிர்மாணம்**

**[Contract No.: YC/2/4/2023/W/01]**

1. கீழே விபரிக்கப்பட்டதும் 39.4 மில்லியன் ரூபா ஆகுசெலவில் மதிப்பீடு செய்யப்பட்டதுமான ''சூரியவெவ தேசிய இளைஞர் படையணி நிலையத்தில் ஆண்கள் மற்றும் பெண் மாணவர்களின் கட்டிடத்தில் (Type B) மீதி வேலையின் நிர்மாணத்திற்காக" தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தேசிய இளைஞர் படையணியின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத் (உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
நிர்மாணக் கால எல்லையானது 120 நாட்களாகும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடைபெறும். இந்த பெறுகையின் கீழ் செயற்படுத்தப்பட வேண்டிய வேலையின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியானது 50 மில்லியன் ரூபாவிற்கு குறைவாக இருப்பதினால், பிராந்திய முன்னுரிமை மற்றும் CIDA தர முன்னுரிமை ஆகியன *04/2016(iv) & 03/2020* ஆகிய இலக்கங்களைக் கொண்ட அரச நிதி சுற்றறிக்கைகளில் திட்டவட்டமாக குறிப்பிட்டுள்ளவாறு பிரயோகிக்கப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையுடன் சி-6, சி-5 அல்லது சி-4 தரங்களுக்காக கட்டிட நிர்மாணத்துறையில் பதிவும் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் விலைமனுக்களை மூடும் திகதி வரையும் செல்லுபடியாகும் தன்மையிலுமிருத்தல் வேண்டும். மேலும், பதிவானது ஒப்பந்தத்தை வழங்கும் திகதியிலும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
''விலைமனுதாரர் 1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் இலங்கை பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் தம்மை பதிவு செய்திருத்தல் வேண்டும்". பதிவுச் சான்றிதழின் (பிசிஏ-03) மூலப்பிரதியானது விலைமனுவுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பிசிஏ-03 சான்றிதழை சமர்ப்பிக்காத அவ்வாறான எந்தவொரு விலைமனுதாரருக்கும் பெறுகையானது வழங்கப்பட மாட்டாது.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 420 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய இளைஞர் படையணியின் நிருவாகம் மற்றும் நிதிக்கான மேலதிக பணிப்பாளரிடமிருந்து பெற்று எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 4 மணி வரையும் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
தொடர்பிலக்கங்கள் பின்வருமாறு: தொலைபேசி: 011-2688885. தொலைநகல்: 011-2684784.
5. 2023.07.17 ஆம் திகதியிலிருந்து 2023.08.07 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் எட்டாயிரம் ரூபாவை (8,000 ரூபா) மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 420 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய இளைஞர் படையணியின் நிருவாகம் மற்றும் நிதிக்கான மேலதிக பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. 2023.08.10 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 420 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய இளைஞர் படையணியின் நிருவாகம் மற்றும் நிதிக்கான மேலதிக பணிப்பாளரிடம் ஒப்படைக்கப்படல் வேண்டும் அல்லது பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும். விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் கொழும்பு-07, பௌத்தாலோக்க மாவத்தை, 420 ஆம் இலக்கத்திலுள்ள தேசிய இளைஞர் படையணியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விரைவாகவே திறக்கப்படும்.
7. விலைமனுக்கள் அவைகளை பெற்றுக் கொள்வதற்காக நிருணயிக்கப்பட்டுள்ள இறுதித் திகதியிலிருந்து அல்லது எந்தவொரு நீடிக்கப்பட்ட கால எல்லையிலிருந்தும் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
8. அனைத்து விலைமனுக்களும் பின்வருமாறு அமைந்துள்ள பாங்கிலான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
   - விலைமனுக்கோரல் ஆவணங்களின் 09 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள படிவத்தில்.
   - தேசிய இளைஞர் படையணியின் தலைவரின் பெயரில் வழங்கப்பட்டிருத்தல்
   - 591,000 ரூபா தொகைக்கானதாகவிருத்தல்
   - 2023.12.06 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல்
   - விலைமனுக்கோரல் தரவின் **ITB Clause 16.2** இல் குறித்துரைக்கப்பட்ட முகவராண்மைகளிலொன்றினால் வழங்கப்பட்டிருத்தல்.
9. 2023.07.27 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு தேசிய இளைஞர் படையணியின் தலைமையலுவலக பிரதான கேட்போர் கூடத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.

**பணிப்பாளர்,**
**தேசிய இளைஞர் படையணி,**
**இல.: 420, பௌத்தாலோக்க மாவத்தை,**
**கொழும்பு-07.**



OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

# பெறுகை அறிவித்தல்

## மினுவாங்கொட நகர சபை

மினுவாங்கொட நகர சபைக்குரித்தான புதிய பொதுச் சந்தைக் கட்டிடத்தொகுதியில் கதவுகள் இல்லாத கடை அறைகளுக்கு ரோலர் கதவுகளை வழங்கி பொருத்தும் செயற்றிட்டத்திற்கு இயைபாக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தகுதிகளைக் கொண்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

2023-08-07ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை விலைமனுப் படிவங்கள் வழங்கப்படும் என்பதுடன் இதன்பொருட்டு நகர சபைக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.

2023-08-08ஆம் திகதி மு.ப. 10.30 மணி வரை மட்டுமே விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து அவை திறக்கப்படும்.

பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிகளைப் பூர்த்தி செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இதற்காக விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவர்கள் எப்போதும் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவர்களாக இருத்தல் வேண்டும். செல்லுபடியாகும் CIDA பதிவுச் சான்றிதழின் சான்றுபடுத்திய பிரதியை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகும் விலைக்கோரல் பிணை முறியை ‘‘செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம் வாய்ந்த கடமைகளை செயற்படுத்தும் அதிகாரி, மினுவாங்கொட நகர சபை’’ எனும் பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கும்போது விலைக்கோரல் பிணை முறியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். அது மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற பிணை முறியாக அல்லது இலங்கைப் பண வைப்பாகவிருத்தல் வேண்டும்.

விலைக்கோரல் ஆவணங்களை இரு பிரதிகளில் தயாரித்து ‘‘செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம் வாய்ந்த கடமைகளை செயற்படுத்தும் அதிகாரி, மினுவாங்கொட நகர சபை’’ எனும் பெயரில் எழுதி செயற்றிட்டத்தின் பெயரைக் குறிப்பிட்டு மினுவாங்கொட நகர சபை செயலாளரின் அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் 2023-08-08ஆம் திகதி மு.ப. 10.30 மணி முன் உள்ளிடுதல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்து கொள்ளலாம்.

விலைமனுதாரர்களுடனான விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-08-02ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு நகர சபை அலுவலகத்தில் இடம்பெறும் என்பதுடன் இதில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

எந்தவொரு விலைமனுவையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் அதிகாரத்தை பெறுகைக் குழுவின் சிபாரிசின் பிரகாரம் சபை அல்லது செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம் வாய்ந்த கடமைகளை செயற்படுத்தும் அதிகாரி தன்னகத்தே கொண்டுள்ளார்.

மேலதிக விபரங்களை 011-2295275 எனும் தொலைபேசியில் சபையின் செயலாளரைத் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ளலாம்.

**அட்டவணை**

| | செயற்றிட்டத்தின் பெயர் | தேவையான தரம் | மீளளிக்கப் படாத விலைமனுப் படிவக் கட்டணம் | மீளளிக்கப் படும் விலைமனுப் பிணை வைப்பு | விலைக் கோரல் பிணை முறி செல்லுபடிக் காலம் | நிறைவு செய்யும் காலம் |
|---|---|---|---|---|---|---|
| 01 | மினுவாங்கொட நகர சபைக்குரித்தான புதிய பொதுச் சந்தைக் கட்டிடத் தொகுதியில் கதவுகள் இல்லாத கடை அறைகளுக்கு ரோலர் கதவுகளை வழங்கி பொருத்துதல் | CIDA கட்டிடங்கள் C 9 | 1000.00 | ரூபா 61000.00 | 2023-10-08 | உடன்படிக்கை நாள் முதல் 03 மாதங்கள் |

**கே.எச். கபில குமார,**
**தலைவர், பெறுகைக் குழு,**
**மினுவாங்கொட நகர சபை.**
**2023-07-17.**

# விலைக்கோரல் அறிவித்தல்

## வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

**விலைக்கோரல் இல. 035/T/2023**

**கட்டுநாயக்க, கனடா நட்புறவு வீதி, AASL எரிபொருள் நிரப்பு நிலையத்தில் பம்பி உதவியாளர் சேவையை (PUMP ATTENDANTS SERVICE) வழங்குதல்.**

இரண்டு (02) வருட காலத்திற்கு அந்தந்த சம்பளச் சபையினால் வகுக்கப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் கீழ் கட்டுநாயக்க, கனடா நட்புறவு வீதி, வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனத்தின் எரிபொருள் நிலையத்தில் பம்பி உதவியாளர் சேவையை வழங்குவதற்காக கீர்த்தி வாய்ந்த அமைப்புகளிலிருந்து வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் தகுதிகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர் என்பதுடன் விலைக்கோரலுக்குத் தேவையான ஆவணச் சான்றுகளை இணைக்குமாறு விலைமனுதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**வளமுள்ள விலைமனுதாரர்கள்:**

அ) வியாபாரப் பதிவுச் சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக அல்லது கம்பனிகள் சட்டத்தின் ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.

ஆ) விலைமனுதாரர் குறிப்பிட்டுள்ளதன் பிரகாரம் மனிதவலு சேவையை வழங்கும் திறன் கொண்டவராக இருத்தல் வேண்டும் மற்றும் விலைமனுதாரர் விலைக்கோரலின் இறுதி நாள் வரையில் கடந்த இரண்டு (02) வருடங்களில் இதனையொத்த சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கு குறைந்தபட்சம் 20 அனுபவம் வாய்ந்த பணியாட்தொகுதியிநரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ) விலைமனுதாரர் விலைக்கோரலின் இறுதி நாள் வரையில் கடந்த இரண்டு (02) வருடங்களில் ஒரு மாத்தில் 1,000,000.00 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியைக் கொண்ட இதனையொத்த சேவையை திருப்திகரமாகச் செய்திருத்தல் வேண்டும்.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றிற்காக மீளளிக்கப்படாத பத்தாயிரம் ரூபா (10,000.00) தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் உத்தியோகபூர்வ வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது நிகழ்நிலை கொடுப்பனவாக 10,000.00 ரூபாவைச் செலுத்துவதன் பேரில் www.airport.lk எனும் எமது இணையதளத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவில் 2023-07-18ஆம் திகதி முதல் 2023-08-08ஆம் திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைக்கோரல் ஆவணத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் சங்கிலி முகாமைத்துவப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள 01ஆம் இலக்க விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுதாரரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்களிலேயே விலைமனுக்கள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைக்கோரல்கள் 2023 ஆகஸ்ட் 09ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் குறித்த விலைமனுக்கள் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவில் திறக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட முடிவுறுத்தல் நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் முறையான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தினால் கோரும் போது செலுத்தப்படும் ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கான (750,000.00 ரூபா) பெறுமதியான வங்கி உத்தரவாதமொன்றை பிணை முறியாக வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரின் பெயரில் செலுத்துதல் வேண்டும். இந்த விலைக்கோரல் உத்தரவாதம் விலைமனுக்கள் முடிவுத்தப்படும் நாள் முதல் நூற்றியைம்பது நாட்களுக்கு (150) செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-07-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் வர்த்தகம் மற்றும் ஆதன தலைவரின் அலுவலகத்தில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து தள விஜயம் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், வழங்கல் முகாமைத்துவப் பிரிவின் 011-2264103 / 011-2264117 எனும் தொலைபேசி இலக்கங்களில், head.scm@airport.lk எனும் மின்னஞ்சல் முகவரியில் அல்லது www.airport.lk எனும் இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

The Housewives' companion
Classifieds on
Daily News

## பாதுகாப்பு அமைச்சு
## இலங்கை இராணுவம்

### விலைமனுக்கோரல் திருத்தம் செய்யப்பட்டதற்கான அறிவித்தல்

**இலங்கை இராணுவ முகாமுக்கு பச்சை மற்றும் உலர் உணவுப்பொருட்கள் வழங்கல் தொடர்பான கொள்முதல் - 2024**

**ஒப்பந்த இலக்கம் : S&T/3/DRY RATION/FRESH RATION/2024 (18)**

01. இலங்கை இராணுவ முகாமுக்கு வருடாந்த ஒப்பந்த அடிப்படையில் பச்சை மற்றும் உலர் உணவுப்பொருட்கள் விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழுவின் தலைவரினால் **2023.06.21 ஆம் திகதி வெளியான டெய்லி நியூஸ், தினமின, மற்றும் தினகரன்** பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விலைமனுக்கோரலில் (IFB) ஆறாம் பந்தியில் (06) பின்வரும் திருத்தங்கள் செய்யப்படடடுள்ளன.

| | | |
|---|---|---|
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | - | 2023.07.30 பி.ப.3.00 மணி வரை |
| மனுக்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி திகதி மற்றும் நேரம் | - | 2023.07.31 மு.ப.09.00 மணி வரை |
| மனுக்கள் திறக்கும் இடம், திகதி மற்றும் நேரம் | - | இராணுவ உள்ளக அரங்கம், இராணுவ வளாகம், பனாகொடை 2023.07.31 மு.ப.10.00 மணி வரை |

02. மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரங்களை தவிர மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகைகளில் வெளியான ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

03. இது தொடர்பாக ஆர்வமுள்ள மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் காணும் முகவரி மற்றும் தொலைப்பேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

கவனத்திற்கு : பணிப்பாளர் (வழங்கல் மற்றும் போக்குவரத்து)
விலாசம் : இராணுவத் தளபதி,
இராணுவத் தலைமையகம்,
ஸ்ரீ ஜெயவர்தனபுர,
கோட்டை.
தொலைபேசி : 0112302569, 0112302568
மின்னஞ்சல் : dtesandt@army.lk / dtesandt0@gmail.com

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழு,
(முப்படைகளுக்கான பச்சை மற்றும் உலர் உணவுப்பொருட்களை கொள்முதல் செய்தல் - 2024)
பாதுகாப்பு அமைச்சு

## இலங்கை கடற்படை
## பாதுகாப்பு அமைச்சு

### விலைமனுக்கோரல் திருத்தம் செய்யப்பட்டதற்கான அறிவித்தல்

**இலங்கை கடற்படை முகாமுக்கு புதிய மற்றும் உலர் உணவுப்பொருட்கள் வழங்கல் தொடர்பான கொள்முதல் - 2024**

**ஒப்பந்த இலக்கம் : SLN/VICT/ 01/2024**

01. இலங்கை கடற்படை முகாமுக்கு வருடாந்த ஒப்பந்த அடிப்படையில் புதிய மற்றும் உலர் உணவுப்பொருட்களை விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழுவின் தலைவரினால் **2023.06.21 ஆம் திகதி வெளியான டெய்லி நியூஸ், தினமின, மற்றும் தினகரன்** பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட விலைமனுக்கோரலில் (IFB) ஆறாம் பந்தியில் (06) பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட உள்ளன.

| | |
|---|---|
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | - 2023.07.30 பி.ப.3.00 மணி வரை |
| மனுக்கள் மூடப்படும் இறுதி திகதி மற்றும் | - 2023.07.31 மு.ப.09.00 மணி வரை |
| மனுக்கள் திறக்கும் திகதி மற்றும் நேரம் | - 2023.07.31 மு.ப.09.00 மணி வரை |

(கடற்படை தலைமையகம் அட்மிரல் சோமதிலக திசாநாயக்க கேட்போர் கூடத்தில்)

02. மேலே குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரங்களை தவிர மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகைகளில் வெளியான ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

03. இது தொடர்பாக ஆர்வமுள்ள மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் காணும் முகவரி மற்றும் தொலைப்பேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

விலாசம் : கடற்படை பணிப்பாளர், (உணவு மற்றும் சீருடைகள்),
கடற்படைத் தளபதி,
கடற்படை தலைமையகம்,
த.பெ.இல, 593,
கொழும்பு 01.
தொலைபேசி : 011 7190000, நீடிப்பு - 12351, 0117192351
தொலைநகல் : 011 2424577
மின்னஞ்சல் : nhqdnvc@navy.lk

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழு,
(முப்படைகளுக்கான புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல் - 2024),
பாதுகாப்பு அமைச்சு.

## பாதுகாப்பு அமைச்சு
## இலங்கை விமானப்படை

### விலைமனுக்கோரல் திருத்தம் செய்யப்பட்டதற்கான அறிவித்தல்

**இலங்கை விமானப்படைக்கு புதிய மற்றும் உலர் உணவுப்பொருட்கள் வழங்கல் தொடர்பான கொள்முதல் - 2024**

**ஒப்பந்த இலக்கம் : SLAF/RA/TB/2024**

01. இலங்கை கடற்படை முகாமுக்கு வருடாந்த ஒப்பந்த அடிப்படையில் புதிய மற்றும் உலர் உணவுப்பொருட்களை விநியோகஸ்தர்களை தெரிவு செய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழுவின் தலைவரினால் **2023.06.21 ஆம் திகதி வெளியான டெய்லி நியூஸ், தினமின, மற்றும் தினகரன்** பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட "புதிய மற்றும் உலர் உணவுப்பொருட்கள்" விலைமனுக்கோரலில் (IFB) ஆறாம் பந்தியில் (06) பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட உள்ளன.

| | |
|---|---|
| மனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் | - 2023.07.30 பி.ப.3.00 மணி வரை |
| மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதி மற்றும் நேரம் (SLAF TTS ஏக்கல) | - 2023.07.31 மு.ப.09.00 மணி வரை |
| மனுக்கள் திறக்கும் திகதி மற்றும் நேரம் "புதிய மற்றும் உலர் உணவுப்பொருட்கள்" இலங்கை விமானப்படை பயிற்சி நிலையம், ஏக்கல) | - 2023.07.31 மு.ப.09.30 மணி வரை |

02. மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி மற்றும் நேரங்களை தவிர மேலே பந்தி 01 இல் குறிப்பிடப்பட்டுள்ள பத்திரிகைகளில் வெளியான ஏனைய நிபந்தனைகளில் எவ்வித மாற்றமும் செய்யப்படவில்லை.

03. இது தொடர்பாக ஆர்வமுள்ள மனுதாரர்கள் மேலதிக விபரங்களை கீழ் காணும் முகவரி மற்றும் தொலைப்பேசி இலக்கத்தில் பெற்றுக்கொள்ளமுடியும்.

கவனத்திற்கு : தலைமை கொள்முதல் அதிகாரி
விலாசம் : விமானப்படை தளபதி,
விமானப்படை கொழும்பு நிலையம்
த.பெ.இல. 140, சேர் சிற்றம்பலம் A. கார்டினர் மாவத்த
கொழும்பு 02.
தொலைபேசி : 011 - 2347694 / 011- 2441044 (நீட்டிப்பு : 23550, 23569)
தொலைநகல் : 011- 2441553
மின்னஞ்சல் : cpd@slaf.gov.lk / acpot@slaf.gov.lk

தலைவர்,
அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட வழங்கல் குழு
(முப்படைகளுக்கான புதிய மற்றும் உலர் உணவுப் பொருட்களை கொள்முதல் செய்தல் - 2024)
பாதுகாப்பு அமைச்சு.

## இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களுக்கான சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

நாலக கொடஹேவா ஆகிய நான் இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 53(1)ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் 'இலங்கை கடற்றொழில் மற்றும் நீரியல்வளங்களுக்கான சங்கத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்' எனப்படும் சட்டமூல மொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகம் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக் கொண்ட மேற்குறித்த சங்கத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்ட மூலத்தின் நோக்கமாகும்.

அ. இலங்கையில் கடற்றொழில், நீரியல் வளங்களின் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளோர் மத்தியில் பயனுள்ள தொடர்பையும், ஒத்துழைப்பையும் மேம்படுத்தல்.

ஆ. இலங்கையில் அத்தகைய நடவடிக்கைகளில் கரிசனைகொண்ட அரச சார்புள்ளதும் அரச சார்பற்றதுமான அமைப்புடன் தொடர்புகொண்டு ஒத்துழைப்பு வழங்குதல்.

இ. நீரியல் வளங்களை அபிவிருத்தி செய்தல், பேணுதல் தொடர்பான விடயங்கள், கொள்கைகளை விஞ்ஞானிகளும் வேறு ஆளணியிநரும் ஆலோசிப்பதற்கான ஒரு அமைப்பாகச் சேவையாற்றுதல்,

**பிறவும்**

**நாலக கொடஹேவா**
**பாராளுமன்ற உறுப்பினர்.**

இணைப்பு 01

### 2011 இல 40 சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல 5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(3) பிரிவின் பிரகாரம் விடுக்கப்படும் அறிவித்தல்

2023.07.06ம் திகதி எம்பிலிப்பிட்டிய உயர் நீதிமன்றத்தினால் வழங்கு இல. SPL/01/2022 இன் கீழ் 2011 இல 40 எனும் சட்டத்தின் திருத்தப்பட்ட 2006 இல 5 நிதி மோசடியைத் தவிர்க்கும் சட்டத்தின் 8(2) (ஆ) பிரிவின் பிரகாரம் இல CAF 9998 இல. CBA 4775 மற்றும் இல. PF 4717 மோட்டார் வாகனத்திற்கு வழங்கப்பட்ட செயற்பாடற்றதாக்கும் கட்டளை 2023.07.05 முதல் 2023.10.05 வரை அமுல்படுத்தப்பட்டு நீடிக்கப்படுவதுடன் மூன்றாம் தரப்பினருக்கு வசதிகளை வழங்கும் முகமாக அறிந்து கொள்வதற்காக பிரசுரிக்கிறேன்.

# விலைமனு கோரல்

## கண்டி மாநகர சபை

கண்டி மாநகர சபைக்குரித்தான 79/11ஆம் இலக்க மாதிரி வீடுகள் வீதி, மாவில்மட கண்டி எனும் இடத்தில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் காணியை மறுசீரமைத்தல் மற்றும் மேம்படுத்தி முகாமைத்துவம் செய்தல், பராமரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக செயற்படுத்தல் குத்தகை முறையின் கீழ் பதினைந்து (15) வருடங்களுக்கு குத்தகைக்கு வழங்குதல்

01 கண்டி மாநகர சபையின் மாநகர ஆணையாளரினால் கண்டி மாநகர சபைக்குரித்தான 79/11ஆம் இலக்க மாதிரி வீடுகள் வீதி, மாவில்மட கண்டி எனும் இடத்தில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் காணியை மறுசீரமைத்தல் மற்றும் மேம்படுத்தி முகாமைத்துவம் செய்தல், பராமரித்தல் மற்றும் செயற்படுத்துவதற்காக செயற்படுத்தல் குத்தகை முறையின் கீழ் நடாத்திக் கொண்டு செல்வதற்காக தகுதி வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. இதன்பொருட்டு தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 10,000.00 + (வெட் மற்றும் முத்திரைக் கட்டணம்) பெறுமதியான மீளளிக்கப்படாத விலைக்கோரல் வைப்புத் தொகையை கண்டி மாநகர சபையின் மாநகர சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டுடன் கடிதத் தலைப்பில் வேண்டுகோள் கடிதமொன்றையும் மற்றும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழான பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றையும் சமர்ப்பித்து விலைக்கோரல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | |
|---|---|---|
| 01 | விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் | CPC/KMC/FD/M06/03/2023 |
| 02 | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை | 1. ரூபா 10,000.00 + (வெட் மற்றும் முத்திரைக் கட்டணம்)<br>• கண்டி மாநகர சபையின் சிறாப்பருக்குச் செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். |
| 03 | ஆகக் குறைந்த விலைக்கோரல் | முப்பத்தாறு மில்லியன் ரூபாவாகும். (ரூபா 36,000,000.00) இது அரச மதிப்பீட்டிற்கு உள்ளாகும். அரச மதிப்பீட்டுத் தொகை சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் தொகைக்கும் அதிகமாக இருந்தால் அரச மதிப்பீட்டுத் தொகை சாதகமான தொகையாகவும் அரச மதிப்பீட்டுத் தொகை சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலைக்கோரல் தொகையை விடக் குறைவாக இருந்தால் விலைமனுதாரரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தொகை சாதகமாக விலைக்கோரல் தொகையாக ஏற்றுக்கொள்வதற்கு விலைமனுதாரர் இணங்குதல் வேண்டும். |
| 04 | விலைமனு ஆவணங்கள் வழங்க ஆரம்பிக்கும் திகதி | 2023-07-17ஆம் திகதி முதல் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை வாரத்தின் வேலை நாட்களில் |
| 05 | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | கணக்காளர் (வருமானம்) அலுவலகம், இல. 12, தபோவன வீதி, மாநகர சபை, கண்டி. |
| 06 | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் | 2023-08-25ஆம் திகதி பி.ப. 2.45 மணி வரை |
| 07 | விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும் இடம், திகதி மற்றும் நேரம் | 2023-08-10ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி மாநகர சபையின் சபை மண்டபத்தில் |
| 08 | விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் | 2023-09-08ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் |
| 09 | பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடம் மற்றும் விலைமனு ஆவணங்கள் (தொழில்நுட்ப முன்மொழிவுகள்) திறக்கப்படும் இடம், திகதி மற்றும் நேரம் | 2023-09-08ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு தொழில்நுட்ப முன்மொழிவுகள் திறக்கப்படும் என்பதுடன் மு.ப. 10.00 மணிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அல்லது நேரில் கொண்டு வந்து கண்டி மாநகர சபையின் நிதி நிர்வாகத் திணைக்களத்தின் பிரதான முகாமைத்துவ உதவியாளரிடம் பற்றுச்சீட்டொன்றைப் பெற்றுக்கொண்டு பிரதான மாநகர கணக்காளர் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் / ஒப்படைத்தல் வேண்டும். |
| 10 | நிதி விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி, இடம் மற்றும் நேரம் | தொழில்நுட்ப முன்மொழிவுகள் மதிப்பீடு செய்யப்பட்டதன் பின் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களுக்கு நிதி முன்மொழிவுகள் திறக்கப்படும் நாள் பற்றி எழுத்து மூலம் அறிவிக்கப்படும். விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் பிரதிநிதியொருவர் எதிரில் நிதி முன்மொழிவுகள் திறக்கப்படும். |
| 11 | விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் | விலைமனு ஆவணங்களை ஏற்றுக்கொண்ட நிறுவனத்தின் (நிறுவனம்/ பங்கு வியாபாரம் / தனி நபர் வியாபாரம்) பெயரிலேயே விலைமனு ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலைமனு ஆவணங்களை பரிமாற்றம் செய்ய முடியாது. |
| 12 | விலைமனுப் பிணை முறி | 2024 ஜனவரி 05ஆம் திகதி வரை செல்லுபடியாகும் வகையில் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரத்துச் செய்ய முடியாத கோரப்படும்போது செலுத்தப்படும், நிபந்தனையற்றதாக வழங்கப்பட்ட ஒரு இலட்சம் ரூபா (100,000.00 ரூபா) பெறுமதியான விலைமனுப் பிணை முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும். |
| 13 | செயலாற்றுகை பிணை முறி | தெரிவு செய்யப்பட்ட விலைமனுதாரரினால் சாதாரண வருடாந்த கேள்வித் தொகைக்குச் சமமான பெறுமதியான இரத்துச் செய்ய முடியாத கோரப்படும்போது செலுத்தப்படும், நிபந்தனையற்ற செயலாற்றுகை பிணை முறியொன்றை இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து 12 மாதங்கள் வரை செல்லுபடியாகும் வகையில் வழங்குதல் வேண்டும். இந்த செயலாற்றுகை பிணை முறி ஒவ்வொரு வருடமும் காலாவதியாகும் மாதத்திற்கு முன் கடந்த வருடத்திற்கான செயலாற்றுகை பிணை முறியின் பெறுமதியை விட 2% வருடாந்த அதிகரிப்புடன் வழங்குதல் வேண்டும். |
| 14 | தகைமைகள் | 1. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனம், கூட்டு வியாபாரங்கள் அல்லது தனிநபர் வியாபாரங்கள் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம்.<br>2. 2021/2022ஆம் வருடத்திற்கான கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கையின் பிரகாரம் நடைமுறைச் சொத்து வீகிதம் 1:1.5 ஆக இருத்தல் வேண்டும்.<br>3. இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமொன்றில் பணிப்பாளரொருவர், கூட்டு வியாபாரத்தின் பங்குதாரர் அல்லது தனி வியாபாரத்தின் உரிமையாளர் இலங்கை கடன் தகவல் பணியகத்தில் (CRIB) கடனைச் செலுத்தாத அறிக்கை இல்லாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் 2023-07-30ஆம் திகதியன்றுள்ளவாறு CRIB அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>4. விலைமனுதாரர் கண்டி மாநகர சபையினால் அபகீர்த்தியாளர் பட்டியலுக்கு உட்படாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் அதுபற்றி சத்தியக் கடதாசி ஒன்றின் மூலம் உறுதிப்படுத்துதல்<br>5. விலைமனுதாரரினால் சமர்ப்பிக்கப்படும் தொழில்நுட்ப முன்மொழிவின் பிரகாரம் கட்டிடம் மற்றும் காணி மறுசீரமைப்பு மற்றும் மேம்படுத்தலுக்கு இயைபான மதிப்பீட்டுத் தொகைக்கு சமமான தகைமையுள்ள CIDA பதிவைப்பெற்ற ஒப்பந்தக்காரர்/காரர்கள் பெயரிட்டு அவர்களின் விபரங்களை தொழில்நுட்ப முன்மொழிவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>6. விலைமனுதாரர் கண்டி மாநகர சபையுடன் நிதி நடவடிக்கைகள் தொடர்பான வழக்கு உள்ள நிறுவனம் / நிறுவனங்களாக அல்லது தனி நபர் / தனி நபர்களாக இருத்தல் கூடாது. |

03. இது தொடர்பில் ஆர்வம் காட்டும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் 2023-07-17ஆம் திகதி முதல் கண்டி மாநகர சபையில் வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 2.45 மணி வரையில் மாநகர கணக்காளர் (வருமானம்) அவர்களின் 081-2227393 எனும் தொலைபேசி இலக்கத்தில் மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் விலைமனுக்களைப் பெற்றுக்கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**கே.கே.பீ.ஐ.டி.பீ. விஜேதிலக,**
**மாநகர ஆணையாளர்,**
**கண்டி மாநகர சபை.**

**2023-07-14ஆம் திகதி**

# விலைக்கோரல் அறிவித்தல்

## வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்

**விலைக்கோரல் இல. 015/T/2023**

**மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய முனையக் கட்டிடம் மற்றும் அதனோடிணைந்த பிரதேசங்களுக்கு சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குதல்.**

ஒரு (01) வருட காலத்திற்கு மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலைய முனையக் கட்டிடம் மற்றும் அதனோடிணைந்த பிரதேசங்களுக்கு சுத்திகரிப்பு மற்றும் துப்புரவேற்பாட்டு சேவைகளை வழங்குவதற்காக கீர்த்தி வாய்ந்த அமைப்புகளிலிருந்து வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

பின்வரும் தகுதிகளைக் கொண்டவர்கள் மட்டுமே விண்ணப்பிக்க ஊக்குவிக்கப்படுகின்றனர் என்பதுடன் விலைக்கோரலுக்குத் தேவையான ஆவணச் சான்றுகளை இணைக்குமாறு விலைமனுதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

**வளமுள்ள விலைமனுதாரர்கள்:**

அ) வியாபாரப் பதிவுச் சட்டத்தின் கீழ் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக அல்லது கம்பனிகள் சட்டத்தின் ஒன்றிணைக்கப்பட்ட நிறுவனமாகவிருத்தல் வேண்டும்.

ஆ) விலைமனுதாரர் விலைக்கோரலின் இறுதி நாள் வரையில் கடந்த இரண்டு (02) வருடங்களில் ஒரு மாதத்தில் 1,000,000.00 ரூபா அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமதியைக் கொண்ட இதனையொத்த சேவையை திருப்திகரமாகச் செய்திருத்தல் வேண்டும்.

இ) விலைமனுதாரர் விலைக்கோரலின் இறுதி நாள் வரையில் கடந்த இரண்டு (02) வருடங்களில் தற்போது சேவை வழங்கும் நிறுவனத்தின் கீழ் துப்புரவேற்பாட்டுச் சேவைகளை தொடர்ச்சியாக வழங்குவதற்கு குறைந்தபட்சம் 65 அனுபவம் வாய்ந்த பணியாட்தொகுதியிநரைக் கொண்டிருத்தல் வேண்டும்.

கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனத்தில் எந்தவொரு விலைமனுதாரருக்கும் ஒரே நேரத்தில் இரண்டுக்கு (02) மேற்பட்ட ஒப்பந்தங்கள் வழங்கப்படமாட்டாது.

விலைமனு ஆவணத் தொகுதியொன்றிற்காக மீளளிக்கப்படாத பன்னிரண்டாயிரம் ரூபா (12,000.00) தொகையை விமான நிலையங்கள் மற்றும் விமான சேவைகள் (இலங்கை), (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவிற்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் ஆவணங்களிலேயே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு விலைமனுதாரரால் உத்தியோகபூர்வ வேண்டுகோள் கடிதமொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவில் 2023-07-18ஆம் திகதி முதல் 2023-08-08ஆம் திகதி வரையில் எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை விலைக்கோரல் ஆவணத் தொகுதியைப் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிடப்பட்ட முகவரியில் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

விலைமனுதாரர்கள் அவர்களின் விலைமனுக்களை கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் சங்கிலி முகாமைத்துவப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். மேலும் விலைமனுதாரரின் விருப்பத்தின் பிரகாரம் அவர்களின் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை மேற்குறிப்பிடப்பட்ட முகவரிக்கு நேரில் கொண்டு வந்து ஒப்படைக்கலாம். வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஆவணங்களிலேயே விலைமனுக்கள் தயாரிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைக்கோரல்கள் 2023 ஆகஸ்ட் 09ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 2.00 மணிக்கு முடிவுறுத்தப்படும் என்பதுடன் குறித்த விலைமனுக்கள் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்கவில் அமைந்துள்ள வழங்கல் சங்கிலி முகாமைத்துவப் பிரிவில் திறக்கப்படும். நிர்ணயிக்கப்பட்ட முடிவுறுத்தல் நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் முறையான அங்கீகாரம் பெற்ற பிரதிநிதிகள் விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

விலைக்கோரல் பிணை முறியாக, இலங்கையில் செயற்படும், இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றில் வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தினால் கோரும் போது செலுத்தப்படும் ஒன்பது இலட்சத்து அறுபத்தையாயிரம் ரூபாவுக்கான (965,000.00 ரூபா) பெறுமதியான வங்கி உத்தரவாதமொன்றை பிணை முறியாக வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் தலைவரின் பெயரில் செலுத்தப்படத்தக்கதாக விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2023-07-28ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு மத்தள, ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தின், வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனத்தின் சிவில் பொறியியல் பிரிவின் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) மாநாட்டு அறையில் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து தள விஜயம் மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களை விமானநிலைய முகாமைத்துவப் பிரிவின் 047-2031100 / 047-2031111 எனும் தொலைபேசி இலக்கங்களில், அல்லது www.airport.lk எனும் இணையதளத்திற்குப் பிரவேசித்துப் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**வ/ப விமான நிலையம் மற்றும் விமான சேவைகள் (இலங்கை) (தனியார்) நிறுவனம்,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம், கட்டுநாயக்க.**

**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சு**

**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி**

## பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின் பல்மாடி தரிப்பிடம் மற்றும் வியாபார இடஎல்லை அமைத்தல்

**விலைக்கேள்வி இலக்கம்: 007/T/2023**

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமான சேவைகள் (இலங்கை) தனியார் கம்பனி சார்பான அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சு வார்த்தைக் குழு CANC) கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் (BIA) "பல்மாடி தரிப்பிடம் மற்றும் வியாபார இடஎல்லை அமைப்பதற்காக" கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைந்தபட்ச தகைமைகளைக் பூர்த்தி செய்துள்ள நிறுவனங்களிடமிருந்து முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்குமாறு அழைப்பு விடுக்கின்றது.

(அ) சமீபத்திய கடந்த 10 ஆண்டுகளில் இந்த கருத்திட்டத்துக்கு இணையான அல்லது அதற்கு மேற்பட்ட செலவின் கீழ் குறைந்த பட்சம் கட்டிட இரு கருத்திட்டங்களின் வடிவமைப்பு மற்றும் கட்டுமானம் தொடர்பால அனுபவம்

(ஆ) சமீபத்திய கடந்த 15 ஆண்டுகளுக்குள் திட்டமிடப்பட்டு, கட்டியமைக்கப்பட்டு செயல்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள் தொடர்பில் உள்ள அனுபவம்

(இ) கடந்த கிட்டிய 5 ஆண்டுகளில் கட்டுமான நடவடிக்கைகளுக்கான சராசரி ஆண்டு புறள்வு குறைந்தபட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் முப்பது மில்லியனாக (USD 30,000,000) இருத்தல் அல்லது முன்மொழிவுகள் திறக்கப்படும் திகதியின் நாணய மதிப்புகளுக்கமைய அதற்கு ஒத்த வேறு நாணய வகையில் இருத்தல்

(ஈ) கட்டுமானப் பணிகளை நிறைவு செய்வதற்காக முன்மொழிவாளர்களுக்கு போதிய குறைந்தபட்சம் கருத்திட்டச் செலவிற்கு சமனான) பின்னர் செலுத்தக்கூடியவாறான நிதி வசதிகள் (credit) பெறுவதற்கான சாத்தியபாடுகள் இருத்தல் வேண்டும்.

(உ) முன்மொழிவாளர்களுக்கு 2022/2023 நிதியாண்டிற்கான நேர்மறை நிகர சொத்துக்களுடன் ஒரு ஐந்தொகை இருத்தல் வேண்டும்.

எந்தவொரு உள்ளூர் மற்றும் வெளிநாட்டு நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளுக்காக முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்க முடியும். கூட்டு முயற்சியின் அனைத்து தரப்பினரும் ஒட்டு மொத்த நடவடிக்கைகள் தொடர்பிலும் கூட்டாகவோ மற்றும் தனித்தனியாகவோ பதில்கூறப்பட வேண்டும்.

ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் ஆவணம் (RFP) 2023.07.17 முதல் 2023.08.31 வரை வேலை புரியும் நாட்களில் மணித்தியாலம் 09.00 முதல் 15.00 வரை கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், வழங்கல் தொடர் முகாமைத்துவ பிரிவிலிருந்து, திருப்பிச் செலுத்தப்படாத 300 ஐக்கிய அமெரிக்க டொலருக்குச் சமனான தொகை இலங்கை ரூபாவில் செலுத்தி கொள்வனவு செய்து கொள்ள முடியும்.

இதற்கு மேலதிகமாக, 300 ஐக்கிய அமெரிக்க டொலர்கள் நிகழ்நிலையில் செலுத்தி முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் ஆவணம் (RFP) www.airport.lk என்ற இணையதளத்திலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும். மேற்குறிப்பிட்ட விலாசத்தில் அல்லது இணையதளத்திலிருந்து முன்மொழிவுகளைச் சமர்ப்பிக்கும் ஆவணம் (RFP) இலவசமாக பார்வையிட முடியும். எவ்வாறாயினும் குறித்த தரப்பினரால் கொள்வனவு செய்த முன்மொழிவுகள் சமரப்பிக்கும் ஆவணத்தினை பயன்படுத்தி முன்மொழிவுகள் சமரப்பித்தல் வேண்டும்.

முன்மொழிவுகளை பொறுப்பேற்றல் 2023.09.18 ஆம் திகதி 14.00 மணியுடன் முடிவடைவதுடன் உடனடியாக முன்மொழிவாளர்களின் அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதிநிதிகள் முன்னிலையில் இலங்கையின் கொழும்பு 01, உலக வர்த்தக நிலையத்தின், மேற்கு கோபுரத்தின் 30 ஆம் மாடியில் அமைந்துள்ள துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானசேவைகள் அமைச்சில் விமானசேவைகள் பிரிவில் முன்மொழிவுகள் திறக்கப்படும்.

ஆகையால் முறைப்படி பூர்த்தி செய்யப்படாத RFP ஆவணங்கள் (முன்மொழிவுகள்) 2023.09.18 மணித்தியாலம் 14.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு மேற்குறிப்பிட்ட விலாசத்திற்கு அனுப்புதல் ஒப்படைக்கப்பட வேண்டும். தாமதமாக சமரப்பிக்கப்படுகின்ற முன்மொழிவுகள் நிராகரிக்கப்படுவதுடன் திறக்கப்படாமலே திருப்பி அனுப்பப்படும்.

அனைத்து முன்மொழிவுகளுடன் இரண்டு இலட்சம் ஐக்கிய அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்கு நிகரான பெறுமதியில் இலங்கை ரூபாயில் செலுத்தி முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்படும் ஆவணத்தில் (RFP) குறிப்பிடப்பட்டுள்ள ஒரு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவு பிணைமுறியொன்று (on demand) சமர்ப்பித்தல் வேண்டும்.

முன்மொழிவாளர்களுக்கு அல்லது அவர்களால் அமர்த்தப்படுகின்ற பிரதிநிதிகளுக்கு 2023.08.17 திகதி மு.ப 10.00 மணிக்கு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், புதிய நிர்வாக கட்டிடத்தில், 4 ஆம் மாடியில், கலந்துரையாடுகின்ற அறையில் நடாத்தப்படுகின்ற ஆரம்ப விலைக்கேள்வியுடன் தொடர்புடைய கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது. கூட்டத்திற்கு பின்னர் முன்மொழியப்பட்ட கருத்திட்ட இடத்தினை பார்வையிட முடியும். கூட்டம் ZOOM தொழில்நுட்பத்தினூடாக தொடர்புபடுத்தப்படுவதுடன் ஆவணத்தினை கொள்வனவு செய்த முன்மொழிவாளர்களுக்கு நிகழ்நிலையில் தொடர்பு கொள்ள வேண்டிய விபரங்கள் வழங்கப்படும்.

மேலதிக தகவல்கள் பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) கிளைத் தலைவர்களின் 011-2263500, 011- 2263502 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக அல்லது pd@airport.lk என்ற மின்னஞ்சல் மூலம் பெற்றுக் கொள்ள முடியும்.

மேலே கொடுக்கப்பட்டுள்ள அனைத்து நேரங்களும் இலங்கை நேரப்படி. (: இலங்கை நேரம் GMT + 5.30 மணி)

**தவிசாளர்,**
**அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட பேச்சுவார்த்தைக்குழு,**
**துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சு**
**இலக்கம் 19, சைத்திய வீதி,**
**கொழும்பு - 01, இலங்கை**

## ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை

# வரவு செலவு அறிக்கை – 2024

### பிரசைகளின் முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்களைப் பெற்றுக்கொள்ளல்

## கோட்டே பிரசைகள் மற்றும் தொண்டர் அமைப்புக்களிற்கு விடுக்கப்படும் அழைப்பு!

2024ஆம் ஆண்டிற்கான உங்கள் தொகுதி/ பிரதேச அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பான முன்மொழிவுகள் மற்றும் கருத்துக்களை 2023.08.20ஆம் திகதிக்கு முன்னர் எமக்கு முன்வைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

வரவு செலவு அறிக்கையில் நிதி ஒதுக்கீடு செய்யப்படக் கூடிய உங்கள் முன் மொழிவுகள் மற்றும் கருத்துக்கள் கவனத்திற் கொள்ளப்படுமென்பதனைக் கௌரவமாக அறிவித்துக் கொள்கின்றேன்.

**தகவல்களை முன்வைத்தல்:-**
**மாநகர ஆணையாளர்,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே மாநகர சபை,**
**ராஜகிரிய.**

**தொ.பே. இல : 0112-874701/02**
**மின்னஞ்சல் முகவரி : kottemc@gmail.com**

## மீட்கப்படாதிருக்கும் அடகு நகைகளை பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்தல்

மக்கள் வங்கி மட்டக்களப்பு பிராந்தியத்தின் பின்வரும் கிளைகள் மற்றும் சேவை நிலையங்களில் 31.03.2022 வரை அடகு வைக்கப்பட்டு 04.08.2023ஆம் திகதி வரை மீட்கப்படாத நகைகள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள திகதி, இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும். முன் அறிவித்தல் எதுவுமின்றி இவ் ஏல விற்பனையை ஒருங்கிணைக்கவோ, இரத்துச் செய்யவோ அல்லது பிற்போடவோ வங்கிக்கு உரிமை உண்டு என்பதை அறியத் தருகிறோம்.

ஏல விற்பனை ஆரம்பமாகும் நேரம் முற்பகல் 9.00 மணி.

| | |
|---|---|
| ஏல விற்பனை நடைபெறும் திகதி | 05.08.2023 |
| ஏல விற்பனை நடைபெறும் இடம் | மட்டக்களப்பு நகரக்கிளை |
| கிளையின் பெயர் | காத்தான்குடி, மட்டக்களப்பு, மட்டக்களப்பு நகரக்கிளை, கொக்கட்டிச்சோலை, செங்கலடி, களுவாஞ்சிக்குடி, வாழைச்சேனை, ஓட்டமாவடி |
| சேவை நிலையம் | ஆரையம்பதி, கிரான்குளம், இருதயபுரம், வவுணதீவு, மண்டூர், பழுகாமம், சித்தாண்டி, வாகரை, கிரான் |

**பிராந்திய முகாமையாளர்,**
**மக்கள் வங்கி**
**பிராந்திய தலைமைக் காரியாலயம்,**
**மட்டக்களப்பு (0652224476)**

PEOPLE'S BANK
Pride of the Nation

# பெறுகை அறிவித்தல்

## போதனா வைத்தியசாலை மஹமோதர

காலி மஹமோதர போதனா வைத்தியசாலையில் 2023/2024ஆம் வருடத்தில் மின்சார பராமரிப்பு வேலைகளை நடாத்திக் கொண்டு செல்வதற்காக மின்சார பராமரிப்பு நடவடிக்கைகள் தொடர்பில் தகைமை வாய்ந்த அரச மற்றும் தனியார் நிறுவனங்களிடமிருந்து 2023-08-15ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும். இயைபுடைய மாதிரிப் படிவங்களை 1500.00 ரூபா செலுத்தி வைத்தியசாலையின் பிரதான அலுவலகத்தில் 2023-08-14ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை பெற்றுக்கொள்ளலாம். விலைமனுக்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் ''மின்சார பராமரிப்பிற்கான விலைமனு'' எனக் குறிப்பிட்டு தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, மஹமோதர, காலி'' என முகவரியிட்டு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லாவிடில் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்.**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை, மஹமோதர,**
**காலி.**
**091-2222261**

# பெறுகை அறிவித்தல்

## தேசிய வைத்தியசாலை - கண்டி

கண்டி தேசிய வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத மனித சடலங்கள் (சிசு, சிறுவர், முதியோர் சடலங்கள்) இறந்து பிறந்த, கருச்சிதைவுகள், மற்றும் ஏனைய உடற்பாகங்கள், ஆய்வுகூடத்தில் அகற்றப்படும் உடற்கூறு மாதிரிகள் அடக்கம் செய்வதற்காக திறந்த போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமையின் கீழ் விலைமனுக் கோரல் - 2023/ 2024

குறித்த விடயங்கள் தொடர்பாக 02 வருடகால அனுபவமுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கண்டி தேசிய வைத்தியசாலையின் பிராந்தியப் பெறுகைக் குழுவின் தலைவரினால், 2023.08.07 அன்று மு.ப. 10.00 வரை முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

குறித்த விலைமனுக்கள், 2023.08.07 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு, 'தலைவர், பிராந்தியப் பெறுகைக்குழு, தேசிய வைத்தியசாலை -கண்டி' என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புதல் அல்லது பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் மேற்கொள்ளல் வேண்டும்.

விலைமனுத்திறத்தல் 2023.08.07 அன்று மு.ப. 10.30 இற்கு பிரதான கணக்காளரின் அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும்.

**பொது நிபந்தனைகள்**

01. விலைமனுப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக ரூபா 3500.00 இற்கான மீளளிக்கப்படாத கட்டணமொன்று, கண்டி தேசிய வைத்தியசாலையின் சிறாப்பருக்குச் செலுத்திப் பெற்றுக்கொள்ளும் பற்றுச் சீட்டின் மூலப் பிரதியொன்று, விண்ணப்பக்கடிதமொன்றுடன், வியாபாரப் பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
02. 2023.07.17 முதல் 2023.08.06 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரையான காலப் பிரிவில் கண்டி தேசிய வைத்தியசாலையின் தாபனப் பிரிவில் AM விடயத்தின் விலைமனு மாதிரிப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
03. விண்ணப்பப்படிவங்களைப் பெற்றுக்கொள்வதற்காக பிரதிநிதியொருவர் சமுகமளிப்பதாயின் விண்ணப்பதாரரின் அதிகாரமளிக்கப்பெற்ற கடிதமொன்று மற்றும் ஆளடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய அடையாள அட்டை சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
04. விலைமனுதாரர்கள் மற்றும் பிரதிநிதிகள் விலைமனுத்திறக்கப்படும் வேளையில் சமுகமளித்திருக்கலாம்.
05. திறந்த போட்டிரீதியிலான முறைமையின் கீழ் இவ்விலைமனுக் கோரப்படும்.

**தலைவர்**
**பிராந்தியப் பெறுகைக்குழு,**
**கண்டி.**

## மீட்டெடுக்கப்படாத அடகு வைக்கப்பட்டு மீட்கப்படாத தங்க நகைகள் பொது ஏல விற்பனை

31.03.2022 வரை புத்தளம் பிராந்தியத்திலுள்ள மக்கள் வங்கியின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள கிளைகள் மற்றம் சேவை மையங்களில் அடகு வைக்கப்பட்டு 04.08.2023 வரையில் மீட்கப்படாத தங்க நகைகளில் கீழே கொடுக்கப்பட்டுள்ள திகதி மற்றும் வளாகத்தில் பொது ஏலத்தில் விற்கப்படும். ஒவ்வொரு நாளும் காலை 9.00 மணிக்கு ஏலம் தொடங்கும்.

| **ஏல விற்பனை திகதி** | **05.08.2023 & 06.08.2023** |
|---|---|
| ஏல விற்பனை இடம் | மக்கள் வங்கி வென்னப்புவ கிளை வளாகம் |
| அடகு வைக்கப்பட்டுள்ள கிளைகள் | புத்தளம், சிலாபம், வென்னப்புவ, நாத்தாண்டிய, கல்பிட்டி, மாதம்பே, ஆனமடுவ, தங்கொடுவ, மஹாவெவ, மாரவில |
| அடகு வைக்கப்பட்ட சேவை மையங்கள் | மதுரங்குளிய, சிலாபம் கடற்றொழில், ஆரச்சிக்கட்டுவ, உடப்புவ, போலவத்த, லுணுவில, உல்ஹிட்டியாவ, கொட்டார முல்ல, வெலிப்பன்னகஹமுல்ல, நாரவில, நொரோச்சோலை, ஆண்டிகம, தொடுவாவ |

இந்த ஏலவிற்பனையை பொது மக்களுக்கு எந்த அறிவிப்பும் இல்லாமல் மாற்ற, ரத்துசெய்ய, ஒன்றிணைக்க அல்லது ஒத்திவைக்க வங்கிக்கு உரிமை உள்ளது.

**பிராந்திய முகாமையாளர்,**
**பிராந்திய தலைமை அலுவலகம் (புத்தளம்).**
**தொலைபேசி எண். 032-2253301**

PEOPLE'S BANK
Pride of the Nation

## 2023 கூட்டுறவு

## பிரதேச செயற்குழு வாக்கெடுப்பு

# வாக்குரிமைபெற்ற அங்கத்தவர் பெயர் பட்டியலை காட்சிப்படுத்தல்

வ/ப ரிதீகம பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு பிரதேச செயற்குழு வாக்கெடுப்பிற்காக குறித்த 2023.06.30ம் திகதிக்கு பூர்த்தி செய்யப்பட்ட வாக்குரிமைபெற்ற அங்கத்தவர் பெயர் பட்டியல் வடமேல் மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்/ பதிவாளரால் விநியோகிக்கப்படும் இல. 1981/2 மற்றும் 2016.08.22ம் திகதி அதி விசேட வர்த்தமானி அறிவித்தலின் 5:2 பிரிவில் குறிப்பிடப்படுமாறு வாக்குரிமை பெற்ற அங்கத்தவர் பெயர் பட்டியல் 2023.07.17 முதல் 2023.07.30 வரை கீழ்க் காணும் இடங்களில் காட்சிப்படுத்தப்படும்.

- **சங்க தலைமையகம்**
- **சங்கத்திற்கு சொந்தமான சகல கூட்டுறவு பிரதேசங்கள் மற்றும் சகல விற்பனை அலகுகளில்**

இவ் வாக்குரிமைபெற்ற அங்கத்தவர் பெயர் பட்டியல்களில் பெயர்கள் உள்ளடக்கப்படுவதற்கு அல்லது திருத்துவதற்கு சம்பந்தப்பட்ட முறைப்பாடுகள் அல்லது எதிர்ப்புக்கள் இருப்பின் 2023.07.30ம் திகதிக்கு முன்பு சங்கத்தின் செயலாளருக்கு பதிவுத் தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைத்தல் வேண்டும்.

**செயலாளர்,**
**வ/ப, ரிதீகம பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்,**
**ரிதீகம.**
**தொலைபேசி இலக்கம் :- 037-2252049**

**திகதி : 2023.07.13**

## வழங்கல் தொடர்பான அறிவித்தல்
## புத்தசாசன சமய மற்றும் கலாச்சார விவகார அமைச்சு
## மத்திய கலாசார நிதியம்

மத்திய கலாசார நிதியத்தினால் கீழ்வரும் கூரை ஓடுகளை கொள்வனவு செய்வதற்காக கூரை ஓடுகள் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து கேள்விகள் கோரப்படுகின்றன.

| இலக்கம் | கேள்வி இலக்கம் | விபரம் | உத்தேசிக்கப்படும் தொகை ரூபா மில்லியன் | எதிர்பார்க்கப்படும் தகைமைகள் | கேள்விப்பத்திரக் கட்டணம் | பிணைப் பாதுகாப்புத் தொகை மற்றும் செல்லுபடியாகும் காலம் | கேள்விப்பத்திரங்களை வெளியிடல் | கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி / நேரம் மற்றும் இடம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | CCF/HO/ Goods/ 05-2023 | மொனராகல செயற்றிட்டத்திற்கு கூரை ஓடுகள் (ரோமன் ஓடுகள்) 6700 கொள்வனவுக்கு | 03 மில்லியன் | SLS 2:2016 தரச்சான்றிதழ் காணப்பட வேண்டும் | ரூ.1500.00 | ரூ.30,000.00 180 நாட்கள் | 2023.07.17 - 2023.08.08 | 2023.08.09 பி.ப.2.00 பிரதான காரியாலயம் கொழும்பு 07 |

1. கேள்விப்பத்திரங்கள் பரிசீலனை மற்றும் பணக்கொடுப்பனவு -

   கூரை ஓடுகளை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்களை இல.212/1, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 மத்திய கலாசார நிதியத்தின் பிரதான காரியாலயத்திலுள்ள சிராப் பிரிவிலும் மற்றும் செயற்றிட்ட முகாமையாளர், மொனராகல செயற்றிட்டம், புதுருவகல புரா வித்யா வளாகம், புதருவகல, வெல்லவாயவில் **2023/07/17**ஆம் திகதி முதல் **2023/08/08**ஆம் திகதி வரையிலான வார நாட்களில் **மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00** மணி பரிசீலனை செய்யலாம்.

2. பிணை பாதுகாப்பிற்கு மேற்குறிப்பிட்ட காரியாலயங்களின் சிராப்பரிடம் பணத்தை செலுத்திய ரசீது மூலமாக அல்லது இலங்கையில் செயற்படும் கொமர்ஷல் வங்கியில் முன்வைக்கப்பட்டுள்ள மாதிரிப்படிவத்திற்கேற்ப பெற்றுக்கொள்ளப்பட்ட பிணைப் பாதுகாப்பினை கேள்விக்கோரலுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

3. அதற்கேற்ப பூரணப்படுத்திய உங்களது கேள்விக்கோரல்களை **2023/08/09**ஆம் திகதி **பி.ப 2.00** மணிக்கு முன் கிடைக்குமாறு தலைவர், வழங்கல் சபை, மத்திய கலாசார நிதியம், இல. 212/1, பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு 07 என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாக அனுப்பவும் அல்லது முத்திரையிடப்பட்ட கேள்விக்கோரல்களை நேரில் வந்து அக்காரியாலயங்களின் வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டடுள்ள கேள்விப்பெட்டியிலிடவும். **2023.08.09ஆம்** திகதி **பி.ப 2.00** மணிக்கு முன்னர் நீங்கள் வழங்கவிருக்கும் கூரை ஓட்டின் மாதிரியினை (8 கூரை ஓடுகள்) பெற்றுக்கொடுப்பது ஆய்வக பரிசீலனை நடவடிக்கைகளுக்கு அவசியமாகும்.

4. **2023/08/09ஆம் திகதி பி.ப 2.00** மணியின் பின்னர் கேள்விகள் பிரதான காரியாலயத்தில் திறக்கப்படும். இச்சந்தர்ப்பத்திற்கு கேள்விதாரர் மற்றும் அவர்களால் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கலந்துகொள்ளலாம்.

5. முறையாக பூரணப்படுத்தாத மற்றும் பிந்திக்கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படுவதோடு, வழங்கல் சபையின் தீர்மானமே இறுதி முடிவாகும்.

6. இது தொடர்பிலான மேலதிக விபரங்களுக்கு - **011-2552671** என்ற இலக்கத்திற்கு அழைக்கவும் மற்றும் மத்திய கலாசார நிதிய இணையத்தளத்தினை பயன்படுத்தவும் **(www.ccf.gov.lk)**. மேலும் செயற்றிட்ட முகாமையாளர், மொனராகல செயற்றிட்டம் - 055-2274093 என்ற தொலைபேசி இலக்கத்திற்கும் அழைப்பினை மேற்கொள்ளலாம்.

பணிப்பாளர் நாயகம்
மத்திய கலாசார நிதியம்

# பெறுகை அறிவித்தல்

## வைத்திய ஆராய்ச்சி நிலையம்

## உணவகத்தை நடத்திச் செல்லல் - 2023/2024

கொழும்பு - 08, பொரளை, டெனிஸ்டர் டி சில்வா மாவத்தை, வைத்திய ஆராய்ச்சி நிலையத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் 2023-2024 வரை ஒருவருட காலத்திற்கு உணவக சேவையை நடத்திச் செல்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. இதுபற்றிய ஆர்வம் காட்டுகின்ற நபர்களிடமிருந்து கேள்வி ஆவணக் கட்டணமாக ரூ.3000.00 மீளளிக்கப்படாத விண்ணப்பப் படிவக்கட்டணமாக நிறுவன கேள்விச் சபைத் தலைவருக்கு செலுத்தி கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். 2023.07.17 முதல் 2023.08.07 வரை சாதாரண அலுவலக நாட்களில் மு.ப.10.00 முதல் பி.ப.2.00 வரை கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.
02. கேள்வி விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வைத்திய ஆராய்சி நிலையத்திற்காக 2023-2024 ஆம் ஆண்டிற்காக உணவக சேவையை வழங்குதல்" என்று குறிப்பிட்டு 2023.08.08 மு.ப.10.00 அல்லது அதற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், வைத்திய ஆராய்ச்சி நிலையம், பொரளை, கொழும்பு - 08 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம்.
03. கேள்வி ஆவணங்கள் 02 பிரதிகளை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென குறிப்பிட்டு வேறுவேறு உறைகளில் இட்டு அவ் உறைகள் இரண்டையும் தனி உறைகளில் இட்டு சமர்ப்பித்தல் வேண்டும்.
04. கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்தவுடன் அவ் இடத்திலேயே கேள்வி விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் கேள்விதாரர்களுக்கு அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு அவ்வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதியளிக்கப்படும்.
05. கேள்வி ஆவணங்களை கட்டணங்கள் இன்றியே கணக்குப்பிரிவில் பரீட்சிக்கலாம்.
06. அரச ஒப்பந்த ஆலோசனைகளை மீறி அபகீர்த்தியானோர் பட்டியல் இடப்பட்டுள்ள நபர்களுக்கு கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
07. குறித்த கேள்விகளை முழுமையாகவோ அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரிக்கும் உரிமை பெறுகைக்குழுவிற்கு உரியது.
08. மேலதிக விபரங்களுக்காக கணக்குப் பிரிவை அழையுங்கள்

**தொலைபேசி இலக்கம் : 0112693532 Ext - 822**

**வைத்தியர் தேதுனு டயஸ் பண்டார,**
**தலைவர்**
**பெறுகைச்சபை**
**வைத்திய ஆராய்ச்சி நிலையம்.**

# கேள்வி கோரல் அறிவித்தல்

## விவசாய அமைச்சு

## கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்

கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தினால் திணைக்களத்திற்குத் தேவையான கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களை கொள்வனவு செய்வதற்காக பொருத்தமான மற்றும் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள கேள்விதாரர்களிடம் இருந்து பொறியிடப்பட்ட விலை மனுக்கள் கோரப்படுகின்றன.

**1. கொள்வனவுகள்**

| விடய இல | விடயம் | விலைமனு பாதுகாப்பு தொகை (ரூபா) | விலைமனு மீளப் பெறமுடியாத கட்டணம் (ரூபா) | விலைமனு வழங்கும் காலம் | விலைமனு திறக்கும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| 1.1 | விலங்கு தீவனம், கணிப்பொருள் கலவை மற்றும் கன்று ஸ்டாட்டர் தீவனம் கொள்வனவு (ஆகஸ்ட் டிசம்பர்) 2023 | 200,000/= | 7000/= | 2023.07.17 முதல் 2023.08.04 வரை | 2023.08.07 மு.ப.11.00 |
| 1.2 | Near Infrared Analyzer - விலங்கு ஊட்டச்சத்து கொள்வனவு 2023 | 200,000/= | 7000/= | | |

01. கேள்விப் பத்திரங்கள் கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் நிதிப் பணிப்பாளர் பணிமனையில் இருந்து அலுவலக நேரத்தில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 மணி வரை) பெற்றுக்கொள்ளலாம்.

02. பொறியிடப்பட்ட கேள்விப் பத்திரங்களை முடிவுத் திகதி மற்றும் நேரத்திற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது நிதிப் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடலாம். விலை மனுக்களை உள்ளிட்டு அனுப்பும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விடயத்தின் பெயரை தெளிவாக குறிப்பிடுதல் வேண்டும்.

03. மேலதிக தகவலுக்காக கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் இணைய தளத்தை பார்வையிடவும். (www.daph.gov.lk)

**தொலைபேசி இல: 081-2388197/ 081-2385701/ 081-2385227**
**081-2388120/081-2388189 நீடிப்பு 290/291**

**பணிப்பாளர் நாயகம்/ தலைவர் (தி.பொ.கொ.கு)**
**கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களம்**
**இலக்கம் 1020, த.பெ. இலக்கம் 13,**
**கெட்டம்பே, பேராதனை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## விவசாய அமைச்சு

## கமத்தொழில் திணைக்களம்

பேராதெனிய கமத்தொழில் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பின்வரும் நிர்மாணங்களிற்காக, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள ஆகக்குறைந்த தரம் அல்லது அதற்கு மேற்பட்ட இக்டாட் (ICTAD) அல்லது சீடா (CIDA) பதிவைக் கொண்டுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து இத்தால் விலைமனுக்கோரப்படுகின்றது.

எந்தவொரு விலைமனுதாரருக்காகவும் முகவரொருவர், இணைமுகவரொருவர், உப முகவரொருவர் அல்லது பெயர் குறிப்பிடப்படும் எவரேனும் முன்வரும் நபர்கள் தொடர்பாக வழிகாட்டல் கைநூல் 8(1) (இணைப்பு-13) இன் பிரகாரம் 1987 இல 03 என்ற பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் கீழ் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப்பெற்றிருத்தல் வேண்டமென்பதுடன், அதனை உறுதிப்படுத்துவதற்காக அப்பதிவுச் சான்றிதழின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விலைமனுக்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

2023.07.18 முதல் 2023.08.07 அன்று பி.ப. 2.00 வரை அலுவலக நேரங்களில் இத்திணைக்களத்தின் பொறியியல் பிரிவில் விபரங்களுடன் கூடிய விலைமனுக்களை இலவசமாகப் பரிசீலனை மேற்கொண்டு, அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத வைப்புத்தொகையைச் செலுத்தி அவற்றைப் பெற்றுக்கொள்ளலாமென்பதுடன், 2023.08.08 அன்று மு.ப. 10.30 இற்கு முன்னர் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் (ப/2 கிளையில்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள பதிவேட்டில் குறிப்பிட்டு, அங்கு வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியிற் சேர்த்தல் அல்லது பதிவுத்தபாலில் அனுப்புதல் மூலம் விலைமனுக்களைச் சமர்ப்பிக்கலாம். அன்றைய தினம் மு.ப. 10.35 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும் அவ்வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரின் எழுத்துருவ அதிகாரம் பெற்றுள்ள பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

இது தொடர்பாக மேலதிக தகவல்கள் தேவையெனின், கமத்தொழில் திணைக்களத்தின் பிரதான பொறியியலாளர் பிரிவிற்கு வருகை தந்து அல்லது பின்வரும் தொலைபேசி எண்கள் மூலம் விசாரித்து அறிந்து கொள்ளலாம்.

விலைமனுக்களை அடக்கும் உறையின் இடது பக்க மேல் மூலையில் ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் திறக்கப்படும் திகதி, நேரம் குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

| கருமத்தின் தன்மை | பதிவுத் தொகுதி (ICTAD) (CIDA) | விலைமனு வைப்பு (விவசாயப் பணிப்பாளர் நாயகம் பெயரில்) | | |
|---|---|---|---|---|
| | | மீளளிக்கப் படாத ரூபா | மீளளிக்கப்படும் | |
| | | | காசாக (ரூபா) | வங்கி வரைவு மூலம் (ரூபா) |
| மஹ இலுப்பல்லம விதை உறுதிப்பாடு செய்யும் சேவையின் விதைகள் ஆய்வுகூட கட்டிடத்தை புதுப்பித்தல் (ரூபா 74,357,941.50) | C-04 | 18,000.00 | 743,550.00 | 1,487,100.00 |

**விவசாயப் பணிப்பாளர் நாயகம்,**
**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக்குழு,**
**ப/2 கிளை,**
**கமத்தொழிற் திணைக்களம்**
**பேராதெனிய.**

**தொ.பே.இல. 081-2388006 - 081-2388126**
**தொலைநகல்: 081-2384308**

## கமத்தொழில் அமைச்சு

## கமநல அபிவிருத்தி திணைக்களம்

# பெறுகைக்கான அறிவித்தல்

**பரசூட் நாற்றுத் தட்டுகளை கொள்வனவு செய்தல் - 2023**
**Purchase of Parachute Nursery Trays - 2023**

01. நெற் பயிர் சாகுபடிக்காக பரசூட் பாவனை முறை மூலம் வேளாண்மை மேம்பாட்டுத் திட்டம் - 2023-ன் கீழ் கமநல அபிவிருத்தி திணைக்களத்திற்காக கமத்தொழில் அமைச்சின் பெறுகைக்குழுவின் தலைவரினால் கீழே குறிப்பிட்டுள்ளபடி பரசூட் நாற்றுத் தட்டுகளை கொள்வனவு செய்வதற்கு தகுதியான வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| பெறுகை இலக்கம் | விபரம் | தேவைப்படும் அளவு |
|---|---|---|
| **MOA/NCB/Parachute trays/03/2023** | பரசூட் நாற்றுத் தட்டுகளை கொள்வனவு செய்தல் | 3,266,000 |

02. தரத்திற்கு ஏற்ப பரசூட் நாற்றுத் தட்டுகளை வழங்குவதற்கான வணிகமாகப் பதிவுசெய்யப்பட்ட மற்றும் பரிந்துரைக்கப்பட்ட அனுபவம் உள்ள வழங்குனர்களுக்கு **ரூ.12,500.00** மீள்ளளிக்கப்படாத கட்டணத்தினை கமத்தொழில் அமைச்சின் சரப்பிடம் செலுத்தியதற்கான பற்றுச்சீட்டினை சமர்ப்பித்த பின்னர் கொள்முதல் ஆவணங்கள் **2023.07.17 ஆம் திகதி முதல் 2023.08.04** ஆம் திகதி வரை வேலை நாட்களில் **மு.ப.9.00 மணி** முதல் **பி.ப.3.00** மணி வரை கமத்தொழில் அமைச்சின் நிர்வாக பிரிவு III இல் பெற்றுக்கொள்ள முடியும்.

03. மனுவுடன், மனுதாரரினால் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த ஏல மதிப்பில் (VAT தவிர்த்து) 1% மனு காப்புறுதியினை (இலங்கை மத்திய வங்கியால் அங்கீகரிக்கப்பட்ட வணிக வங்கியிலிருந்து பெறப்பட்டது) சமர்ப்பிக்க வேண்டும்.

04. மனு நிபந்தனைகளின்படி **அசல் மற்றும் நகல் பிரதிகளை** இணைத்து தனி உறையில் இட்டு சமர்ப்பிக்க வேண்டும். மனு ஆவணம் இடப்பட்ட உறையின் மேல் இடது மூலையில் **"பரசூட் நாற்றுத் தட்டுகளை கொள்வனவு செய்தல் - 2023"** எனக் குறிப்பிட்டு மூடப்பட்ட கொள்முதல் ஆவணங்கள் **2023.08.07 ஆம் திகதி பி.ப.2.00** மணிக்கு முன்னர், **தலைவர், அமைச்சின் கொள்முதல் குழு, கமத்தொழில் அமைச்சு, கொவிஜன மந்திரய, இல-80/5, ரஜமல்வத்த ஒழுங்கை, பத்தரமுல்ல.** என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலமாகவோ அல்லது கமத்தொழில் அமைச்சின் முதலாம் மாடியில் நிர்வாக பிரிவு III இல் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் நேரடியாக இடலாம். தாமதமான மனுக்கள் நிராகரிக்கப்படும். மனு கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.

05. இது தொடர்பான மேலதிக தகவல்களை **0112-887406** என்ற தொலைபேசியினூடாக பெற்றுக்கொள்ள முடியும்.

06. இந்த கொள்முதல் பணி தொடர்பாக அமைச்சின் கொள்முதல் குழுவின் முடிவு இறுதியானதாகும்.

**தலைவர்,**
**அமைச்சின் கொள்முதல் குழு,**
**கமத்தொழில் அமைச்சு, கொவிஜன மந்திரய,**
**இல-80/5, ரஜமல்வத்த ஒழுங்கை,**
**பத்தரமுல்ல.**



# விலைமனுக் கோரல்

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி

**விலைக்கேள்வி இலக்கம் - 027/T/2023**

**யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், பலாலி, அலுவலக கட்டிடத்தினை நிர்மாணித்தல்.**

தவிசாளர், பெறுகைக் குழு இலக்கம் 01 இன் மூலம் வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், பலாலி அலுவலக கட்டிடத்தினை நிர்மாணிப்பதற்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைக்கேள்விகள், தகைமைகளைக்கொண்ட பொருத்தமான விலைக்கூறுநர்களிடமிருந்து அழைக்கப்படுகின்றன.

ஒப்பந்தத்தின் கட்டுமான வேலைகளுக்குரிய கால எல்லை 180 நாட்களாகும்.

கருத்திட்டங்கள் அமைவிடம் : யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம், பலாலி,

தேசிய போட்டியிடல் விலைக்கோரல் நடைமுறைகளுக்கமைவாகவே, விலைக்கேள்விகள் இடம்பெறும்.

இவ் ஒப்பந்தம் தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள விலைக்கேள்வியாளர்களுக்கே வழங்கப்படுவதுடன், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் இதற்கு முன்னர் நிராகரிக்கப்பட்ட பெயர் பட்டியலில் பெயர் உள்ளடங்கப்படாத ஒருவர் / தாபனமாக அமையப் பெறுதல் வேண்டும். மேலும், கட்டுமானக் கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையின், கட்டிட கட்டுமானம் தொடர்பாக சீ 3 (C-3) அல்லது சீ4 ( C-4) தரங்களில் பதிவுசெய்யப்பட்ட குறித்த வகையிலான கட்டுமானப் பணிகள் தொடர்பான அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

இது தொடர்பாக ஆர்வம் காட்டும் விலைக்கேள்வியாளர்களுக்கு, 2023.07.18 முதல் 2023.08.15 ஆந் திகதி வரையில் ஏதேனும் வேலை செய்யும் நாட்களில் மு.ப 09.00 மணிக்கும் பி.ப 03.00 மணிக்கும் இடையேயான காலப்பகுதிக்குள், கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், தவிசாளர், பெறுகை குழு இலக்கம் 01, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவிற்கு எழுத்து மூலமான கோரிக்கை விடுவதன் மூலம் மற்றும் கேள்விப்பத்திர கட்டணமாக திருப்பி தரப்படாத ரூபா பதினைந்தாயிரம் (ரூபா 15,000.00) காசாகச் செலுத்தி, ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ள அனைத்தும் பூர்த்திசெய்யப்பட்ட விலைக்கேள்வி இணைப்பு கோவையொன்றினைக் கொள்வனவு செய்துகொள்ள முடியும். அக்குறித்த விலைக்கேள்வி ஆவணங்களை மேற்குறிப்பிட்ட விலாசத்தில் கட்டணங்களின்றி பார்வையிட முடியும்.

கேள்விப்பத்திர உத்தரவாதத்திற்காக சகல விலைக்கேள்வியாளர்களும், குறித்த ஒரு விலைக்கேள்விக்காக ரூபா எழுநூற்று ஐம்பதாயிரம் (ரூபா 750,000.00) பணமாக அல்லது விலைக்கேள்வி தகவல் அட்டவணையில் 05 ஆம் பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட தாபனமொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்வியின் அடிப்படையிலான விலைக்கேள்வி பிணைமுறியொன்று அதற்கு சமனான உத்தரவாதம் (தேவையேற்படும் பட்சத்தில் பணமாக மாற்றக்கூடிய) அக்குறித்த விலைக்கேள்வியுடன் சமர்பித்தல் வேண்டும்.

2023.08.02 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு பலாலி விமானநிலைய முகாமையாளரின் அலுவலகத்தில் நடைப்பெறும் விலைக்குறிப்பிடல் தொடர்பான கூட்டத்தில் பங்கேற்குமாறு அனைத்து விலைக்கேள்வியாளர்களுக்கும் மற்றும் அவர்களின் அதிகாரப் பூர்வமான பிரதிநிதிகளுக்கும் இத்துடன் அழைப்பு விடுக்கப்படுகின்றது.

முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கேள்விகள், பிரதியொன்றுடன் 2023.08.16 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு நேரடியாக அல்லது பதிவுத்தபால் மூலம் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தின், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின் வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவின், பெறுகைக் குழு இலக்கம் 01, தவிசாளருக்கு ஏற்பாடுகள் செய்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கும் விலைக்கேள்விகள் நிராகரிக்கப்படும். அத்திகதியில் குறித்த நேரத்தில் விலைக்கேள்விகள் பொறுப்பேற்கும் நேரம் முடிவடைந்ததும், விலைக்கேள்வியாளர்கள் அல்லது அவர்களின் அதிகாரப் பூர்வமான பிரதிநிதிகள் முந்நிலையில் அக்குறித்த விலைக்கேள்விகள் திறக்கப்படும்.

இது தொடர்பாக மேலதிக தகவல்களைப் பெறவேண்டுமாயின் கட்டுநாயக்க, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையத்தில், வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனியின், சிவில் பொறியியலாளர் (திட்டமிடல் மற்றும் வடிவமைப்பு) பிரிவின், கிளைத் தலைவர் மூலம் 0112263500/3510 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைப்பதன் ஊடாக மற்றும் தொலைநகல் இலக்கம் 011 2251356 மூலம் அறிந்து கொள்ள முடியும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) (தனியார்) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்**
**கட்டுநாயக்க.**

## இலங்கை சனநாயக சோஷலிச குடியரசு

## வனசீவராசிகள் மற்றும் வன பாதுகாப்பு அமைச்சு

## வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்

# கேள்வி அழைப்பு

01. வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ்க்காணும் வேலைகளுக்காக முன் தகைமையுள்ள கேள்விதாரர்களால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| கேள்வி இல. | பெறுகை இலக்கம் | வேலையின் பெயர் | பொறியியலாளர் மதிப்பீட்டும் பெறுமதி (வெட் இன்றி ரூ. மில்லியன்) | CIDA நிறுவனத்தின் பதிவு | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்ப கட்டணம் (ரூ.) | கேள்விப் பிணைப் பெறுமதி (ரூ.) |
|---|---|---|---|---|---|---|
| 01 | WL/02/20-B-09/2023 | ரந்தெனிகல Tree Centre பயிற்சி நிலையத்தில் கட்டிடம் பழுது பார்த்தல் (கட்டம் 2) | 40.7 | C6 அல்லது அதற்கு மேல் (கட்டிடங்கள்) | 10,500.00 | 611,000/- 2023.12.05 ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும் |

02. கேள்விகோரல் தேசிய போட்டி கேள்வி கோரலின் கீழ் நடைபெறும்

03. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு கேள்வி ஆவணங்களை 2023.08.07 வரை அரச வேலை செய்யும் அலுவலக நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை பத்தரமுல்ல வன சீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் கணக்குப் பிரிவில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம்.

கேள்விக்கு முன்னரான கூட்டம் 2023.07.28 ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு ரந்தெனிகல Tree Centre பயிற்சி நிலையத்தில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன அத்துடன் கட்டிட வளாகத்தையும் பரீட்சிக்கலாம்.

04. கேள்வி ஆவணங்கள் ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை 2023.08.07ம் திகதி வரை வன சீவராசிகள் பணிப்பாளர் நாயகம், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் பெயரில் குறித்த நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் மேற்கொள்ளப்படும் எழுத்து மூல வேண்டுதல் மற்றும் CIDA பதிவுப் புத்தகம் மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்துவதன் பேரில் பெற்றுக் கொள்ளலாம்.

05. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்கள் குறித்த செயற்றிட்டங்களை பரீட்சித்துப் பார்த்து கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

06. மேற்படி கேள்வி பிணையை வங்கி மூலம் சமர்ப்பிப்பதாயின் தரப்பட்டுள்ள பெறுமதி தரப்பட்டுள்ள திகதி வரை செல்லுபடியாகுமாறு அரச அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கியின் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை காசாக செலுத்துவதாயின் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் பிரதியொன்றை இணைத்தல் வேண்டும். கேள்வி ஆவணங்களுடன் கேள்வி பிணையை சமர்ப்பித்திராத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின கீழ் 5 மில்லியன் அல்லது அதற்கு மேற்பட்ட ஒப்பந்தங்களுக்காக கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்தில் பதிவு செய்து PCA03 சான்றிதழை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டியதுடன் அவ்வாறல்லாத கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

07. பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்களை மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறு வேறாக கடித உறைகளில் இட்டு பொறியிட்டு மீண்டும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த ஒப்பந்தத்தின் பெயர் மற்றும் இலக்கத்தை குறிப்பிட்டு 2023.08.08 பி.ப. 2.30 இற்கு முன் கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அல்லது வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தின் நிதிப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்வி உள்ளிடும் பெட்டியில் உள்ளிடல் வேண்டும் அத்துடன் தாமதமாகக் கிடைக்கும் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கேள்விகளை திறத்தல் அன்றே (2023.08.08) பி.ப. 2.30 இற்கு இடம்பெறுவதுடன் அதற்காக உங்களுக்கு அல்லது உங்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

08. கேள்விப் பத்திரங்கள் பற்றிய மேலதிக விபரங்கள் 0112 871537 தொ. பே. மூலம் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் (நிதி)ஐ அழைத்து பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை திணைக்கள பெறுகைக் குழுவிற்கு உரியதுடன், இவ் அறிவித்தலில் அல்லது கேள்வி மாதிரிகளில் குறிப்பிடப்பட்டுள்ள அல்லது குறிப்பிடப்படாத இப் பெறுகை விடயங்களுடன் சம்பந்தப்பட்ட ஏதேனும் விடயங்கள் பற்றிய தீர்மானம் பெற்றுக் கொள்ளும் அதிகாரம் வனசீவராசிகள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்திற்கு உரியது.

09. கேள்விப்பத்திரங்களைத் தயாரித்தல் சம்பந்தமாக ஏற்படுகின்ற எந்த ஆகு செலவுகள் சம்பந்தமாக தலைவர், திணைக்கள பெறுகைக் குழுவினால் பொறுப்புக்கூறப்படமாட்டாது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்,**
**இல. 811/ஏ, ஜயந்திபுர வீதி,**
**பத்தரமுல்ல.**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | Piyumi - 011 2 429 383 | Gayani - 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

## இலங்கைத் துறைமுக அதிகாரசபை

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

கீழே விபரிக்கப்பட்டவாறு 2023 ஒக்டோபர் 01 முதல் 2024 செப்டம்பர் 30ஆம் திகதி வரையான ஒரு வருட காலத்திற்கு இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான வாகன அணிகள் மற்றும் உபகரண அணிகளை காப்புறுதி செய்வதற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுக அதிகார சபை (SLPA) இன் சார்பாக பணிப்பாளர் (தொழில்நுட்பம்) இப்போது அழைக்கின்றார்.

| கேள்வி இல. | கேள்வியின் பெயர் | விலைமனு முறை | விலைமனுப் பிணைத் தொகை | ஆவணக் கட்டணம் VAT அடங்கலாக (இ. ரூபா) | முடிவுறுத்தப் படும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|---|
| EW/7/INS/ 2023-2024 | 2023/2024 வருடங்களில் இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான வாகன அணி மற்றும் உபகரண அணியை காப்புறுதி செய்தல் | தேசிய போட்டி கேள்வி முறையை (NCB) | இ. ரூபா 300,000/- | இ. ரூபா 8,000/- | 2023-08-10 14.00 மணித்தியாலம் |

1. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்படும் கேள்விகளுக்கு 1987இன் 03ம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகிக்கப்படும் என விலைமனுதாரர்கள் இத்தால் அறிவுறுத்தப்படுகிறார்கள். இதற்கமைய சகல தரப்பினரும் மேற்குறிப்பிட்ட ஒவ்வொரு கேள்வியின் பொருட்டும் ஒப்பந்தக் காலப்பகுதியில் கூறப்பட்ட சட்டத்தை கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும். எனவே, கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் தாமாகவே, பொது ஒப்பந்தங்களுக்காக, பதிவு செய்யுமாறு விலைமனுதாரர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். அத்துடன் PCA 3 பதிவுச் சான்றிதழை விலைமனுவுடன் இணைத்து சமர்ப்பித்தல் வேண்டும்.
2. இலங்கை காப்புறுதி ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு (IRSL) அல்லது இலங்கை காப்புறுதி சபையுடன் பதிவு செய்துள்ள காப்புறுதி நிறுவனங்களாக விலைமனுதாரர் இருத்தல் வேண்டும். பதிவுச் சான்றிதழ் விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும் அத்துடன் விலைமனுதாரர் நாடளாவிய ரீதியிலான கிளை வலையமைப்புக்களை கொண்டிருத்தல் வேண்டும். அத்துடன் விலைமனுவுடன் கிளைகளின் பட்டியல் அத்துடன் அவர்களது முகவரிகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.
3. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு - 01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் இயந்திர பொறியியல் பிரிவின், பிரதான பொறியியலாளர் (இயந்திரங்கள்) அவர்களிடமிருந்து மேலதிகத் தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி: **011 2451920/** தொலைநகல்: **011 2324071** மற்றும் 2023 ஜூலை 20ஆம் திகதி முதல் 2023ஆம் ஆகஸ்ட் 10ஆம் திகதி வரையில் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 4.00 மணி வரையில் இதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
4. மீளளிக்கப்படாத கட்டணமான 8,000.00 ரூபாவை ரொக்கப்பணத்தில் செலுத்திய பின்னர், 2023 ஜூலை 20ஆம் திகதி முதல் 2023 ஆகஸ்ட் 10ஆம் திகதி வரையில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 2.00 மணி வரை மேற்படி முகவரியிலுள்ள பிரதான பொறியியலாளர் (இயந்திரப் பொறித்தொகுதி) அவர்களுக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், முதன்மை காப்புறுதி நிறுவனம் அல்லது அவர்களது முகவர்/ தரகர்கள் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களில் முழுமையான தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும். முதன்மையான காப்புறுதி நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்ட ஒவ்வொரு உத்தேச தகைமையான முதன்மை காப்புறுதி நிறுவனம் அல்லது அவர்களது முகவர்/ தரகர் ஊடாக ஒரேயொரு விலைமனுவின் பெயர் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். பல்வகை விலைமனு மற்றும் மாற்று விலைமனுக்களை ஏதாவது முதன்மை காப்புறுதி நிறுவனம் அல்லது அவர்களது முகவர்/ தரகர் ஊடாக சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்களும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது அத்துடன் அவை நிராகரிக்கப்படும். வளமுள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு - 01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் தொழில்நுட்ப நூலகத்தில் 2023 ஜூலை 27ஆம் திகதி இடம்பெறவுள்ள கேள்விக்கு முன்னரான கூட்டத்தில் பங்குபற்றலாம்.
5. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுப் பிணை முறியுடனான விலைமனுக்களை விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நேரமான 2023 ஆகஸ்ட் 10ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, இலங்கைத் துறைமுக அதிகார சபை, இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு - 01, இலங்கை எனும் முகவரிக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டும் அல்லது விலைமனுப் பிணை முறியுடனான விலைமனுக்களை விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் நேரத்திற்கு முன் இலங்கை, கொழும்பு 01, லேடன் பஸ்தியன் வீதி, 45ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் பொறியியல் வேலைகள் பிரிவில் இந்நோக்கத்திற்காக வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். பிந்திய விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. மேற்கூறப்பட்ட முகவரியில் விலைமனுதாரர்களினால் விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் நேரடியாக கலந்துகொள்ளத் தெரிவு செய்யப்பட்டுள்ள இரண்டு பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும்.

**பிரதான பொறியியலாளர் (தொழில்நுட்பம்)**
**கடல்சார் பொறியியல் பிரிவு**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை**
**இல. 45, லேடன் பஸ்தியன் வீதி, கொழும்பு - 01.**
**27 ஜூலை 2021**

## சுகாதார அமைச்சு

# விலைமனுக்களுக்கான அழைத்தல்

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு

## Supply, Installation, Commissioning, Testing and Maintenance of 02 Nos. of 1,000 Kva (Prime) Generators with Synchronizing System for New Maternity Hospital - Karapitiya

1. கராபிட்டிய, புதிய மகப்பேற்று வைத்தியசாலைக்கு 2 எண்ணிக்கையான 1,000 Kva (Prime) Generators ஐ synchronizing முறைமையில் வழங்கல், நிறுவுதல், செயற்பட வைத்தல், பரீட்சித்தல் மற்றும் பராமரிப்பு ஆகியவற்றிற்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து அமைச்சு பெறுகை குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார்.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவும் 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் கூட்டிணைக்கப்பட்டவராகவும் உற்பத்தியாளருடன் சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற விற்பனையாளராகவுமிருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை கொழும்பு-10, வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை, ‘சுவசிரிபாய’, 385 ஆம் இலக்கத்திலுள்ள சுகாதார அமைச்சின் இரண்டாம் மாடியின் 236 ஆம் இலக்க அறையிலுள்ள பொறியியல் சேவைகளுக்கான மேலதிக செயலாளரிடமிருந்து வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2.30 மணி வரையும் பெற்றுக் கொள்ளலாம்.
5. 2023 ஒகஸ்ட் 4 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக 20,000 ரூபாவைச் செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான கோரிக்கையொன்றை சமர்ப்பிப்பதன் மூலம், சுகாதார அமைச்சின் இரண்டாம் மாடியின் 236 ஆம் இலக்க அறையிலுள்ள பொறியியல் சேவைகளுக்கான மேலதிக செயலாளரிடமிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
6. உண்மையான ஆரம்ப திகதியிலிருந்து விலைமனுக்கள் 91 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலும் ஒப்பந்தக் காலமானது 147 நாட்களுக்குமாகவிருத்தல் வேண்டும்.
7. 2023 ஜூலை 27 ஆம் திகதியன்று கராபிட்டிய, புதிய மகப்பேற்று வைத்தியசாலையில் விலைமனு முன்னோடிக் கூட்டமானது நடைபெறும்.
8. விலைமனுக்கள் 2023 ஒகஸ்ட் 7 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். அனைத்து விலைமனுக்களும் 1,500,000 ரூபா தொகைக்கும் 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலுள்ளதும் இலங்கையிலுள்ள புகழ் வாய்ந்த வங்கியொன்றிலிருந்து அல்லது அங்கீகரிக்கப்பட்ட காப்புறுதி கம்பனியொன்றிலிருந்து பெறப்பட்டதுமான விலைமனுப்பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலே குறிப்பிட்டுள்ள நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
9. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ள முகவரியானது பின்வருமாறு:

**மேலதிக செயலாளர் (பொறியியல் சேவைகள்),**
**சுகாதார அமைச்சு,**
**2 ஆம் மாடி, ‘‘சுவசிரிபாய”,**
**வண. பத்தேகம விமலவன்ச தேரோ மாவத்தை,**
**கொழும்பு-10.**
**தொலைபேசி: 0112-682878**
**மின்னஞ்சல்: addlseceng@health.gov.lk**

# பெறுகை அறிவித்தல்

## சுகாதார அமைச்சு - பொது வைத்தியசாலை, கேகாலை

1. கேகாலை பொது வைத்தியசாலையின் கீழே தரப்பட்டுள்ள வேலை விடயங்களுக்காக தகைமையுள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
2. 2023.07.17 முதல் 2023.08.07 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை வாரத்தின் சாதாரண அலுவலக நாட்களில் கேள்விப் பத்திரங்கள் விநியோகிக்கப்படும் (தகைமைகளை உறுதி செய்யும் கடிதமொன்றை கட்டாயமாக சமர்ப்பித்தல் வேண்டும்)
3. இரு பிரதிகளுடன் சரியாக பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திர ஆவணங்கள் அவற்றில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த கேள்வி பிணை முறியுடன் 2023.08.08 மு.ப. 10.30 இற்கு முன்பு கிடைக்குமாறு தலைவர், பிரதேச பெறுகைக் குழு, பொது வைத்தியசாலை, கேகாலை என்ற, முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம். அவ்வாறு இல்லையெனில் எமது நிறுவனத்தின் கணக்குப்பிரிவில் உள்ள பெறுகை ஆவணம் உள்ளிடும் பெட்டியில் கையோடுகொண்டு வந்து உள்ளிடலாம். கேள்விப் பத்திரங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் வேலை விடயங்களை குறிப்பிடுங்கள்.
4. இப்பெறுகை பற்றிய கேகாலை பொது வைத்தியசாலையின் பிரதேச பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

| விடய இலக்கம் | மேலதிக விபரம் | தகைமைகள் அனுபவம் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைக் கட்டணம் | மீளளிக்கப்படாத கேள்வி விண்ணப்பப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| 01 | 2023 - 2024 ஆம் ஆண்டிற்காக புதிய சத்திரி சிகிச்சை கூட கட்டிடத்தின் மத்திய வளிச்சீராக்கி அமைப்பு சேர்விஸ் மற்றும் பராமரிப்பு செய்து நடத்திச் செல்லல் | CIDA (EM4) செல்லுபடியாகும் பதிவு வளிச் சீராக்கி சேவையை நிறைவேற்றுதல் சம்பந்தமாக 03 வருட அனுபவம் இருத்தல். (அவற்றில் 01 வருடம் அரச வைத்தியசாலை சேவை கட்டாயமாகும்) | 37,500.00 | 3,000.00 |
| 02 | 2023 - 2024 ஆண்டிற்காக பிரதான மருந்துக் களஞ்சியத்தின் குளிர் அறை மற்றும் ஜெனரேட்டர் இயந்திர சேவை மற்றும் பராமரிப்பு விடயங்களை நடத்திச் செல்லல் | CIDA (EM5) செல்லுபடியாகும் பதிவு, குளிர் அறை, ஜெனரேட்டர் சேவைகளை நிறைவேற்றுதல் சம்பந்தமாக 02 வருட அனுபவம் இருத்தல். (அவற்றில் அரச வைத்தியசாலை சேவை மேலதிக தகைமையாக கொள்ளப்படும் | 5,000.00 | 3,000.00 |
| 03 | 2023-2024 ஆண்டிற்காக பிரேத அறை குளிர்சாதனம் மற்றும் வளிச் சீராக்கி இயந்திர வளிச்சீராக்கி அமைப்பு சேவை மற்றும் பராமரித்து நடத்திச் செல்லல். | CIDA (EM 4) செல்லுபடியாகும் பதிவு, வளிச்சீராக்கி சேவை நிறைவேற்றல் சம்பந்தமாக 03 வருட அனுபவம் இருத்தல் (அவற்றில் 01 வருடம் அரச வைத்தியசாலை சேவை கட்டாயமாகும்) | 50,000.00 | 3,000.00 |

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**பொது வைத்தியசாலை,**
**கேகாலை.**

## இலங்கை இராணுவம்

# விலைமனுக்கோரல்

## விறகுகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல் - 2024

1. **2024.01.01 ஆந் திகதி முதல் 2024.12.31 ஆந் திகதி** வரையான காலப்பகுதிக்குள் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள பிரதேசங்களுக்கு விறகுகளை வழங்குவதற்காக கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுரவில் அமைந்துள்ள இலங்கை இராணுவ தலைமையகத்தின் பெறுகைக் குழுத் தலைவரினால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | | | |
|---|---|---|---|
| அனுராதபுரம் | பராக்கிரமபுர | இரத்மலானை | கேகாலை |
| திருக்கோணமலை | யாழ்ப்பாணம் | கிளிநொச்சி | புத்தல |
| மாங்குளம் | எம்பிலிபிட்டிய | பூநகரின் | ஹம்பாந்தோட்டை |
| அம்பேபுஸ்ஸ | பலாலி | வவுனியா | கோம்பகஸ்ஹந்தி |
| தியத்தலாவ | யாலபலட்டுபான | கிரன்சி | மன்னார் |
| மிருசுவில் | ஒட்டுச்சுட்டான் | புனானி | ஹிங்குராக்கொடை |
| அம்பாறை | புத்தளம் | வீரவில | துனுக்காய் |
| நாவுல | இரத்தினபுரி | கொக்எலிய | மாதுரு ஓயா |
| முல்லைத்தீவு | கதிர்காமம் | பருத்தித்துறை | |
| இய்யகச்சி | புதுகுடியிருப்பு | வாழைச்சேனை | |

2. மனு ஆவணங்களை வழங்குதல், மனுக்களை சமர்ப்பித்தல், மனு திறக்கும் திகதி மற்றும் நேரம் ஆகியவை பின்வருமாறு மற்றும் மனுக்கள் திறக்கப்படும் சந்தரப்பத்தில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் பங்கேற்க முடியும்.

| | | |
|---|---|---|
| மனு ஆவணங்களை வழங்குவதற்கான ஆரம்பம் | - | 2023.07.20 |
| மனு ஆவணங்களை வழங்குவதற்கான கடைசி திகதி மற்றும் நேரம் | - | 2023.08.28, பி.ப.3.00 வரை |
| மனு சமர்ப்பிப்பின் இறுதி திகதி மற்றும் நேரம் | - | 2023.08.29 மு.ப.10.00 |
| மனு திறக்கும் திகதி, நேரம் மற்றும் இடம் | - | 2023.08.29 மு.ப.10.00<br>இலங்கை இராணுவத் தலைமையகம்,<br>இராணுவத் தலைமையக வாகனத் தரிப்பிடம்,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர,<br>கொழும்பு. |

3. விலைமனு விண்ணப்பப்படிவங்களை பெற்றுக்கொள்வதற்காக ஒவ்வொரு முகாமிற்கும் வேறு வேறாக மீளளிக்கப்படாத **ரூ.2,500.00** பணத்தினை கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவத் தலைமையகத்தின் பணிப்பாளர்-(நிதிக்கு) வைப்பிலிடல் வேண்டும். (காசோலை ஏற்றுக்கொள்ளப்படாது) வைப்பிலிடப்பட்ட பணத்திற்காக வழங்கப்பட்ட ரசீதின் பிரதியை, கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர, இராணுவ தலைமையக வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பகத்தில் சமர்ப்பித்து விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.

4. முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **“விறகுகளை கொள்வனவு செய்வதற்கான விலைமனுக்கோரல் - 2024”** எனக்குறிப்பிட்டு **தலைவர், இராணுவ கொள்முதல் குழு, உபகரணங்கள் பணிப்பாளர் நாயக கிளை, இராணுவத் தலைமையகம், ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு** எனும் முகவரிக்கு பதிவுத்தபால் மூலமாகவோ அல்லது அம்முகவரியில் வைக்கப்பட்டுள்ள மனுப்பெட்டியில் நேரடியாக வருகைத்தந்து இடலாம்.

5. விண்ணப்பதாரர்கள் விலைமனுவுடன் பின்வரும் ஆவணங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

அ. வியாபார பதிவுச் சான்றிதழ் (உறுதிபடுத்தப்பட்ட பிரதி)

ஆ. மீளளிக்கப்படாத கட்டணத்தை வைப்பிலிடப்பட்ட இரசீதின் பிரதி

இ. கடந்த மூன்று ஆண்டுகளுக்கான வருமான வரி கணக்காய்வு அறிக்கைகள்

ஈ. விண்ணப்பதாரர் வைத்திருக்கும் வங்கி கணக்கு தொடர்பான வங்கி அறிக்கை.

உ. வழங்கப்பட்ட சேவையை நிரூபிக்க ஏற்றுக்கொள்ளக்கூடிய சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

ஊ. சொத்துக்கள் மற்றும் நிதிகளின் ஸ்தீரத்தன்மையை உறுதிப்படுத்த மாகாணத்தின் மாவட்ட செயலாளர் / பிரதேச செயலாளரினால் வழங்கப்பட்ட படிவங்களால் (பொது 170) ஒவ்வொரு முகாமுக்குமான **ரூ.200,000.00** க்கு குறையாத சொத்து சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இந்த சான்றிதழ் விலைமனு ஏற்றுக்கொள்ளும் கடைசி திகதிக்கு முன் **30 நாட்களுக்குள்** பெறப்பட்டதாக வேண்டும்.

6. விண்ணப்பதாரரினால் விலைமனு விண்ணப்பங்களை கோரும்போது, அந்த நபர்களின் விபரங்கள் விண்ணப்பிக்கும் இடங்களில் குறிப்பிடப்பட வேண்டும்.

7. உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். எந்தவொரு விலைமனுப்பத்திரத்தையும் ஏற்கும் அல்லது நிராகரிக்கும் அதிகாரம் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவருக்கு உரித்தானது

8. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கை இராணுவத் தலைமையகத்தின் வழங்கல் மற்றும் போக்குவரத்து பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும், மேலும் தொடர்புடைய மனு ஆவணங்களை கீழே உள்ள பந்தி 09 இன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் **2023.07.20** முதல் **2023.08.28** வரை **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00** வரை (வார நாட்களில் இலவசமாக) பரிசோதிக்கலாம்.

9. மேலே குறிப்பிட்டுள்ள முகவரி ஆவது

| | | |
|---|---|---|
| கவனத்திற்கு | : | பணிப்பாளர், வழங்கல் மற்றும் போக்குவரத்து |
| முகவரி | : | இலங்கை இராணுவத் தளபதி,<br>இலங்கை இராணுவத் தலைமையகம்,<br>ஸ்ரீ ஜயவர்தனபுர,<br>கொழும்பு. |
| தொலைபேசி | : | 011-2302568, 011-2302569 |
| மின்னஞ்சல் | : | **dtesandt@army.lk /dtesandt0@gmail.com** |

இராணுவத் தளபதி
**இலங்கை இராணுவ தலைமையகம்**
ஸ்ரீ ஜயவர்தனபுர, கொழும்பு.

## ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப்

# தருஷி 800 மீற்றரில் சாதனையுடன் தங்கம்: ஆடவர் அஞ்சலோட்ட அணியும் முதலிடம்



தாய்லாந்தின் பாங்கொக் நகரில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியின் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் இலங்கையின் 19 வயது வீராங்கனை தருஷி கருணாரத்ன இலங்கை சாதனையுடன் தங்கப்பதக்கம் வென்றார்.

இந்த மெய்வல்லுனர் போட்டியின் கடைசி நாளான நேற்று (16) நடைபெற்ற இந்தப் போட்டியில் தருஷி போட்டித் தூரத்தை 2:00.66 நிமிடத்தில் பூர்த்தி செய்து முதலிடத்தை பிடித்தார்.

இந்தப் போட்டியில் வெண்கலப் பதக்கத்தை இலங்கை மெய்வல்லுனர் அணியின் தலைவி கயந்திகா அபேரத்ன வென்றார். அவர் போட்டித் தூரத்தை 2:03.25 நிமிடங்களில் பூர்த்தி செய்தார். இதன்போது கயந்திகாவின் இலங்கை சாதனையையே தருஷி முறியடித்தார்.

அதேபோன்று 25 ஆண்டுகள் பழமையான ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் சாதனையையும் அவர் முறியடித்தார். 1998 ஆம் ஆண்டு சீனாவின் சங் சியான் போட்டித் தூரத்தை 2:01.16 நிமிடங்களில் பூர்த்தி செய்ததே முன்னதாக சாதனையாக இருந்தது.

இதில் இந்தியாவின் சாந்த போட்டித் தூரத்தை 2:01.58 நிமிடங்களில் பூர்த்தி செய்து வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.

தருஷி கடந்த ஜூன் மாதம் ஆரம்பத்தில் தென் கொரியாவில் நடைபெற்ற 20 வயதுக்கு உட்பட்ட ஆசிய கனிஷ்ட மெய்வல்லுனர் போட்டியின் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப்போட்டியிலும் தங்கப் பதக்கம் வென்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை நேற்று நடைபெற்ற ஆடவருக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியிலும் இலங்கை அணி தங்கப் பதக்கம் வென்றதோடு மகளிருக்கான 400 மீற்றர் அஞ்சாலோட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கத்தை வென்றது.

இதில் ஆடவர் அணி போட்டித் தூரத்தை 3:01.56 நிமிடங்களில் பூர்த்தி செய்து முதலிடத்தை பெற்றதோடு இந்திய அணி இரண்டாவது இடத்தையும் கட்டார் மூன்றாம் இடத்தையும் வென்றது.

தங்கம் வென்ற இலங்கை அணியில் அருண தர்ஷன, ராஜித ராஜகருணா, தேவகே பபசர மற்றும் காலிங்க ஹேவகே ஆகியோர் இடம்பிடித்திருந்தனர்.

இதன்போது மகளிர் 400 மீற்றர் அஞ்லோட்டப் போட்டியை 3:15.41 நிமிடங்களில் நிறைவு செய்தே இலங்கை வெள்ளிப் பதக்கத்தை வென்றது. இது இலங்கை சாதனையாகவும் இருந்தது.

முன்னதாக ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டியில் கடந்த சனிக்கிழமை (15) நடைபெற்ற 400 மீற்றர் கலப்பு அஞ்சலோட்டப் போட்டியில் இலங்கை அணி வெள்ளிப்பதக்கம் வென்றது.

25ஆவது ஆசிய மெய்வல்லுனர் சம்பியன்சிப் போட்டி நேற்றுடன் நிறைவடைந்த நிலையில் இலங்கை மூன்று தங்கப்பதக்கங்களுடன் மொத்தம் எட்டு பதக்கங்களை வென்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் இரு வெள்ளி மற்றும் மூன்று வெண்கலப் பதக்கங்களும் அடங்கும்.

# தொடர்ந்து தலைவராக செயற்பட திமுத் முடிவு



தற்போதைய 2023–25 உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவம் வரை இலங்கை டெஸ்ட் அணித் தலைவராக செயற்பட திமுத் கருணாரத்ன தீர்மானித்துள்ளார். இலங்கை தேர்வுக் குழுவின் வேண்டுகோளை அடுத்து அணித் தலைமை பதவியில் இருந்து விலகும் தனது முடிவை அவர் கைவிட்டுள்ளார். நியூசிலாந்துக்கு எதிராக அண்மையில் நடந்த டெஸ்ட் தொடரை முழுமையாகத் தோற்றதை அடுத்து கடந்த ஏப்ரலில் நடந்த அயர்லாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரின் பின் தலைமை பதவியில் இருந்து விலகுவதாக கருணாரத்ன முன்னர் அறிவித்திருந்தார்.

“அடுத்த உலக டெஸ்ட் சம்பியன்சிப் பருவத்திற்காக அவரை நாம் நியமித்தோம். அவர் முன்னிலையில் இருந்து அணியை வழிநடத்துவார் என்பதோடு தற்போதைய பருவத்திலும் அவர் தொடர்ந்து செயற்படுவது சிறந்ததாக அமையும்” என்று தேர்வுக் குழு தலைவர் பிரமோத்ய விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

கருணாரத்னவின் இராஜினாமா ஏற்கப்படாத நிலையில் அந்த முடிவை மீள்பரிசீலனை செய்ய தேர்வாளர்கள் கேட்டனர். 2019இல் அணி குழப்பமான நிலையில் இருந்தபோது தலைமை பதவி வழங்கப்பட்ட நிலையில் கருணாரத்ன அணிக்குள் ஸ்திர நிலையை ஏற்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்டர் மியாமியுடன் இணைந்தார் மெஸ்ஸி




ஆர்ஜன்டீன கால்பந்து நட்சத்திரம் லியோனல் மெஸ்ஸி 2025ஆம் ஆண்டு வரை அமெரிக்காவின் இன்டர் மியாமி அணியுடன் ஒப்பந்தமாகியுள்ளார்.

7 முறை பலொன் டியோர் விருதைப் பெற்ற அவர் இன்னும் சில நாட்களில் அந்த அணியுடன் சேர்ந்து விளையாடவுள்ளார். “அமெரிக்காவின் கால்பந்து விளையாட்டுக்குப் பங்களிக்க நான் ஆவலுடன் உள்ளேன்” என்றார் மெஸ்ஸி.

மெஸ்ஸி இன்டர் மியாமி அணிக்காக அவரது முதல் ஆட்டத்தை வரும் ஜூலை 22ஆம் திகதி விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

“உலகின் சிறந்த கால்பந்து விளையாட்டாளர்களை அமெரிக்காவுக்குக் கொண்டுவருவது எனது நீண்ட நாள் கனவாக இருந்தது. மெஸ்ஸியைப் போன்ற உன்னத விளையாட்டாளர் இன்டர் மியாமி அணியில் சேர்ந்துள்ளதை நினைக்கும்போது பெருமையாக உள்ளது,” என அந்த அணியின் இணை உரிமையாளர் டேவிட் பெக்கம் தெரிவித்தார்.

இந்நிலையில் இன்டர் மியாமி அணியின் வீரராக மெஸ்ஸி நேற்று (16) அதிகாரபூர்வமாக அறிமுகம் செய்து வைக்கப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

# நிந்தவூர் எமரெல்ட் அணி வெற்றி



மாளிகைக்காடு குறூப் நிருபர்

நிந்தவூர் எமரெல்ட் விளையாட்டுக் கழகத்திற்கும் புளூமௌன்டன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையிலான 20 ஓவர்கள் மட்டுப்படுத்தப்பட்ட சிநேகபூர்வ கிரிக்கெட் போட்டியில் எமரெல்ட் அணி 12 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

நிந்தவூர் பொது விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இந்த போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய எமரெல்ட் அணி 20 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்து 167 ஓட்டங்களைப் பெற்றது. பதிலெடுத்தாடிய புளூமௌன்டன் 155 ஓட்டங்களுக்கு சுருண்டது.

# தனஞ்ச, மத்தியூஸின் இணைப்பாட்டத்தின் உதவியோடு தடுமாற்றத்தின் பின்னர் இலங்கை ஸ்திரமான நிலையில்



பாகிஸ்தானுக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸை ஆடும் இலங்கை அணி முதல்நாள் ஆட்டநேர முடிவின்போது தடுமாற்றத்தின் பின் ஸ்திரமான நிலையை எட்டியது.

காலி சர்வதேச அரங்கில் நேற்று (16) ஆரம்பமான இந்த டெஸ்ட் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்த இலங்கை அணி ஷஹின் ஷா அப்ரிடியின் பந்துக்கு ஆரம்பத்திலேயே தடுமாற்றம் கண்டது.

ஆறு ஓட்டங்களுக்கு முதல் விக்கெட்டை இழந்ததோடு 54 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுகளை பறிகொடுத்து தடுமாறியது. இதன்போது ஓர் ஆண்டுக்கு பின்னர் பாக். டெஸ்ட் அணிக்கு திரும்பிய அப்ரிடி நிஷான் மதுஷ்கவை 4 ஓட்டங்களுடன் வெளியேற்றியதன் மூலம் டெஸ்ட் போட்டிகளில் 100 ஆவது விக்கெட்டை பூர்த்தி செய்தார்.

தொடர்ந்து திமுத் கருணாரத்ன (29) மற்றும் குசல் மெண்டிஸ் (12) ஆகியோரின் விக்கெட்டுகளையும் சாய்த்தார்.

தினேஷ் சந்திமால் வந்த வேகத்தில் ஒரு ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் ஐந்தாவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த அஞ்சலோ மத்தியூஸ் மற்றும் தனஞ்சய டி சில்வா 131 ஓட்ட இணைப்பாட்டத்தை பெற்று அணியை ஸ்திரமான நிலைக்கு கொண்டுவந்தனர்.

இதன்போது சிறப்பாக ஆடிவந்த மத்தியூஸ் 109 பந்துகளில் 9 பௌண்டரிகளுடன் 64 ஓட்டங்களை பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார்.

எனினும் முதல் நாள் ஆட்ட நேரம் முடியும் வரை அட்டமிழக்காது களத்தில் இருந்த தனஞ்சய டி சில்வா தனது 10ஆவது டெஸ்ட் சதத்தை நெருங்கிய நிலையில் 157 பந்துகளுக்கு முகம்கொடுத்து 10 பௌண்டரிகள் மற்றும் 03 சிக்ஸர்களுடன் 94 ஓட்டங்களை பெற்று களத்தில் உள்ளார்.

எனினும் நிதானமாக ஆடிவந்த சதீர சமரவிக்ரம நேற்றைய தினத்தில் கடைசி விக்கெட்டாக 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

இதன்போது அவர் தனஞ்சய டி சில்வாவுடன் இணைந்து ஆறாவது விக்கெட்டுக்காக 57 ஓட்டங்களை பகிர்ந்துகொண்டார்.

முதல் நாள் ஆட்ட நேர முடிவின்போது இலங்கை அணி 65.4 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 242 ஓட்டங்களை பெற்றுள்ளது. முதல் நாள் ஆட்டத்தின் கணிசமான நேரம் மழையால் தடைப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# தென் கொரியாவில் வெள்ளத்தில் மூழ்கிய சுரங்கப்பதையில் இருந்து 9 சடலங்கள் மீட்பு



தென் கொரியாவின் சியோங்கியு நகருக்கு அருகில் உள்ள சுரங்கப்பாதையில் வெள்ள நீர் நிரம்பி வாகனங்கள் மூழ்கிய நிலையில் அங்கிருந்து ஒன்பது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சில நாட்களாக நீடித்த கடும் மழையை அடுத்தே சுரங்கப் பாதையில் தப்பிக்க முடியாமல் வாகனங்கள் மற்றும் பயணிகள் வெள்ள நீரில் சிக்கியுள்ளனர்.

இந்த வெள்ளம் மற்றும் நிலச்சரிவினால் குறைந்தது 35 பேர் உயிரிழந்திருப்பதோடு நாட்டின் பெரும் பகுதிகளில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. பத்துக்கும் அதிகமானவர்கள் காணாமல் போயுள்ளனர். இந்நிலையில் 658 மீற்றர் நீளம் கொண்ட சுரங்கப் பாதையில் 15 வாகனங்கள் மூழ்கி இருக்கலாம் என்று கருதப்படும் நிலையில் தொடர்ந்து எத்தனை பேர் சிக்கி உள்ளனர் என்பது தெரியாதுள்ளது.

இதில் பஸ் ஒன்றுக்குள் இருந்தே பல சடலங்களும் மீட்கப்பட்டுள்ளன. கடந்த சனிக்கிழமை (15) ஒன்பது பேர் உயிருடன் மீட்கப்பட்டனர். இதில் மலைப் பிரதேசமான வடக்கு கியோஹ்சான் பிராந்தியத்தில் நிலச்சரிவினால் பல வீடுகளும் அடித்துச் செல்லப்பட்டதன் காரணமாக பல உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன.

தென் கொரியாவில் வருடத்திற்கு 1,000 தொடக்கம் 1,800 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகும் நிலையில் கடந்த சனிக்கிழமை மாத்திரம் அங்கு சுமார் 300 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவானதாக அந்நாட்டு காலநிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

## சர்வதேச செய்திகள்

# உலகின் பல பகுதிகளிலும் கடும் வெப்ப அலை பாதிப்பு




அமெரிக்கா, ஐரோப்பா மற்றும் ஆசியாவின் பெரும் பகுதிகளில் சாதனை வெப்பம் பதிவான நிலையில் உலகெங்கும் மில்லியன் கணக்கான மக்கள் அபாயகரமான உச்ச வெப்பத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்காவின் கலிபோர்னியா தொடக்கம் டெக்சாஸ் வரை நீடிக்கும் வெப்ப அலை உச்சத்தை தொடும் என தேசிய காலநிலை சேவை எதிர்வுகூறியுள்ளது.

இதில் அதிகம் பாதிக்கப்பட்ட அரிசோனாவில் சுட்டெரிக்கும் வெப்பநிலையால் மக்கள் அவதியுற்று வருகின்றனர். அந்த மாநில தலைநகரான பியோனிக்ஸில் தொடர்ந்து 15ஆவது நாளாகவும் கடந்த வெள்ளியன்று (14) 43 பாகை செல்சியஸ் வெப்பம் நீடித்தது.

வார இறுதியில் எதிர்வுகூறப்பட்ட உச்ச வெப்பநிலையை இத்தாலி எதிர்கொண்டிருக்கும் நிலையில் அங்கு ரோம், பொலொக்னா மற்றும் பிளோரன்ஸ் உட்பட 16 நகரங்களில் சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரோமில் இன்று திங்கட்கிழமை வெப்பநிலை 40 பாகை செல்சியஸ் வரை உயரக்கூடும் என்றும் அது செவ்வாயன்று 43 பாகையாக இருக்கும் என்றும் காலநிலை அவதான நிலையம் குறிப்பிட்டுள்ளது. சிசிலி மற்றும் சார்னியா தீவுகளில் வெப்பநிலை 48 பாகை உயரக் கூடும் என்று ஐரோப்பிய விண்வெளி நிலையம் எச்சரித்துள்ளது. ‘இது ஐரோப்பாவில் இதுவரை பதிவான அதிக வெப்பநிலையாக இருக்கு வாய்ப்பு உள்ளது’ என்றும் அது குறிப்பிட்டுள்ளது.

பிரான்ஸ், ஜெர்மனி, ஸ்பெயின் மற்றும் போலந்து நாடுகளின் பிராந்தியங்களிலும் வெப்பம் வாட்டுகிறது.

கிழக்கு ஜப்பானின் பகுதிகளிலும் வெப்பநிலை இன்றாகும்போது 38 தொடக்கம் 39 பாகை செல்சியஸை தொடும் என்று காலநிலை அவதான நிலையம் எச்சரித்துள்ளது.

# நஷ்டத்தில் 'ட்விட்டர்'



ட்விட்டரில் விளம்பரங்கள் பாதியாக குறைந்ததால் நிறுவனம் இன்னும் நஷ்டத்திலேயே இயங்கிக் கொண்டிருப்பதாக அதன் உரிமையாளர் இலொன் மஸ்க் தெரிவித்துள்ளார். ட்விட்டரில் வியாபாரம் குறித்து ஆலோசனை வழங்குவதாக வெளியான ட்விட் ஒன்றுக்கு பதிலளித்த அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

“ட்விட்டருக்கான விளம்பரங்கள் 50 வீதம் குறைந்ததால் நாங்கள் இன்னும் நஷ்டத்தில் தான் இயங்கிக் கொண்டிருக்கிறோம். அதேபோன்று ட்விட்டருக்கு அதிக அளவிலான கடன் சுமை இருக்கிறது. வியாபாரம் சார்ந்த மற்ற விடயங்களில் கவனம் செலுத்துவதற்கு முன்பாக ட்விட்டரை லாபப் பாதைக்கு கொண்டுவர வேண்டும்” எனப் பதிவிட்டுள்ளார்.

ட்விட்டர் நிறுவனத்தை 44 பில்லியன் டொலருக்கு வாங்கியது முதல் மஸ்க் பல்வேறு விதமான மாற்றங்களை அந்நிறுவனத்தில் கொண்டு வந்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஜுலை மாதம் 17ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.